**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
> Criminal Cases
> Civil Litigation
> Family
> Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

# ORU PAPER

FREE

PAPER - 07 ◆ ISSUE - 144 ◆ 22 FRIDAY APRIL 2011

**PRIVATE TUITION**
By Experienced Tutor
MATHS & SCIENCE
Up to GCSE level
&
11+ PREPARATION
Within M25
Mr N Rajesh BSc [Hons], ACP
Call : 07886688821

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




Photo: Kirukkan Ananthan

**RAM** SALES LETTINGS MANAGEMENT MORTGAGES
!! LANDLORDS!!
ARE YOU LOOKING FOR A PROFESSIONAL AGENT WHO WOULD BE ABLE TO ASSIST YOU TO **SELL OR RENT** YOUR PROPERTY?
GIVE US A TRY...
LET US MAKE YOU FEEL COMPLETELY RELAXED...
"WE'RE LOOKING FOR ALL SORTS OR PROPERTIES FOR OUR WAITING PROFESSIONAL TENANTS"
Give us a call today on...
020 8550 8788

**AKILAN ENTERPRISES**
உங்களுக்குத் வைபவங்களுக்குத் தேவையான
• திருமண மாலை
• ஆண்டாள் மாலை
• மல்லிகைப்பூ சரம்
உங்கள் அனைத்து விசேஷங்களுக்கும் Video & Photo Digital முறையில் சிறந்த முறையில் எடுத்து தரப்படும்
போன்றவற்றை பெற்றுக்கொள்ள உடன் அழையுங்கள்...
274 High Street North, Manor Park, London E12 6SA
Tel : 020 8548 0033 / Mob: 079 5765 3005

June 2011 ஆண்டுடன் வதிவிடம் (Legacy) தொடர்பான திட்டம் முடிவுக்கு வருகிறது.
ஆகவே March 2007க்கு முன் அகதி அந்தஸ்து கோரி, நிராகரிக்கப்பட்டோருக்கு இலவச ஆலோசனை விண்ணப்பம் செய்து நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும்.
1) 4 Passport size photos
2) Proof of Address 3) Home office Details with Family details ஆகிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
Opening Days : Monday to Saturday
11-13, South Road, Southall UB1 1SU
07870 763 570 / 020 8574 0666
VINCENT SOLICITORS

திருமண, பிறந்தநாள் வைபவங்களுக்கு....
**Sarasas Restarurant**
(Sri Lankan & South Indian)
Specialist in Dosa
Lunch Offer Starts From £3.25
(Monday - Thursday 12.00 - 15.30)
We do out door Catering for wedding & other parties South Indian, North Indian, Srilankan, Tandoori, Chettinad, Chinese
Tel: 020 8561 8188
630-634 Uxbridge Rd, Hayes, Middlesex UB4 0RY, UK
web:www.sarasasrestaurant.com

இனியும் குழந்தைப் பாக்கியம் இல்லை என்ற கவலையை விடுங்கள்!
20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களுடன் தொடர்புகொண்டு உங்கள் கவலைகளை இன்றே தீர்த்திடுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

அட்சய திதியை முன்னிட்டு அனைத்து நகைகளும் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.
Thinesh
Jewellers & Textiles
276 Lewisham High Street, Lewisham, London SE13 6JZ | Tel : 020 8613 9569
www.thinesh-jt.com
வாகன தரிப்பிட வசதி உண்டு.

T.A.CROYDON AUTOS MOT
Our Services:
- MOT Testing
- Servicing
- Repairs
- Exhausts
- Body Works
- Brakes
- MOTs Repairs
- Tuning
- Audio Fitting
- AC Regasing
- Tyres
- Battery
Lowest Prices
Free Battery Testing
Free Wheel Alignment & Balancing
Contact: Mr.Theepan
Tel: 020 8665 0042
Mob: 0795 669 9511
07961 712 596
91-93 Canterbury Road, Croydon, CRO 3HH

SAME DAY **UK VISA** SERVICES
Indefinite Leave to Remain(ILR)
One Day Visa Service From: £299
OISC Registered Immigration Advisor
K. KANDEL
Contact Us for more information
TEL: 0208 572 6386
MOB: 07772 641 180
www.ukvisaexpert.com
NO WIN NO FEE
KAMAL KANDEL OISC N:F200700150
www.ukvisaexpert.com
4 Hazel House, Pownall Road, TW3 1YN

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**

- Maths & English Classes for 4- 16 years
- Challenging Individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports



LEARNA

• Individualised • Interactive • Inspiring

Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

**FAMILY LAW**
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

airfare direct

Call us on
020 8090 5503
www.airfare-direct.com

GULF AIR
KUWAIT AIRWAYS
JET AIRWAYS

Srilankan Airlines

Colombo......... £350
Chennai.......... £270
Kochi.............. £270
Singapore....... £310
Bangkok.......... £310
Far East.......... £310
Tokyo.............. £310
Hong Kong..... £310

Other Airline's Special Fares to Colombo
Oman Air £210 Jet Airways £190
Gulf Air £190 Kuwait Airways £190
Special package for Umra & Colombo on Saudi Airlines



Dubai 4 Nights 5 days From £495
Thailand Hua Hin 7 Nights From £709
Goa Beach 8 days From £759
NewYork 4 Nights From £559
Morocco 7 Nights From £410
caribbean cruise 7 Nights From £699

VISA VISA * All Fares exclude Tax
All major cards accepted

ATOL PROTECTED 6009
IATA

t:01727 736 961
info@airfare-direct.com
5 Metro Centre,Ronsons way,St Albans,Hertfordshire,AL4 9QT

Amazing Prices !!!

உலக நாடுகள் அனைத்திற்குமான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் தமிழில் உரையாடிப் பெற்றிட இன்றே அழையுங்கள்.
020 854808090

Fr £350.00 +Taxes
Fr £465.00 +Taxes
Fr £315.00 +Taxes
Fr £255.00 +Taxes
Fr £215.00 +Taxes
Fr £200.00 +Taxes
Fr £200.00 +Taxes
Fr £270.00 +Taxes

Many more destinations & Airlines Available

Fax : 0208 548 8090
Email : info@travelviewuk.com
56 Plashet Road
Lodon E13 0RQ

CALL US NOW !
020 8548 8090

For your peace of mind, we are fully ATOL protected.

"Our Objective is to make family holiday tours more comfortable, more exciting and most memorable"

Travel View
www.travelviewuk.com


a royal rendezvous with nature
It's a spontaneous embrace of life

Opening Hours
Monday—Friday 9.30am—8.00pm
Saturday—10.00am—3.00pm

Established since 2000

மங்கையர் மனம் கவரும் அசல் 22 கரட்
ஆபரணங்களின் நகை மாளிகை

SRI SOOBANA JEWELLERS
PAWNBROKER PAWNBROKER



அட்சய திதியை முன்னிட்டு அனைத்து நகைகளும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் அனைத்து தங்க நகைகளையும் நம்பிக்கை உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்களிடம் அனைத்து ரக தங்க நகைகளை உறுதியான வேலைப்பாட்டுடன் உங்கள் எண்ணம் போல் பெற்றுக்கொள்ளலாம்...

பழைய நகைகளுக்கு அதிக விலை பெற்றுக் கொள்ள நாடுங்கள். அதுமட்டுமல்ல பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

அனைத்து வகையான தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.

020 8900 9009
OPENING HOURS : 7 DAYS A WEEK - 9.30 AM - 7.00 PM
www.srisooban.jewellers.co.uk

123 EALING ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 4BP



### வாழ்த்துக்கள் 1

கடந்த இரண்டு இதழ்களை வாசிக்க தவறிவிட்டேன். வீட்டில் அவை காத்திருக்குமென நம்புகிறேன். வரப்போகும் இதழ்களில், எனது பயண அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலாமென ஆசைப்படுகிறேன். பிறக்கப்போகும் புதுவருடம் தமிழ் மக்களையும், ஒரு பேப்பர் வாசகர்களையும், அயராது உழைக்கும் ஒரு பேப்பர் காரன்களையும், ஒரு பேப்பர் காரிகளையும் நல்ல சுகத்துடன் வாழவைக்க இறைஞ்சுகின்றேன்.

*- உமா மகாலிங்கம்*

### கிறிக்கற்றில் வென்றதிற்கும் அறிக்கையா?

நாடு கடந்த அரசாங்கத்தினர் அறிக்கை விடுகிறதில்லையே ஒரு உலக சாதனையை முறியடிக்கிறதாய் கங்கணம் கட்டியிருக்கிறார்களோ என்னவோ? இந்தியா உலக கிண்ணத்தை வென்றதற்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அறிக்கை விடுறதுக்கா விசயமில்லை இளவரசர் வில்லியம்சின் திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை விடலாம்.

*- அபூர்வா*

### சோனியா பற்றிய தகவல்களுக்கு- நன்றி

சோனியாவை நம்பலாமா எனமிகவும் நகச் சுவையாக ஆனால் சரியான தகவல்களுடன் வேல் தர்மாவால் எழுதப்பட்ட கட்டுரை நாசூக்காக விடயங்களை சொல்வதாக இருந்தது. இத்தகைய கட்டுரைகளை வரவேற்கிறேன். வேல் தர்மாவிற்கு நன்றி.

*- வித்தியா*

### முள்ளிவாய்காலை நினைவு கூருவதிலும் குழப்பம்?

லண்டனில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவுகூரும் நிகழ்வுகளை நடாத்துவதிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குழுவினர் போட்டி போட்டுக் கொள்வதாக செய்தி அடிபடுகிறது. இந்திய அரசாங்கத்திற்கு காவடி தூக்கிற ஆட்களும், இந்தியாவின் நல்லாசிகளுடன் நடந்த அவலங்களினை நினைவு கூரப்போகிறார்களாம். ஏட்டிக்கு போட்டியாய் கோயில் தொடங்கிற இனம் இதிலை மட்டும் குறை விடுமோ?

*- முத்தப்பா*

### விலை போயிட்டுதோ விளக்கு?

கடந்த வருடம் அம்சா நானா தூதரகத்தில் நடாத்திய தீபாவளி கொண்டாட்டத்திற்கு விளக்கு தொலைக்காட்சியின் அதிபர் சிறப்பு விருந்தினராய் கலந்து கொண்டது வெப்சைட்டுகளில் படங்களுடன் வெளிவந்திருந்து. இப்ப என்னடா என்றால், சிறிலங்கா அரசாங்கத்தினை நக்கித் திரியும் ராசேசக்கா, நகுலேந்திரன், கெங்கா போன்ற அஞ்சாம் படையினர் அடிக்கடி ரீவியில் தலை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தன்னுடைய முன்னைய சகாக்களை உள்ளே விட்டத்தையிட்டு புஞ்சி அப்துல்லா புழுகமாய் இருக்கிறாராம்.

*- குமார்*

### இதோடு நித்திரைக்கு போய்விடக் கூடாது!

இப்போது சர்வதேசம் ஏதோ கொஞ்சம் கண்திறக்கிற மாதிரி கிடக்குது. நாங்கள் இன்னமும் செய்யிறதுக்கு கனக்க விசயம் இருக்குது அதை விட்டுட்டு, ஏதோ செய்யப் போகிறான்கள் எண்டுட்டு நாங்கள் கோயில் திருவிழா பார்க்க சிறிலங்காவிற்கு ரிக்கற் புக் பண்ணக் கூடாது. இப்ப நித்திரை கொண்டம் என்றால், இனி கடவுளாலை கூட எங்களை காப்பாத்தேலாது.

*- சிவதாரிணி*

### இந்தியாவும் இறையாண்மையும்

போரை நிறுத்து என்று கேட்ட போது இறையாண்மையுள்ள இன்னொரு தேசத்தினுள் இந்தியா தலையிடாது என்றார்கள். பல லட்சம் மக்களைக் கொன்றொழித்த சிங்கள பௌத்த பயங்கரவாதம் இப்போது அம்மணமாகியிருக்கிறது. காந்தி தேசமோ தனது இறையாண்மையை ராஜபட்சேவின் கோவணத்துக்குள் தேடிக் கொண்டிருக்கிறது.

*- எழிலன்*

### தமிழ் பாடசாலைக்குள் பொலீஸ்.

தமிழ் பாடசாலைக்குள் நடந்த அதிகார மோதலில் பொலீஸ் அழைக்கப்பட்ட சம்பவம் Sutton Robinhood பாடசாலையில் நடைபெற்றுள்ளது. மூன்று ஆசிரியைகளை பாடசாலைக்குள் வரவிடாமல் கதவை ஒரு குழு பூட்ட, அவர்கள் சில பெற்றோர்களுடன் சேர்ந்து வெளியே ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள். இந்த நிலையில் மறு குழு பொலீசை அழைத்துள்ளது. மூன்று வாகனங்களில் வந்த பொலீசார் ஆசிரியைகளையும் மற்றவர்களையும் கலைந்து போக செய்துள்ளார்கள். தொடங்கி பத்து மாதங்கள் கடந்த இந்த பாடசாலையில் அடுத்தடுத்து தெரிவான இருதலைவர்கள் பதவி விலகி உள்ளார்கள். இத்தனைக்கும் இந்த பாடசாலை Sutton தமிழ் பாடசாலையிலிருந்து பிரிந்து வந்த ஒரு சிலரால் பக்கத்தில் போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆகும்.பிள் ளைகளுக்கு தமிழ் பண்பாட்டை சொல்லி கொடுக்க வேண்டிய ஆசிரியர்கள், நிர்வாகிகள் தமிழ் பாடசாலைக்குள், தங்களுக்குள் அடிபடுகிறார்கள். புலம் பெயர்ந்தும் தமிழனின் இந்த பண்பாடு, போட்டி, சண்டை, பொறாமை, அதிகாரப் போட்டி எப்பொழுது மாறப் போகிறது? கேவலம்தான்!

*- திருமதி. மனோகரி நடராஜன்.*

### மண்வாசனை வீசுகிறது.

பா.வை.ஜெயபாலனுடைய ஊரின் வாசம் ஊர் எண்ணத்தை வீசித் தருவதில் வெற்றி காண்கின்றது. அம்மம்மா சிறப்பான தொடர். பணி தொடரட்டும். நன்றி.

*- சு.சிறீஸ்கந்தராஜா.*

### வாழ்த்தக்கள் 2

இந்த நாட்டின் அரசகுமாரனுக்கு விரைவில் திருமணம் நடக்க இருக்கிறதே. இங்கு இருக்கிற தமிழர்கள் சார்பில் அவருக்கு வாழ்த்துச்சொல்ல வேண்டியது அவசியம். ஒரு பேப்பர் அதைச் செய்யா விட்டாலும் பரவாயில்லை இங்கு வாழும் எத்தனையோ தமிழ் மக்களின் சார்பில் நான் சீரோடும் சிறப்போடும் வாழ எமது வாழ்த்துக்கள்

*- ஒரு தமிழன்*

### நீயா? நானா?

மக்களவைக்காரர் மே 18 ஐ போர்க்குற்ற நாள் என்று பிரகடனப்படுத்தினார்கள். நாடு கடந்த தமிழீழ அரசுக்காரருக்கு மே 18 துக்க நாளாம்.

மே 18 தமிழ் இனப்படுகொலை நாள் என அறிவிப்பதற்கு இந்த தலைமைகளின் கொள்கை, கோட்பாட்டில் இடமில்லைப் போலும்.

*- அகூதா*

### தூக்கில போடுங்கப்பா...

முள்ளிவாய்காலில் இறுதிநாட்களில் 40000 ஆயிரம் மக்கள் கொல்லபட்டு இருக்கலாம் என்று ஜக்கிய நாட்டு அறிக்கை கூறுகிறது, போர்நிறுத்தம் வந்து, இலங்கையில் அமைதி வந்து விட்டது என்று பொய் சொல்லி உன்மையை அறியமுடியாது செய்து, தனது மானில மக்களுக்கு, உண்மையை அறியும் சுதந்திரத்தை இல்லாது செய்த, தமிழக அரசு நிர்வாகத்தின் முதன்மையான முதல்வரை பிடித்து தூக்கில் போட வேண்டும்.

*- சித்தன்*

## சர்வதேசமும் கத்தரிக்காயும்.....

### நெடுக்கால போவான் *(யாழில்)*

சிறீலங்கா இராணுவம் செய்த அட்டூழியங்கள் கண் முன்னால் நடந்திருக்க.. ஆதாரங்கள் இருக்க.. அதை நிராகரித்துப் பேச கோத்தா போன்றவர்களை அணுகும் ஊடகங்கள்.. விடுதலைப் புலிகள் சார்ந்த குற்றச்சாட்டுக்களை மறுதலிக்க உண்மைகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளிப்பதில்லை. அது ஏன்.?

வன்னி இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு இடங்களை நோக்கி பாதுகாப்புத் தேடி வரத் தொடங்கினர். அதன் பின்னர்.. ஐநா. செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் இருப்பை தமது பாதுகாப்புக் கருதி கோரினர் வன்னி மக்கள். கிளிநொச்சியில் ஒரு ஆர்ப்பாட்டத்தையே ஐநா வெளியேற்றத்தை தடுக்க நடத்தினர். ஆனால் ஐநா அதற்கு செவிசாய்க்கவில்லை. சிறீலங்கா படைகளுக்கு வழி சமைத்துக் கொடுத்து விட்டு வவுனியாவில் போய் பதுங்கிக் கொண்டது.

இப்படி எல்லோரும் கைவிட்ட நிலையில் தான் மக்கள் விடுதலைப் புலிகளோடு அவர்கள் தம்மை பாதுகாப்பார்கள் என்று போயினர். இதில் விடுதலைப்புலிகள் மக்களை மனிதக் கேடயமாக பாவித்ததாக சொல்பவர்கள்.. ஏன் மக்கள் வெளியேற வேண்டாம் என்று கேட்ட போது அதனை ஏற்று சிறீலங்கா அரசை நிற்பந்தித்துத்து ஐ நா கண்காணிப்பின் கீழ் ஒரு பாதுகாப்பு வலயத்தை நிறுவி இருக்கவில்லை. கிளிநொச்சியை.. முல்லைதீவு நகரை கொண்ட இரண்டு பாதுகாப்பு வலயங்களை ஐநா மற்றும் செஞ்சிலுவைச் சங்க ஆதரவோடு மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நிறை வேற்றி இருந்தால் மக்களை புலிகள் மனிதக் கேடயமாக பாவித்திருக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்காதே..??!

ஏன் அதை செய்யவில்லை..??! சிறீலங்கா அரசு கேட்டதற்காக ஏன் வெளியேறிப் போயினர். தங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை ஏன் அப்போது சிறீலங்கா ஏற்க நிற்பந்திக்கவில்லை.??!

விடுதலைப்புலிகள் தம்மை சுட்டதாக சில மக்கள் இராணுவத்திடம் சொல்லி இருக்கலாம். அல்லது அப்படிச் சொன்னால் உங்கள் குடும்பத்தினரை விடுவிப்போம் என்று இராணுவம் மக்களுக்கு சொல்லி இருக்கலாம். இதேபோன்ற காட்சிகள் இந்திய இராணுவம் ஈழ மண்ணை ஆக்கிரமித்த போதும் நிகழ்ந்தது. இந்திய இராணுவத்தின் தொல்லையில் இருந்து தப்ப விடுதலைப்புலிகள் சுடுகிறார்கள்.. பதுங்குகிறார்கள் என்று பேட்டி கொடுத்த யாழ்ப்பாண மக்களை இப்பவும் நினைவு கூற முடிகிறது.

இராணுவ நிற்பந்தங்களின் கீழ் மக்கள் சொல்பவை எப்படி நியாயமான கருத்துக்களாக ஆதாரம் சார்ந்தவையாக இருக்க முடியும்..???!

விடுதலைப்புலிகள் வைத்தியசாலைகளை பாவிக்கின்றனர் என்று முன்னர் கூறினார்கள். இப்போ சொல்கிறார்கள் அப்படி அவர்கள் எதனையும் பாவிக்கவில்லை என்று.

நாளை சொல்வார்கள் விடுதலைப்புலிகள் மக்களை பிடிச்சு வைச்சிருக்கேல்ல.. மக்கள் பாதுகாப்புத் தேடி போன இடத்தில் தாக்கப்பட்டார்கள் என்று.

உண்மையில் விடுதலைப்புலிகளை ஆதரித்து நின்ற மக்களை இராணுவ இலக்காகும் வண்ணம் அவர்களை செல் அடித்து விரட்டிச் சென்றதும் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான வலயத்தை அடைக்கலம் தேட செய்து கொடுக்காததும் சிங்கள இராணுவத்தினதும்.. சர்வதேசத்தினதும் பெரும் குற்றமாகும். அதை மறைக்க விடுதலைப்புலிகள் மக்களை மனிதக் கேடயமாக பாவித்தனர் என்று கதை அளக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் மக்களை மனிதக் கேடயமாக பாவித்திருப்பின் அவர்கள் முள்ளிவாய்க்காலுக்குள் ஒதுங்க வேண்டிய அவசியமில்லை. மன்னாரில் வைத்தே அதை செய்திருக்க முடியும். சிங்கள இராணுவ முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி இருக்க முடியும்..??! அல்லது கிளிநொச்சியில் வைத்து அதை செய்திருக்க முடியும்..??! ஏன் முள்ளிவாய்க்கால் வரை போக வேண்டும்..! மக்களுக்கு சர்வதேச பாதுகாப்புடனான ஒரு வெளியேற்றத்தை விரும்பியே அவர்கள் அப்படிச் செய்துள்ளனர்.

யாழ்ப்பாண சிறீலங்கா இராணுவ முன்னகர்வின் போது யாழ்ப்பாண நகரை விட்டு வெளியேற கேட்ட விடுதலைப்புலிகள் தென்மராட்சியில் வைத்து மக்களை அப்படிக் கோரவில்லை. விரும்பிய மக்களை வன்னிக்குள் நகர்த்தி விட்டனர்.

(தொடர்ச்சி 25ம் பக்கம்)



ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, APRIL 22, 2011, ISSUE 144

## நம்பிக்கை தரும் ஒரு சர்வதேச நகர்வு!

இலங்கைத் தீவில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்களின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. ஈழத்தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் பற்றி, இதுவரை காலமும சில மனிதவுரிமை அமைப்புகள் மாத்திரமே பேசி வந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து வெளிப்பட்டுள்ள கரிசனம், சர்வதேச கவனத்தை இலங்கைத்தீவின் மீது விழுத்தியுள்ளது. அதன் மூலம் அங்கு பாரியளவில் மானிடத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் நடைபெற்றதனை உலகம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அடுத்தது என்ன? போர்க்குற்ற விசாரணைகளில் மகிந்த பரிவாரம் சிக்குமா? தமிழ் மக்களின் இழந்து போன அரசியல் உரிமைகளை இது மீட்டுத்தருமா? அவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துமா? என்பது போன்ற கேள்விகள் தமிழ் மக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றன. இருப்பினும், முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு பின்னர், சோர்ந்து போய் முடங்கிக்கிடந்தவர்களுக்கு இந்நகர்வு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

பெரும் மனிதப் பேரவலம் ஏற்பட்டபோது சர்வதேசம் காட்டிய மெத்தனம், தமிழ் மக்களை உலகில் கைவிடப்பட்ட மக்களாக எண்ண வைத்தது. அதனால் ஏற்பட்ட உளவியல் தாக்கத்தினையும், தோல்வி மனப்பான்மையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் அதற்கேற்ப நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

வெல்ல முடியாத சக்தியாக தம்மைக் காட்டிக் கொண்ட சிங்கள அரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை என அதன் பின்னால் அணிவகுத்து நிற்க வேண்டிய நிலையில் சிலர் இருந்தார்கள். தமது இருப்பை தக்க வைப்பதற்கு இவ்வாறு செயற்பட்டவர்கள் போக, அடிபணிவு அரசியலை வரித்துக் கொண்டு அதற்காக பரப்புரை செய்தவர்களும் இருக்கிற ார்கள். ஆனால் அந்த நிலமை மாற்றமடைகிறது என்பதனை ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளை வரவேற்று த.தே.கூட்டமைப்பு விடுத்த அறிக்கை புலப்படுத்துகிறது.

நாடுகளும், அமைப்புகளும் தமது நலன் சார்ந்தே செயற்படுகின்ற போதிலும், இப்போது ஏற்பட்டுள்ள வாய்ப்புகளை உலகத் தமிழர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன பேப்பரில் எங்கட விசயங்களிலை இந்தியாவின்ரை தலையீடு, சோனியா காந்தியோடை உலகத் தமிழர் பேரவை சந்திச்சது போன்ற அரசியல் விடயங்கள் பற்றி கட்டுரையள் கார்ட்டூன்கள் என்று போட்டிருந்தம். அவை பொதுவா மக்கள் மத்தியிலை இருக்கிற உணர்வை வெளிப்படுத்தியிருந்தது எண்டு கன பேர் சொல்லிச்சினம், பாராட்டியினம் நல்லது. ஆனால் சில பேர் நாங்கள் ஆரையோ கவிழ்க்க வெளிக்கிட்டிருக்கிறம், துரோகிப் பட்டியல் போட்டிருக்கிறம் எண்டு முறைப்பாடு செய்கினம்.*

*ஒண்டை கவனியுங்கோ, பொது வாழ்க்கையிலை இருக்கிற ஆட்களை வஞ்சகமில்லாமல் விமர்சிக்கிற விசயங்களை நாங்கள் பிரசுரிக்கிறம் எண்டது உண்மைதான்.. ஆனால் ஆருக்கும் துரோகிப் பட்டம் கொடுக்கிறது எங்கடை வேலையில்லை. அப்பிடி நாங்கள் செய்யிறது மில்லை. கருத்தை கருத்தாலை மோதிறதுக்கு* ***ஒரு பேப்பர்*** *எப்பவும் களம் அமைச்சுத் தருகிறது. ஆனால் அப்பிடிச் செய்தால் தாங்கள் யாரெண்டு வெளிப்பட்டு விடுவமோ என பயப்படுகிற முகமூடி மனிதர்கள்தான் எங்கள் மீது வீணான பழியை சுமத்துகிறார்கள்.*

*உங்களுக்குத் தெரியும் நாங்கள் சித்தாந்தம் பேசுறதில்லை, எங்களுக்கு அதுகளை கேட்டாலே தலையிடிக்கும். ஆனபடியாலை கிரந்தம் கதைக்கிறவையை பற்றி நாங்கள் அக்கறைப்படுகிறேல்லை. கொஞ்சம் தூர விலகியிருக்கிறம்.*

*நீங்கள் திரைப்படம் பார்க்கிற ஆட்களாக இருந்தால், பார்த்த படத்தை பற்றி அது எந்த மொழிபடமாயிருந்தாலும். சின்னனாக ஒரு விமர்சனம் எழுதி அனுப்புங்கோ. பிரசுரிக்கிறம். விமர்சனம் எழுதிறதுக்கு நீங்கள் பெரிசாய் திறனாய்வு பற்றி தெரிந்திருக்க வேண்டியதில்லை. உங்கடை மனசிலை படுகிறதை எழுதினால் போதும்.*

*ஊர்ச் சங்கங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள் உங்கடை செயற்பாடுகள் பற்றி செய்தியளை படங்களோடை அனுப்பலாம்.*

*முள்ளிவாய்க்காலில் நடந்த இனப் படுகொலையையும், அவலங்களை நினைவு கூருகிற ஆக்கங்களை பிரசுரிக்கவுள்ளோம். உங்கடை ஆக்கங்களையும் சுருக்கமாக எழுதி அனுப்புங்கோ. நீங்கள் எல்லாம் விசைப் பலகை விண்ணர்கள் எண்டதாலை, மின்னஞ்சலில் அனுப்பினால் வசதியாய் இருக்கும்.*

*மாணிக்கண்ணை எண்டு ஒராள் தன்னோடை தொடர்பெடுக்கச் சொல்லி வொய்ஸ் மெயிலிலை தகவல் விட்டிருக்கிறார், ஆனால் நம்பரை விடேல்லை. அவர் ஒருக்கா திரும்ப போன் எடுத்தால் விசயத்தை வடிவாய் கேட்கலாம்.*

*வேறை என்ன?*

*நீண்ட விடுமுறையள் வருகுது. அவற்றை மகிழ்ச்சியாய் கழியுங்கள்.*

*மீண்டும் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள்+காரிகள்*

# Theatre of the absurd that passes for governance in Sri Lanka



By Dr. Paikiasothy Saravanamuttu

The Secretary General's Advisory Panel Report on Allegations of War Crimes by the Government of Sri Lanka and the LTTE in the last phase of the war has been handed over to the Government of Sri Lanka. The Ministry of External Affairs has declared that the Report is fundamentally flawed and that it contains baseless accusations. A leaked version of the executive summary has appeared in the local media and the UN is on record regretting the leak. The UN has also announced that it will make public the full report along with the full response of the Government of Sri Lanka. There is speculation that in any event the UN will make the full report public in the course of this week.

On the basis of the leaked executive summary it is clear that the Report comes down hard on the Government of Sri Lanka and the LTTE. Among the recommendations made is for an international mechanism to be set up to monitor local efforts towards accountability and to conduct independent investigations, for a public apology by the Government of Sri Lanka and for the return of the remains of the dead to their families. It is also strongly critical of the Lessons Learnt and Reconciliation Commission (LLRC) and the regime's approach to reconciliation.

It remains to be seen as to what the full report contains and as to what the Secretary General will do with it. It will probably be the case that he will first want to ascertain the views of the permanent members of the Security Council and the Council as a body before initiating any action if indeed further action is what he will conclude as necessary.

It remains to be seen as well as to what the Rajapaksa regime's response to the Report will be apart from the preliminary comments issued through the ministry of external affairs. Media reports state that three former foreign secretaries are working on this and that the president has called for a major demonstration of support on May Day focusing on the report. In an interview with the Sunday Times, the Defence Secretary is quoted as saying that " if the United Nations cannot protect one of its member states, Sri Lanka will be forced to look for protection from Russia and China. No doubt there will be statements by political parties and a parliamentary debate on the full report.

The simple point about the report is that it is now a fact. It exists and even if left to languish in the short or medium term, it can be resurrected for action thereafter. The challenge to the regime lies in its willingness and ability to respond to the report in a manner that will lay the matter to rest, once and for all and thereby create the conditions and environment for the country to move on, take off. That it can and will do so is by no means certain. The priorities of the regime, the competence it commands and the vision it projects are instructive of its overall mindset and that of its leading lights. Take the following that also make up the public profile of regime, which now stands in effect accused of war crimes by the UN Secretary General's Advisory Panel.

It was reported that there will be a further six chapters of the Mahavamsa written by a panel of experts. Three of the chapters are to be devoted to the Rajapaksa presidency, the ancient chronicle having not recorded anything of the likes of the defeat of the LTTE. Who these experts are is unknown. No doubt there is a lengthy queue of sycophants parading as scholars to write His Excellency into the great chronicle and no doubt generations of Sri Lankans will be fed on this diet of praise and propaganda. Is this an illustration of what the Panel report refers to as "triumphalism"? Given the "Mahavamsa mind-set" and its association with the ethnic conflict, what of reconciliation? What does this do to what the LLRC is supposed to do?

A leading light of the regime, Professor Rajiva Wijesinha MP claims that the military attaché at the British High Commission handed him a typed note "suggesting" that Sarath Fonseka " had squads engaged in illicit activities reporting to him ". Professor Wijesinha claims that he cannot remember where he put the note – " I chucked it away somewhere and now cannot find it" he is reported as telling the Sunday Leader. Asked as to what action he took on receiving the note, he is reported as responding -"None".

What is clear is that the Professor Wijesinha – it is not clear as to whether this occurred when he was Secretary to the Ministry of Human Rights, the professor's memory being such - did nothing with the note, which on the basis of what it contained one would have thought demanded immediate and urgent action either in his official capacity or indeed as a responsible citizen, which surely the learned professor is. Apart from this media report establishing that one should not pass notes to him, especially noteworthy ones, it provides a sad reflection on the political appointees.

It is perhaps fortunate that the professor's note- taking competence let him down in terms of further advancement within the regime and yet let him off from even being appointed monitor of the external affairs ministry. This singular honour has gone to Sajin Vaas Gunewardene.

Finally, who ever has heard of Rain, the South Korean songster who takes precedence over our great leader in the Time Poll of the 100 most influential personalities in the world? An official government release on this stresses that the president is the leading politician in the poll. Now at number 2, he has seen off another songster – this time from Taiwan.

Who needs the Chinese made Colossus of an Arts Centre – there is theatre –tragedy and farce, farce and tragedy all around us. No wonder the polity behaves as if by casting its vote it has bought a ticket to the theatre of the absurd that passes for governance.

Just wait for Weerawansa to tread the boards again. Oops! hit the streets, I mean.

# மாற்று வாக்களிப்பு முறைமைக்கு நீங்கள் ஆதரவா? இல்லையா?

அண்மைய நாட்களில் உங்கள் கதவுத் துவாரத்தினூடாக வாக்கு அட்டைகள் வந்து விழுந்திருப்பதை அவதானிப்பீர்கள். வரும் மே 5ம் திகதி பிரித்தானியாவில் நடைபெறவிருக்கும் சர்வசன வாக்கெடுப்பில் வாக்களிப்பதற்காக இந்த அட்டைகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வாக்களிப்பது சரி, என்ன விடயமாக இந்த வாக்கெடுப்பு நடக்கிறது என நீங்கள் கேள்வி எழுப்புவீர்களே ஆனால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில் உங்களைப்போல் பலரும் தமக்கு இந்த வாக்கெடுப்பு பற்றி எதுவும் தெரியாது எனக் கூறுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆதலால் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவிருப்பவர்களின் தொகை மிகக்குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

AV (Alternative Voting) என்ற மாற்று முறையிலான வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்காகவே இந்த வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இப்போதுள்ள வாக்களிப்பு முறையை விட இந்த மாற்று வழி உங்களுக்கு பிடித்திருந்தால் ஆம் என்பதற்கும் பிடிக்காதிருந்தால் இல்லை என்பதற்கும் புள்ளடியிட்டு உங்களது விருப்பை நீங்கள் தெரிவிக்க முடியும். ஆம், இல்லை என்பதில் ஒன்றை தெரிவு செய்வதற்கு, முதலில் இந்த மாற்றுத்திட்டம் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இதில் சிக்கலான சூத்திரம் எதுவுமில்லை. சிறிலங்காவில் இப்போதிருக்கிற விகிதாசார தேர்தல் முறையினை விட மிகவும் சுலபமான ஒரு பொறிமுறையே இங்கு பிரேரிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் இப்போதுள்ள தேர்தல் விதி முறைகளின் படியாக ஒவ்வொரு தொகுதியிலும் அதிகவாக்குப் பெற்றவர் வெற்றிபெற்றவராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவார். இந்த முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தவே புதிய பொறிமுறை பிரேரிக்கப்பட்டுள்ளது.

### மாற்று வாக்களிப்பு முறை

இப்போது பிரேரிக்கப்படும் வாக்களிப்பு முறையின்படி முன்னரைப்போல் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிவாரியாக நடைபெறும், ஆனால் வாக்களிக்கும் போது நீங்கள் உங்கள் விருப்பின் பிரகாரம் ஒன்று, இரண்டு என வாக்களிக்கலாம். அதாவது உங்கள் தொகுதியில் போட்டியிடுபவர்களின் உங்களுக்கு மிகவும் பிடித்த வேட்பாளரின் பெயரின் எதிரில் புள்ளடியிடுவதற்கு பதிலாக ஒன்று எனவும் அடுத்த நிலையில் இருப்பவருக்கு இரண்டு எனவும். அடுத்த வர்களுக்கு மூன்று, நான்கு என வரிசைப்படி எழுதலாம். தனித்து ஒருவருக்கு மட்டும் வாக்களிக்க விரும்பின் அவரது பெயருக்கு எதிரில் ஒன்று என எழுதலாம் அல்லது புள்ளடியிடலாம்.

வாக்குகளை எண்ணுவதிலும், வெற்றி பெற்றவரை தேர்ந்தெடுப்பதிலும், வேறுபட்ட அணுகுமுறை கடைப்பிடிக்கப்படும். வாக்குகள் எண்ணும் போது, அதிக வாக்குகளை பெற்றவர், மொத்தமாக வாக்களித்தவர்களில் ஐம்பது விழுக்காட்டுக்கு அதிகமான வாக்குகளை பெற்றிருப்பின் வழமை போல் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாவாவர். ஆனால் அதிகவாக்குகளை பெற்றவர் ஐம்பது விழுக்காட்டுக்கு அதிகமான வாக்குகளை பெற்றிருக்கவில்லை எனில், பட்டியலில் ஆகக் குறைந்த வாக்குகளைப் பெற்றவரை நீக்கிவிட்டு மற்றயவர்கள் பெற்ற இரண்டாம் தெரிவு வாக்குகள் எண்ணப்படும். அதிலும் ஐம்பது விழுக்காடு வாக்குகளை பெற்றிருக்காவிட்டால், அவ்வெண்ணிக்கையை எட்டும்வரை அடுத்த தெரிவுகள் எண்ணப்பட்டு வெற்றிபெற்றவர் தெரிவுசெய்யப்படுவார்.

இப்புதிய முறையில் சனநாயக முறைமை மேலும் வலுப் பெறுவதுடன், சிறிய கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான தொகையினர் ஐம்பது விழுக்காட்டுக்கு குறைவான வாக்குகளை பெற்றுத் தெரிவாகியுள்ளனர். ஆகையால் கடந்த தேர்தலில் இந்த புதிய முறைமை அறிமுகப்படுத்தியிருந்தால் இப்போதுள்ள உறுப்பினர்களில் பலர் தெரிவு செய்யப்படாமல் வேறு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள் என எதிர்பார்க்க முடியும்.

பொருளாதார நெருக்கடியில், அரச செலவீனங்கள் குறைக்கப்பட்டு வரும் நிலையில் பல மில்லியன் செலவில் இப்படியானதொரு சர்வசன வாக்கெடுப்பினை நடாத்துவது அவசியமா என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால் ஆளும் கொன்சவேர்டிவ் - லிபரல் டிமொக்கிரட் கூட்டணி அரசிற்கு வேறு வழியிருக்கவில்லை. ஏனெனில் மேற்படி பரிந்துரையை ஆதரிக்கும் லிபரல் டிமொக்கிரட் கட்சி இக்கூட்டணியில் அங்கம் வகிப்பதற்கு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையில் இந்த வாக்கெடுப்பு நடாத்துவதற்கு கொன்சவேட்டிவ் கட்சி இணங்கியிருந்தது.

பெயருக்கு ஏற்ற வகையில் பழமைவாத கொன்சவேட்டிவ் கட்சி மேற்படி பரிந்துரையை எதிர்பதுடன், அதற்கு எதிராக வாக்களிக்குமாறு வாக்காளர்களை வேண்டிக் கொண்டுள்ளது. லேபர் கட்சியும், லிபரல் கட்சியும் மாற்றத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு பரப்புரைகளை மேற்கொண்டுவருகிறது. லேபர் கட்சியின் தலைவர் எட்வர்ட் மிலிபான்ட் அவர்களும், லிபரல்டிமொக்கிரட் கட்சியின் முக்கியத்தரும் வர்த்தக அமைச்சருமான வின்ஸ் கேபிள் ஆகியோர் இணைந்து பரப்புரைகளை மேற்கொணடு வருகின்றனர். ஆனால் லேபர் கட்சியின் ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த ஜோன் ரெய்ட், முன்னாள் உதவிப்பிரதமர் ஜோன் பிறெஸ்கொட் போன்றவர்கள் மாற்றத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

இம்மாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்படுமானால்பெரிய கட்சிகள் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வருவது சிரமமானதாகிவிடும் எனவும் பெரிய கட்சிகள் சிறிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் நிலைக்குத் தள்ளப்படும் எனச் சில அரசியல் அவதானிகள் கருத்துத்தெரிவிகிறார்கள். அரசியல்வாதிகள் முன்னரைவிட அதிகமாக பரப்புரை செய்து மக்கள் மத்தியில் இடம்பிடிப்பார்களேயானால் இந்த புதியமுறையையிட்டு அச்சப்பட எதுவுமில்லை என வேறு அவதானிகள் கூறுகிறார்கள்.

### எதற்கு வாக்களிப்பது?

மே ஐந்தாம் திகதி மாற்றத்திற்கு ஆதராவாக வாக்களிப்பதா? எதிராக வாக்களிப்பதா? முடிவை நீங்களே எடுக்க வேண்டும்.

வெல்வோம்


உறுதியாய்

வேறென்ன

செய்வோம்

இறுதியாய்!

# US Law Student Accuses Sri Lankan Leaders of War Crimes



**By Laurel Bowman**
VOICE OF AMERICA

As wars break out and end, and refugees flee across international borders, victims often find themselves living alongside their alleged tormentors in foreign and frequently Western nations. Those active and educated in the victim diaspora are looking to legal systems in their new countries to redress alleged war crimes. In the U.S. state of Maryland, a first-year law student of Tamil heritage accuses the brother of Sri Lanka's president and a former army general of war crimes against minority Tamils in Sri Lanka.

It's an average day in contracts class at the University of Baltimore School of Law in Maryland.

The professor poses hypothetical questions as students check e-mail. But Rajeev Sreetharan is not distracted. He's on a mission to bring what he calls justice to the Tamils of Sri Lanka through the legal systems of the West.

"When you look at the history of transitional justice from Nuremberg to Darfur, it's only a select number of people who have gotten justice and who have been given the opportunity for their suffering to be written in history," said Rajeev Sreetharan.

In 2009, Sreetharan, and colleagues from the international diaspora group Tamils Against Genocide, compiled a document accusing former Sri Lankan Army General Sarath Fonseka and current Defense Minister Gotabhaya Rajapaksa of genocide against minority Tamils during that country's long-running civil war. Gotabhaya Rajapaksa is the brother of Sri Lankan President Mahinda Rajapaksa.

The United Nations estimates 7,000 civilians died during the final phase of Sri Lanka's civil war, which ended in 2009. Both the Sri Lankan army and the Tamil rebels have been accused of abuses.

The Sri Lankan Embassy in Washington refused to comment on Streetharan's accusations, but President Rajapaksa told Sri Lanka's Daily News newspaper last month:

"...the so-called diaspora seeks to tarnish my image, and bring me and those who led the humanitarian operation to defeat LTTE terror before international tribunals."

Mr. Rajapaksa invited Tamil expatriates to return to Sri Lanka to witness the actual situation there.

Washington attorney Bruce Fein asked the U.S. Justice Department to investigate Streetharan's accusations, but he has not heard back about any investigation.

"It was a compilation of over 1,000 pages going back for decades of disappearances, starvations, bombings, assassinations of Tamils," said Fein. "These were Tamils that were not on the battlefield and were documented from a variety of sources."

Fein says Gotabhaya Rajapaksa is a U.S. citizen and Fonseka, jailed following a failed election challenge to the president, has a U.S. green card. He says this makes them vulnerable to U.S. law.

"The United States is a signatory to the Genocide Convention of 1948 and there is a genocide law that prohibits any U.S. citizen from complicity in genocide wherever it is committed," he said.

Fein says he doubts the current Sri Lankan government will extradite the president's brother or the jailed army general, but he says governments do change.

Back on campus, Sreetharan finishes class and heads to his apartment to get to work. He acknowledges that the various cases he is working on are long-shots, but he says he'll keep at it.

He describes how today's instant communication makes it all possible.

"The spread of media, Internet, Facebook, all these things you can basically empower the victim community to engage with the court directly," he said.

Sreetharan left an investment banking career on Wall Street to pursue justice issues.

He's in a hurry. He has muscular dystrophy and over time he will lose strength and mobility. His life, he says, could be short.

"When the doctor starts telling you that you are going to get weaker and weaker then you want to make every day count," said Sreetharan.

Tamil rebels fought the Sri Lankan government for 25 years. They are accused of many atrocities themselves, but bringing them to justice, says Sreetharan, is someone else's fight.

ஒரு பேப்பர்
ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சாரதா

விளம்பரம்
சோபனா - தனா

அச்சு
தர்சினி (கனடா) - பானு

வடிவமைப்பு
மயூரன் - சுரேகா

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
பானு

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஒரு மலை சரிந்த பிறகு

ஓம் ஒரு மலை சரிந்த பிறகு, ஒரு மகா ஆல மரத்தின் அத்தனை இலைகளும் உதிர்ந்த பிறகு, அம்மரத்தின் கீழ் பாதுகாப்புடன் நம்பிக்கையுடன் வாழ்வோம் என்ற முனைப்புடன் தலை நிமித்திய புற்கள் யாவும் பொசுங்கிய பிறகு, தேசமே எரியுண்ட பிறகு, அத்தனை நாசங்களும் நிகழ்ந்த பிறகு, வருகின்றன சில நாசகார சக்திகள்.

சிங்கள பௌத்த இனவாதம் அல்லது இந்திய மேலாதிக்க வாதம் அல்லது ஏகாதிபத்திய வாதம் இவைதான் வருகின்றன என்றால் அச்சப்பட ஒன்றுமில்லை என்று சொல்ல முடியாவிடினும் ஆயத்தமாக இருக்கலாம். அது எதிர்பார்க்ககூடியதே என்றும் சொல்லலாம் ஆனால் இங்கு நாசகாரசக்திகள் என்று நாம் சொல்ல வருவது அவற்றையல்ல எம்முள் இருந்து எம்மை வேரறுக்க முயலும் சில சக்திகளை நாம் இனம் காண வேண்டும் அவற்றை துரோக கும்பல் என்ற ஒருபதத்தில் ஒதுக்கிவிட முடியாது துரோகிகளை இனம் காணல் கடினமான பணியல்ல மேலும் துரோகி ,துரோகம் என்ற சொற்களே இப்பொழுது அர்த்தம் இழந்து போய்விட்டது.

நாசகாரசக்திகள் என்பது அவற்றிற்கு பொருத்தமான பெயர். கூட இருந்து குழிபறிப்பது இது தான். அதை அறிந்து செய்பவர்களும் உண்டு உண்டு அறியாமல் செய்யும் அப்பாவிகளும் உண்டு.

'இறைவா எதிரிகளை நான் பார்த்துக் கொள்கிறேன் நண்பர்களிடம் இருந்து என்னை காப்பாற்று' என்ற புகழ்பெற்ற வாசகம் ஒன்று உண்டு. இந்நாசகாரசக்திகள் நண்பர்கள் போல் எம்மிடையே உலாவுவார்கள்

2009 மே மாத முள்ளிவாய்க்கால் அவலம் முடிந்து ஒரு மாதகாலம் கூட ஆகவில்லை ஒரு மருத்துவர் தனது படை பரிவாரங்களுடன் லண்டனில் உள்ள சிங்கள தூதரத்தில் தஞ்சமடைகிறார் கேட்டால் எமது மக்களுக்கு உதவுவதற்காகவே அங்கு சென்றேன் என்கிறார்.

இம் மருத்துவர்தான் ஏற்கனவே தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழம் உடைய வெண்புறா அமைப்பு தோற்றம் பெறும் வகை செய்தவர் தமிழீழம் தமிழ் தேசியம் தலைவர் என்று 'த' வரிசையில் தாளம் போட்டவர் முள்ளி வாய்க்கால் முடிந்த பிறகு சிறிலங்கா தூதரகம் சென்று சிங்களவரின் காலை நக்கி 'சி' வரிசையில் சின்ன மேளம் ஆடினார்'

இதற்கிடையில் சில பல நாசகார வேலைகள் நடந்தேறின. அவை யாவற்றையும் எழுதப்புகின் இப்பத்தி போதாது. கே.பி சிங்கள அரசினால் சூழ்நிலைக் கைதியாக்கப்பட்டதும் இங்கிருந்து சில நாசகார சக்திகள் காவடிதூக்கியதும் நாம் அறிந்ததே.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

இங்கிலாந்திலிருந்து ஒரு குழு இந்தியாவிற்கு சென்று. ராகுல் காந்தியை சந்தித்தது. யாரும் யாரையும் எப்போதும் சந்திக்கலாம் அது ஜனநாயகம். எதைப்பற்றியும் எவ்வாறும் பேசலாம் அது கருத்து சதந்திரம்

அவ்வாறே சோனியாகாந்தி லண்டன் வந்தபோது உலகதமிழர்பேரவையில் இருந்து சிலர் சோனியாவை சந்தித்திருந்தனர். மேற்கண்ட ஜனநாயகம் கருத்துசுதந்திரம் இதைபற்றிநாம் ஒன்றும்பறைய முடியாது

ஆனால் நான் பறைவேன் கருத்து சுதந்திரம், ஜனநாயகம் பற்றி கத்துவோர்களுக்கு அஞ்ச ஒன்றும் இல்லை. ஏனென்றால் இந்த நாசகாரிகள் செய்தது ஜனநாயக மீறல். கருத்துச்சுதந்திரம் என்பதன் பெயரில் இவர்கள் செய்தது கருத்து திணிப்பு.

இவர்கள் சோனியாகாந்தியை சந்தித்தது சரியென்றால், ஓடிச்சென்று ராகுல்காந்தியின் காலை நக்கியது சரிதான் என்றால், ராஜேஸ் பாலாவும் 'தேசம் நெற்' குழுவினரும் கங்கா முதலான எல்லா 'நக்கு பொறுக்கிகளும்' மகிந்தாவின் காலை நக்கியது பிழையல்ல.

ராகுல் காந்தியையும் சோனியா காந்தியும் சந்திக்கச் சொல்லி யார் உங்களிடம் ஆணையிட்டது?. எவரைக்கேட்டு நீங்கள் சந்தித்தீர்கள்? சோனியாவும் ராகுலும் உங்களின் மாமி மச்சான் என்றோர் உறவு இருந்தால் நாம் அதுபற்றி கதைக்க ஒன்றும் இல்லை.

'என்னநினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் வெக்கம் கெட்டவர்களே ? அதற்கிடையில் மறந்தா போனீர்கள் நாய்ப்பிறப்புக்களை வயிறு பற்றி எரியுது. தின்னவும் உண்ணவும் விழுங்கவும் முழுங்கவும் எங்கள் உறவுகளை நாம் கொடுத்து காலம் அதிகம் ஆகவில்லை.

நாம் அரசியல் பற்றி ஒன்றும் பேசவில்லை எங்கள் பல்லாயிரம் தமிழ் மக்களை முழுங்கி முடித்தவர்கள் யார்? மகிந்தாவும் சோனியாவும் மகிந்தா தான் சிங்களப்பசி சோனியாவிற்கு என்ன செய்தோம்?. எங்கள் தமிழ் உயிர்களை கொத்து கொத்தாக கொண்டு போக எப்படி அவளுக்கு மனம் வந்தது. அவள் வெள்ளை தோல் அத்துடன் வடஇந்தியாவின் ஆதிக்கம் அவள் மேல் படர்ந்திருக்கிறது.

அவள் அதைத்தான் செய்வாள் நீங்கள் என்ன செய்தீர்கள்? அவள் முந்தானைக்குள் போய் முகம்புதைத்து வந்திருக்கிறீர்கள் இதுவரை காலமும் எம் மக்கள், எம்தேசம், எம் தலைவர் என்று பசப்பியதெல்லாம் வெறும் பாசாங்கு தானே. அத்தனையும் உங்கள் யாவாரம் தானே?.

ஒன்றை குறித்துக்கொள்ளுங்கள் எந்த தமிழ் மக்களும் உங்களுக்கு எந்தவொரு ஆணையும் வழங்கவில்லை எனவே தமிழ் மக்கள் தொடர்பாக யாரிடமும் கதைப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை உங்களுக்கு எந்த காயை எங்கு நகர்த்தினால் மற்றக்காய் குத்துக்கரணம் அடித்து முகம் குப்பிற விழும் என்ற யாவாரம் உங்களுக்குத் தெரியும்.

இனி இழப்பதற்கு எதுவுமில்லை பெறுவதற்கு ஒன்றே ஒன்று உண்டு அது சுதந்திரம். எமது இனமானத்தை அடைவு வைக்கும் வியாபாரிகளே விலகுங்கள் எமது தமிழ் மக்களே இவ்வாறான நாசகார சக்திகளை இனம் காணுங்கள்.

# வாழ்க்கைக்கு அர்த்தமிருக்கிறதா ?

ஒரு ஞானியிடம் அவருடைய சீடர் கேட்டார். 'குருவே மனிதனுடைய வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்கிறதா' பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால் இல்லை சீடருக்கோ திகைப்பு. சிலர் கேள்விகள் கேட்கும் போது சொல்லப்படும் பதிலுக்குத் தயாராக இருக்க மாட்டார்கள். அந்த சீடரும் அப்படித்தான். வாழ்க்கைக்கு அர்த்தம் உள்ளது என்று அவர் சொன்னால் அந்த அர்த்தம் என்ன என்று கேட்டு தத்துவார்த்தமான சொற்பொழிவை குருவிடமிருந்து கேட்டு மகிழலாம் என்றால் என்ன இவர் இப்படிச் சொல்லி ஒரேயடியாக முடித்து விட்டாரே என்று ஏமாற்றமடைந்தார்.

அவருடைய ஏமாற்றத்தைப் புரிந்து கொண்ட ஞானி புன்னகையுடன் சொன்னார். 'பெரும்பாலான மனிதர்கள் வாழ்கிற வாழ்க்கைக்கு அர்த்தமில்லை. அவர்கள் பிறக்காமல் இருந்திருந்தாலும், வாழாமல் இருந்திருந்தாலும் உலகத்தில் எந்த உண்மையான மாற்றமும் நேர்ந்து விட்டிருக்காது. எனவே தான் பொதுவாக இல்லை என்றேன்.?

சீடர் கேட்டார். 'அப்படியானால் வாழ்வது வீண் தானா' ஞானி சொன்னார். 'வாழ்க்கை வீணாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. வேண்டுமானால் மனிதன் தன் வாழ்க்கைக்கு அர்த்தத்தை உருவாக்கிக் கொள்ளலாம். அவனுக்கு அந்த உரிமையும் சுதந்திரமும் தரப்பட்டிருக்கிறது'

அந்த ஞானி சொன்னதில் பேருண்மை பொதிந்து இருக்கிறது. வாழ்க்கைக்கு அர்த்தம் இருப்பதும், அர்த்தமில்லாததும் அவரவர் கையில். வாழ்க்கையில் அர்த்தம் உள்ளது என்று நம்பி அதை உபயோகமாகக் கழிக்கலாம். அர்த்தம் உள்ளதா என்பதை சிந்திக்காமலேயே வாழ்க்கையை வீணாக்கியும் மாளலாம்.

சரித்திரம் படைத்த அத்தனை பேரும் தாங்கள் ஒரு அர்த்தத்தோடு படைக்கப்பட்டு இருப்பதாக நம்பினவர்கள். அதனால் தான் அவர்களால் தங்களது நிரந்தரமான சுவடுகளை உலகில் விட்டு விட்டுப் போக முடிந்தது. முதல் உலகப் போரின் போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சனை அப்படிப்பட்டவர்களில் ஒருவராகச் சொல்லலாம். அவரிடம் அரசியலில் பெரிதாக விசேஷத் திறமைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனாலும் அவருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் அவர் தன்னை இறைவன் ஒரு அர்த்தத்துடன் படைத்திருப்பதாகவும், விதியால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதனாகவும் உறுதியாக எண்ணியதாகக் கூறினார்கள். உடல் நலக்குறைவு அவரை சிறு வயதில் இருந்தே ஆட்டிப்படைத்தது என்றாலும் அதையும் மீறி அவர் நிறைய சாதிக்கவும், சரித்திரம் படைக்கவும் அவருடைய அந்த எண்ணமே முக்கிய காரணமாக இருந்தது. அமெரிக்க ஜனாதிபதிகளில் Ph.d பட்டம் பெற்றவர் அவர் ஒருவரே. முதல் உலகப் போர் சமயத்தில் உலக அமைதிக்காக பாடுபட்டதற்காக சமாதான நோபல் பரிலசயும் பெற்றார்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தவர்கள் அவருடைய இளமைக்காலத்தில் அவர் பெரிய தலைமைப் பண்புகளை வெளிப்படுத்தவில்லை என்பதை அறிவார்கள். வக்கீலுக்குப் படித்து விட்டு முதல் முதலில் வாதாடப் போன போது திக்கு முக்காடிப் போனார். அப்படிப்பட்டவர் வாழ்க்கையின் பின்பகுதியில் ஆங்கிலேய சாம்ராஜ்ஜியத்தையே ஆன்ம வலிமையுடன் எதிர்த்து வெற்றியும் பெற்றார். மௌண்ட் பேட்டன் பிரபு அவரை 'ஒரு தனி மனித ராணுவம்' என்று பாராட்டினார். அவர் பின் ஒரு தேசமே திரண்டு நின்றது. இதெல்லாம் அவர் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உருவாக்கிக் கொண்ட பிறகு சாத்தியமானவை தான். சத்தியத்தின் மீது அவர் கொண்டிருந்த அபார நம்பிக்கையும், நாட்டு சுதந்திரம் என்ற லட்சியமும் அவரைப் பலவீனமான மனிதர் என்ற நிலையிலிருந்து மாபெரும் சக்தி வாய்ந்த மனிதர் என்ற பெருமை வரை உயர்த்தி விட்டிருக்கின்றன.

நான் பலவீனமானவன், பலவீனமானவள், எனக்கு என்று எந்தச் சிறப்புத் தகுதியும் இல்லை, என்றெல்லாம் சொல்லாதீர்கள். கண் முன்னே வரலாறாக இருக்கும் மகாத்மா காந்தியின் உதாரணத்தை மறந்து விடாதீர்கள். ஏதாவது நல்ல லட்சிய அக்னியால் தீண்டப் பெறுங்கள். அந்த லட்சிய அக்னி உங்கள் பலவீனங்களை எல்லாம் சுட்டுப் பொசுக்கி விடும். உங்களுக்கு அந்த லட்சியம் அசுர பலத்தைத் தரும். கண்டிப்பாக வாழ்க்கை நல்ல பாதையை நோக்கி திரும்ப ஆரம்பிக்கும்.

மனிதர்கள் வெள்ளைத் தாளாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். கடைசி வரை வெள்ளைத் தாளாகவே அவர்கள் வாழ்ந்து முடித்து விடலாம். அதில் பொருளற்ற கிறுக்கல்களைக் கிறுக்கித் தள்ளலாம். அதை குப்பையாக கசக்கியும் எறியலாம். அதில் கவிதையையும், காவியத்தையும் பதித்து வைக்கலாம். அர்த்தமுள்ள ஆயிரம் விஷயங்களை எழுதி வைக்கலாம். கடைசியில் குப்பைக்கூடைக்குப் போகிறதா, பத்திரமாக பலருக்கும் பயன்படும் வகையில் சேகரித்து வைக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தே அந்த வாழ்க்கைக்கு அர்த்தம் நிர்ணயிக்கப்படுகிறது.

உங்கள் வாழ்க்கைத் தாளில் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? அதில் அர்த்தம் இருக்கிறதா? இன்று எழுதுவதற்கெல்லாம் நாளை நீங்கள் வருந்த வேண்டி இருக்குமா? இந்தத் தாளை மேலும் உயர்ந்த விஷயங்களால் நிரப்பி இருக்கலாமே என்று எதிர்காலத்தில் சுய பச்சாதாபம் அடைய வேண்டி வருமா? சிந்தியுங்கள். இப்படி எல்லாம் ஆழமாக சிந்தித்து அது செயல்களாகவும் பரிணமித்தால் அது இனி தொடரும் வாழ்க்கையைக் கண்டிப்பாக நெறிப்படுத்துவதுடன் அர்த்தப்படுத்தும்.

லட்சியம் என்பதெல்லாம் பெரிய வார்த்தை எல்லாம் எனக்குப் பொருந்தாது, எனக்கு அதில் பெரிய ஈடுபாடும் இல்லை என்று இன்னமும் நீங்கள் நினைத்தாலும் பரவாயில்லை. மிகப்பிரபலமாகி பெரிய சாதனைகள் புரிந்து வாழ்ந்த வாழ்க்கை தான் அர்த்தமுள்ள வாழ்க்கை என்று சொல்ல முடியாது. மற்றவர்கள் வாழ்க்கையை ஏதேனும் ஒரு வகையில் சுலபப்படுத்தியிருந்தால், அடுத்தவர் வாழ்க்கைக்கு ஏதாவது விதத்தில் பயன்பட்டிருந்தால் அதுவும் அர்த்தமுள்ள வாழ்க்கையே.

வரலாற்றுப் பக்கங்களில் இடம் பெற்றால் தான் வாழ்க்கைக்கு அர்த்தம் என்றும் சொல்ல முடியாது. நேசித்தும் நேசிக்கப்பட்டும் மற்றவர் மனதில் உறுதியான இடத்தை நிரந்தரமாகப் பிடித்தால் அப்படிப்பட்ட வாழ்க்கையும் அர்த்தமுள்ளதே. எனவே வாழ்க்கையில் அதிகம் நேசியுங்கள். அன்பாக இருங்கள். உங்கள் அன்பு உண்மையாக இருந்தால் உங்கள் வார்த்தைகளாலும், செய்கைகளாலும் எத்தனையோ பேர் பலன் பெறுவார்கள். எத்தனையோ பேருடைய பாரங்களை நீங்கள் இலகுவாக்குவீர்கள். பலரையும் பிரமிக்க வைக்கும் காவியமாக இல்லா விட்டாலும் சிலரை சிலிர்க்க வைக்கும் ஒரு அழகான கவிதையாய் நீங்கள் கண்டிப்பாக வாழ்ந்து மடியலாம்.

நான் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்து முடித்திருக்கிறேன் என்ற நிறைவுடன் உலகை விட்டு ஒரு நாள் பிரியலாம்...!

*- என்.கணேசன்*

# நடைபெற்றது போர்க்குற்றமல்ல... இனப்படுகொலை



தமிழினப்படுகொலைநிகழ்ந்துஇரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் ஐ.நா சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் 75,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாக கூறும் இந்த அறிக்கைக்கு என்ன நடக்கப்போகிறது என்கிற எதிர்பார்ப்பு, ஈழத்தமிழர் மத்தியில் எழுந்துள்ளது.

ஆனாலும் அறிக்கையில் குறிப்பிடப்படும் ஒன்று சேர்ந்த சர்வதேசப் பொறிமுறை இனப்படுகொலையாளர்களை காப்பாற்ற முயற்சிக்கிறதா என்ற கேள்வி எழாமலில்லை.

சர்வதேச மனித உரிமை நியமங்கள் சட்ட வரைபுகள் என்பதற்குமப்பால், பலம் பொருந்திய வல்லரசாளர்களின் பிராந்திய நலன்களும், இராஜதந்திரப் போட்டிகளும், அடுத்தகட்ட நகர்வில் பெரும் பங்கினை வகிக்கப்போகிறது என்பதுதான் உண்மையானது.

ஐ.நா பாதுகாப்புச் சபையில், நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து விவாதிப்பதற்கு, இரஷ்யா தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாக 'இன்னர் சிற்றி பிரஸ்' சுட்டிக் காட்டுகிறது.

ஏற்கனவே இறைமையுள்ள ஒரு தேசத்தின் உள்நாட்டு விவகாரங்களில், வெளியாரின் தலையீடு அனுமதிக்கப் பட முடியாதென அறிக்கை வெளிவந்தவுடன் சீனா கூறிய கருத்தினை கவனிக்க வேண்டும்.

**முள்ளிவாய்க்காலில் 75,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாக கூறும் இந்த அறிக்கைக்கு என்ன நடக்கப்போகிறது என்கிற எதிர்பார்ப்பு, ஈழத்தமிழர் மத்தியில் எழுந்துள்ளது.**

இராஜதந்திர மட்டத்தில் நிழல் போர் நடாத்தும் மேற்குலகமும் அதற்கு எதிரான சக்திகளும், இலங்கை மீதான போர்க்குற்றச் சாட்டினை தமது நலன் சார்ந்து கையாள்வதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஐ.நா சபை நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களின் கண்டனங்கள் என்பவற்றை, இலங்கைக்கு எதிரான மேற்குலகின் சதி என்கிற வகையில் நோக்கப்படும் ஆபத்தொன்று தென்படுகிறது.

இரஷ்யா, சீனாவின் காலில் சரணடையப் போவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இராஜபக்ச விடும் அச்சுறுத்தல்களும், இவ் அறிக்கையின் பின் புலத்தில் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் ' இராஜ தந்திர பயங்கரவாத நடவடிக்கை' இருப்பதாக பிதற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் அறிக்கைகளும், உலக வல்லரசுகளை தமது நலனிற்காக இரு அணிகளாகப் பிரிக்கும் சிங்களத்தின் தந்திரோபாயத்தினை உணர்த்துகிறது.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

இவைதவிர, உள்ளூர் அரசியல் சக்திகளை ஐ.நா சபைக்கு எதிராக ஒன்று திரட்டும் பணியிலும் சிங்களம் ஈடுபடுகிறது.

அறிக்கைக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில், 10 இலட்சம் கையெழுத்தினைப் பெறுவதற்கு, தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.இரத்நாயக்கா தலைமையில் குழுவொன்று இறங்கியுள்ளது.

அத்தோடு, நாட்டின் குடிமக்களைப் பாதுகாக்கும் மனிதாபிமானப் போரினால் அரசு ஈடுபட்டதாகக் கூறும் அஸ்கிரிய பீடாதிபதி உடகம புத்தரகித்த தேரர், இறுதிப் போரில் மனிதஉரிமை மீறல்களில் இராணுவம்ஈடுபடவில்லையென்று வியாக்கியானம் வழங்குகிறார்.

மின்சாரக் கதிரையில் இருத்தினாலும், தனது படையினரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என மகிந்தர் இராஜபக்ச கூறுவதை தேரர் புரிந்து கொள்ளவில்லை போல் தெரிகிறது.

படையினரைக் காப்பாற்ற சிங்களம் ஓரணியில் திரள்கிறது.

அதற்கு முண்டு கொடுக்க பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, இலங்கையின் உள் விவகாரங்களை அனைத்துலக சமூகம் தலையீடு செய்யக்கூடாதென பாலஸ்தீன அரசு அவசரப்பட்டு அறிக்கை வெளியிடுவதையும் நோக்க வேண்டும்.

தமது விடுதலைக்காக சர்வதேச சமூகம் தலையிட வேண்டுமெனக் கையேந்தும் பாலஸ்தீன அரசு, இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளை உள்நாட்டு விவகாரங்களென்று கூறுவது தான் வேடிக்கையாக இருக்கிறது.

**திட்டமிடப்பட்ட இன அழிப்பினை போரில் நிகழ்ந்த குற்றங்களென குறுகிய வட்டத்துக்குள் அடக்க முற்பட்டாலும் இறுதியில், நடந்தவை யாவும் இனப்படுகொலை தான் என்று முடிவுரை எழுதப்பட்ட வரலாற்றினை மறந்து விட முடியாது**

பிறிதொரு சமூகத்தின் வலிகளைப் புரிந்து கொள்ள இயலாதோர் சொந்த விடுதலைக்காக எவ்வாறு போராடுவார்கள் என்கிற கேள்வி எழுகிறது.

ஐ.நா வின் இலங்கைக்கான பிரதிநிதியாக முன்பு கடமையாற்றிய கோடன் வைஸ் (Gordon weiss) அவர்கள், சேரபிரிநிகா கணங்கள் (SREBRENICA) என்று முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை ஒப்பீடு செய்த விவகாரத்தை, உலகிலுள்ள ஒடுக்கப்படும் இனங்கள் புரிந்து கொள்வது நல்லது.

யூலை 1995இல் பொஸ்னியாவிலுள்ள சேரபிரிநிகா என்ற இடத்தில் ஜெனரல் ரட்கோ மலடிச் (RATKO MLADIC) தலைமை தாங்கிய ஸ்கோப்பியன்ஸ் (SCORPIANS) என்கிற சேர்பிய விசேட படையணிகளால் 8100 பொஸ்னிய முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்ட கோர நிகழ்வினை பாலஸ்தீன இயக்கம் எவ்வாறு மறந்தது என்பது ஆச்சரியமான விடயம்.

இதே படைகள் தான் கொசோவாவிலும் 1999இல் போர்க்குற்றங்கள் புரிந்தன.

திட்டமிடப்பட்ட இன அழிப்பினை போரில் நிகழ்ந்த குற்றங்களென குறுகிய வட்டத்துக்குள் அடக்க முற்பட்டாலும் இறுதியில், நடந்தவை யாவும் இனப்படுகொலை தான் என்று முடிவுரை எழுதப்பட்ட வரலாற்றினை மறந்து விட முடியாது.

தற்போது துண்டு துண்டாக வெளிவரும் ஐ.நா அறிக்கையில், கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை, தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 2008 இலிருந்து 13 மே 2009 வரையான காலப் பகுதியில் 7721 பேர் கொல்லப்பட்டும், 18, 479 பேர் காயமடைந்ததாகவும், நிபுணர் குழு அறிக்கை குறிப்பிடுகிறது.

மே 13 இலிருந்து 18 வரை நிகழ்ந்த படுகொலை எண்ணிக்கையில் அதிகமாகவிருக்குமென்பதே நிபுணர் குழுவினரின் கணிப்பு.

அதே வேளை இரும்புத்திரை போட்டு, சிங்களம் நிகழ்த்திய மௌன யுத்தத்தில் நடைபெற்ற படுகொலைகள், வெளியுலகின் பார்வைக்கு தெரியவரவில்லையென்று ஆதங்கப்படுகிறார் கோடன் வைஸ்

**ஆகஸ்ட் 2008 இலிருந்து 13 மே 2009 வரையான காலப் பகுதியில் 7721 பேர் கொல்லப்பட்டும், 18,479 பேர் காயமடைந்ததாகவும், நிபுணர் குழு அறிக்கை குறிப்பிடுகிறது.**

ஆகவே இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை எவ்வாறு கசிந்தது என்கிற விவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து, அதனை உலகின் முன்னால் வெளிப்படுத்துவதே ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனின் தலையாய பணி.

இவை தவிர, இலங்கை அரசின் பதிலறிக்கைக்கு காத்திராமல், தமது அதிகாரத்துக்கு உட்பட்ட சகல நடவடிக்கைகளையும் பான். கீ. மூன் மேற்கொள்ள வேண்டுமென்பதே வலி சுமக்கும் ஈழத்தமிழினத்தின் வேண்டுகோளாக இருக்கிறது.

*வெற்றிச் சங்கூதும் வேளை ! விரைந்திடும் நாளை!*

ஒரு பேப்பர் ORU PAPER




நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

**020 7183 0367**









**புதிய சட்டிலைட்**
**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தாற்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# இனப்படுகொலை மாற்றத்திற்கான நீதி மற்றும் "சிறிலங்கன்" அடையாளம்




**கோபி**
*ஒரு பேப்பர்*

நியுயோர்க் நகரில் உள்ள Syracuse பல்கலைக்கழகத்தின் தென்னாசிய கற்கை மையம் இலங்கைத் தீவில் அமைதியை கட்டியெழுப்புதல் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கினை அண்மையில் நடாத்தியது. இக்கருத்தரங்கில் ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறிலங்காவின் வதிவிடப்பிரதிநிதி பாலித்த கோகண, அமெரிக்காவில் வசிக்கும் தமிழ் செயற்பாட்டாளர் மருத்துவர் காருண்யன் அருளானந்தம் ஆகியோர் முறையே சிறிலங்கா அரச தரப்பினதும், தமிழர் தரப்பினதும் கருத்துகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியின் ஒளிப்பதிவு நேரடியாக இணைய காணொளி மூலம் ஒளிபரப்பப்பட்டதனால் அதனை பார்க்க முடிந்தது. போருக்கு பின்னரான இலங்கைத்தீவில் அமைதியை கட்டியெழுப்புவதும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கதை ஏற்படுத்துவதும் இக்கருத்தரங்கின் கருப்பொருளாக அமைந்திருந்தது. இனங்களுக்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் ஒரு அம்சமாக தமிழ், சிங்கள இனங்களை பொதுவில் "சிறிலங்கா" தேசிய அடையாளத்திற்குள் கொண்டு வருவது பற்றி இந்நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்த கல்வியாளர்கள் கவனம் செலுத்திவருவது அவர்களது பேச்சில் வெளிப்பட்டது. இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துகளை நோக்குவதற்கு முன்பதாக இதுபோன்ற வேறு சில முயற்சிகள்பற்றி கூற வேண்டியுள்ளது.

இலங்கைத்தீவில் வசிக்கும் மக்களையும், புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ், சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களையும் "சிறிலங்கன்" தேசிய இனத்தவர்களாக அடையாளப்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை களையமுடியும், அதன் மூலம் பிரிவினைவாதக் கருத்துகளை கருவறுக்க முடியும் என்ற நம்பிக்கையில் மேற்குலகத்திலுள்ள பல்வேறு அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது தொடர்பில், International Alert, Berghof Foundation, Royal Commonwealth Society போன்ற அரசுசாரா அமைப்புகள், கருத்தரங்குகளையும் ஆய்வுகளையும் நடாத்தியுள்ளன. இவ்வாறான முயற்சிகள் போர் முடிவடைவதற்கு முன்பதாகவே, அதுவும் சமாதானகாலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. 2008ம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் "The Sri Lankan Diaspora – The Way Forward" என்ற தலைப்பில் மலேசியா பல்கலைக்கழகத்தில் ஐந்துநாள் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் கல்வியாளர்கள் சிலர் கலந்து கொண்டனர் என்பதும் இம்மாநாட்டின் தொடர்பாளர்களாக லண்டனிலிருந்து இயங்கும் தமிழ் தகவல் நடுவம் செயற்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, சுவீடன் நாட்டு நிறுவனம் ஒன்று இன்னொரு வகையான பரிசோதனை முயற்சியை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. அதன்படி, வடக்கிலிருந்து தழிழ் இளையவர்கள் சிலரையும், தெற்கிலிருந்து சிங்கள இளையவர்கள் சிலரையும் ஒரு இடத்தில் சில நாட்கள் தங்க வைத்து, வதிவிட பயிற்சிகள் வழங்குவதன் மூலம் அவர்களது நடத்தை அவதானிக்கப்பட்டது. அங்கு அவதானிக்கப்பட்ட விடயங்கள் இன நல்லிணக்கம் சாத்தியப்பட்டு வருவதற்கு சாதகமாக சமிக்ஜைகளை கொண்டிருந்தனவாம். இதுவும் சமாதான காலத்தில் நடைபெற்ற ஒரு முயற்சியாகும்.

மேற்கத்தையவர்களைப் பொறுத்தவரையில், சிறிய தீவு ஒன்றில் வாழும் ஒரே இன மூலத்தைக் கொண்ட இரண்டு இனங்களைச் சேர்ந்த மக்களை ஒரே தேசிய இனமாக வகைப்படுத்துவதில் அவர்களுக்கு குழப்பமில்லை. இன்னொரு வகையில் கூறுவதானால், இவ்விரு தேசிய இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளை அவர்களால் இலகுவில் அவதானிக்க முடியாதிருக்கிறது. இரண்டு இனங்களையும் ஒரே அடையாளத்தின் கீழ் கொண்டுவருவதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியும் என அவர்கள் உண்மையிலேயே நம்புகிறார்கள்.

சிறிலங்கா அரசாங்கமும், சிங்களப் பேரினவாதிகளும் இம்முயற்சிக்கு வெளிப்படையான ஆதரவு வழங்குவதாகவே காட்டி கொள்கிறார்கள். ஆகவே தமிழர் தரப்பிலுள்ள கடுங்கோட்பாளர்களே இம்முயற்சிக்கு தடையாக உள்ளதாகவும், அதுவும் தமிழ் அலைந்துழல்வு மக்களிடையேயிருந்து இத்தகைய எதிர்ப்பு எழுவதால், அவர்கள் நடைமுறை யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளதாக இவர்களால் சித்தரிக்கப்படுகிறது. இவ்வாறான தப்பபிராயத்தை ஏற்படுத்துவதில் உள்நோக்கம் கொண்ட சில தமிழ் கல்வியாளர்களும், அரசியல்வாதிகளும் ஒரு காரணமாக உள்ளனர். தேசியம் தொடர்பில் ஏட்டுக் கல்வியை புகட்டத் தலைப்படும் எழுத்தாளர்களும் இதற்குள் அடக்குவர்.

உண்மையில், சிறிலங்கா தேசிய அடையாளத்தை நிலைநாட்ட முயலும் சிங்களப்பேரினவாதத்தின் முயற்சி என்பது சிங்கள மேலாதிக்கத்தின் கீழ் மற்றய இனங்களை வலிந்து கொண்டுவரும் நடவடிக்கை என்பதனை மேற்கத்தைய ஆய்வாளர்கள் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை. மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் செயற்பாடுகளை இன்னொருவிதமாக விளங்கிக்கொள்ள முடிகிறது. சிறிலங்கா அரசின் அனுமதியுடன் தீவில் ஏதாவது செய்ய வேண்டுமானால், இத்தகைய அணுகுமுறையே இவர்கள் கைக்கொள்ள வேண்டியிருக்கும். அதைவிடுத்து, மனிதவுரிமை மீறல்களை கண்காணிக்கப்போகிறோம், சமஸ்டித்தீர்வை ஏற்படுத்தப்போகிறோம் என்று தீவிற்குள் காலடி வைக்க சிறிலங்கா அரசாங்கம் யாரையும் அனுமதிக்கப்போதில்லை.

> பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து மாறிமாறி வரும் சிங்கள அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் இனப்படு கொலையினை மறைத்துவிட்டு, படிநிலை மாற்றத்திற்கான நீதி (transitional justice) என்ற அடிப்படையில் புனர்வாழ்வு, பொருண்மிய மேம்பாடு என்ற தளத்தில் செயற்படவே சிறிலங்கா அரசாங்கம் முற்படுகிறது.

இனி, Syracuse University இல் நடைபெற்ற கருதரங்குக்கு வருவோம். சிறிலங்கா அரச தரப்பின் கருத்துகளை பகிரவந்த பாலித்த கோகண, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 2009, மே 18க்கு பின்னரான காலத்தில் வன்முறைகள் முழுவதுமாக ஓய்ந்துவிட்டதாகவும், பொருண்மிய மேம்பாடு, மறுவாழ்வு நடவடிக்கைகள் முழு மூச்சுடன் நடைபெற்று வருவதாக, வழமையான அரச பரப்புரையை அவர் முன்வைத்தார். போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணை, பொறுப்புடமையை (accountability) நிலைநாட்டுவது பற்றியோ, அரசியல் தீர்வுக்கான வழிவகைகள் பற்றியோ அவர் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் ரணங்களை கிழறுவதனால் எதுவித பயனும் கிடைக்கவில்லை எனத்தெரிவித்திருந்தார் என்பதிலிருந்து, போர்க்குற்றங்களை மறைத்துவிட எத்தனிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு அவரது பேச்சில் வெளிப்பட்டது.

மருத்துவர் காருண்யன் அருளானந்தம், தமதுரையில், வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு இழைக்கபட்டுவரும் அநீதிகளை எடுத்துரைத்ததோடு, தீர்விற்கான தனது ஆலோசனைகளாக, போரில் நடைபெற்றவைபற்றிய விசாரணைகள், பொறுப்புடமை என்பன அத்தியாவசியமானது என வலியுறுத்தினார். இனப்படுகொலை பற்றி அவர் நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும், அத்தகைய சம்பவங்களை பட்டியலிட்டு ஒளிப்படங்களுடன் காட்டியிருந்தார்.

பாலித்த தனது உரையில் குறிப்பிட்ட ஒரு விடயம் இங்கு கவனிக்கத்தக்கது. அது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு சிங்கள இனம் எவ்வாறு தடையாக உள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. தீவில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள இனத்தவர் இன்னமும் சிறுபான்மையினருக்குரிய உளவியல் சிக்கலில் உள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். சிங்கள இனத்தினரின் இத்தகைய அச்ச உணர்வுக்கு, தீவின் வடக்கு முனையிலிருந்து குறுகிய நீர்ப்பரப்பால் பிரிக்கப்பட்டிருக்கும் அறுபது மில்லியன் தமிழர்களே காரணமாக இருக்கிறார்கள் என்பதனை விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் சிங்கள இனத்தவர் அச்சப்படும் விரிந்த தமிழினம் அல்லது நாடுகடந்த தமிழ்த் தேசியம் (Pan Tamil / Transnational Tamil Nation) பற்றியோ, அல்லது இந்த அடையாளத்தை வரித்துக்கொள்வதில் தமிழர்கள் நாட்டம் கொண்டுள்ளனர் என்பதனையோ இந்த கருத்தரங்கில், அல்லது முன்னர் குறிப்பிட்ட ஆய்வுகளில் கவனத்தில் எடுக்கத்தவறியுள்ளனர்

நீண்ட வரலாற்றினைக் கொண்ட தமிழ் - சிங்கள தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டிற்கு, நீதியான தீர்வினை ஏற்படுத்தாமல், செயற்கையான அணுகுமுறைகளினால் தீர்த்து வைக்க முடியாது. யூத - பாலஸ்தீன முரண்பாட்டுக்கு இஸ்ரேலியர் என்ற பொது அடையாளம் எவ்வாறு தீர்வினைதராதோ, அதே நிலைதான் இலங்கைத் தீவு விடயத்திலும் உள்ளது.

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து மாறிமாறி வரும் சிங்கள அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலையினை மறைத்துவிட்டு, படிநிலை மாற்றத்திற்கான நீதி (transitional justice) என்ற அடிப்படையில் புனர்வாழ்வு, பொருண்மிய மேம்பாடு என்ற தளத்தில் செயற்படவே சிறிலங்கா அரசாங்கம் முற்படுகிறது. இம்முயற்சிக்கு சில நாடுகளும், அமைப்புகளும் உதவி வருகின்றன. ஆனால் இனப்படுகொலை தொடர்பான அனைத்துலக மட்டத்திலனா பக்சார் பற்ற விசாரணை நடாத்தப்படுவதன் மூலமே மூலவேராக அமைந்துள்ள பிரச்சனைகளை சர்வதேச சமூகத்தினரால் இனங்காண முடியும். அதற்கு பின்னரே அவர்களால் நியாயமான தீர்வு பற்றி பேசமுடியும்.

Syracuse கருத்தரங்கின் முடிவுரையை வழங்கிய பேராசிரியர் அலெக்ஸ் தேவரஞ்சன், போர் முடிவிற்கு வந்ததமையுடன் நாடு பிரிந்துவிடும் ஆபத்து நீங்கியுள்ளதாகவும், ஆனால் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த இடைவெளியை வலிந்து திணிக்கும் மேலாதிக்க நடவடிக்கைகளால் 0குறைக்க முடியாது என்பதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
BARNET 020 8216 2520
CROYDON 020 8150 9950
CITY OF LONDON 020 7 183 2696
CAMBS 01354 707 911
BBK PARTNERSHIP
www.bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
Accountancy / Audit
Tax Solutions
Company Formation
Confidential Tax Consultancy
Investigations / Tax Mitigation
Bankruptcy / IVA
Business Startup & Consultancy
Solicitors Rules Audit
Payroll / VAT / Book keeping
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS
R3

# ஆறடி நீளம்




**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

லண்டனில் ஒரு சுடலையின் வாசலில் நின்று கொண்டு இருந்தேன். அது ஒரு குளிர்கால காலை நேரம், அத்தோடு வானமே திறந்தது போல மழை பெய்து கொண்டிருந்தது. ஊரில் பெண்கள் சுடலைக்கு போகக்கூடாது என்பர். ஒரேஇனம் என்பதால் பெண்ணைப் பேய் பிடித்துவிடும் என்று அதற்கு என் நண்பன் விளக்கம் சொன்னான். மழையில்நனைந்தபடி வாசலைகடந்துதனியே நடக்கத்தொடங்கினேன். என்னைச் சுற்றி இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருந்தார்கள் என் கண்ணில்பட்ட முதலாவது கல்லறையில் 1885 என்று போடப்பட்டிருந்தது. தொழில்நுட்பத்தில் எத்தனையோ மாற்றங்கள் வந்தாலும் இறப்புப் பற்றிய மனிதனின் சிந்தனையில் அவ்வளவு மாற்றங்கள் வரவில்லை என்று எண்ணத் தோன்றியது. மழை என்பதாலோ என்னவோ ஒருவரும் இன்றி நான் தனிய, பரந்த, கண்ணுக்கெட்டிய தூரம்வரை விரிந்திருக்கும் கல்லறைகளில் நடுவே நின்றிருப்பது, எனது சிந்தனையை குவிய வைத்தது. இந்திய இராணுவ பிரச்சனையின் போது எங்கள் மாமாவீட்டு வாசலில் இராணுவம் சுடப்பட்டு இறந்தவரை அதிலேயே எரித்ததும், ஊரே மயானம் போன்று ஆள்அரவமின்றி இருந்ததும். பிறகு நிலமை சரிவந்து அவ்வீதியால் போகும் நேரம் எல்லாம் அந்நிலத்தில் இருந்த கருமை நிறம் எனக்கு அந்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தது.

நான் இப்போ அக்கல்லறைகளில் மத்திய பகுதியில் நின்றிருந்தேன். அழகான, அமைதியொன்று நிலவியது. மிகக்கவனமாக நிலத்தோடு நிலமாக இருந்த ஒரு கல்லறையின் மீது மிதிக்காது நடந்தேன். எண்ணும்போது ஆச்சரியமாக இருந்தது மனிதர்கள் இருக்கும் போது கொடுக்காத மரியாதையையும், கரிசனத்தையும் ஏன் ஒருவர் இறந்தபிறகு கொடுக்கிறார்கள் என்று. இருக்கும் போது காட்டினால் அது அவர்களை சிலநேரம் இன்னம் கொஞ்சநாளைக்கு இருக்க வைத்திருக்கும்.. சில, பளிச்சென்று, சின்னரோசாசெடியோடு அழகாக, சில கவனிப்பாரின்றி, மங்கி, கொஞ்சம் உடைந்து போய் இருந்தது. ஒருவேளை பாராமரிக்கும் அன்பானவர்களும் இறந்துபோயிருக்கலாம். ஒன்றுமட்டும் நிச்சயம் அவர்கள் இந்த நாட்டைவிட்டு அகதியாக விரட்டப்பட்டிருக்க மாட்டார்கள்.

கல்லறைகளுக்கும் உயிர் உள்ளது. எமது மாவீரர்கல்லறைகளுக்கு ஊடாக நடக்கும் போது எமக்குள் நடக்கும் இரசாயணமாற்றத்தை விபரிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. இதுஉண்மையில் விந்தையிலும் விந்தைதான். கல்லறைகளுக்காக வாழும் மனிதர்களும் உள்ளார்கள். தனது ஒரே ஒருமகன் விடுதலைப் போரில் மரணித்தபோது எனது சிறியதாயும், தகப்பனும் அப்படித்தான் இருந்தார்கள்.

அவர்கள் வெளிநாடு வர சந்தர்பம்இருந்தும், அவனது கல்லறைக்கு போய் அவனை காண்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். பின்பு 2009 மே10ம் திகதி அடாதமழையிலும், சீறிலங்காஇராணுவம் விடாது அடித்த எறிகணைத்தாக்குதலில் முள்ளிவாய்காலில் ஒரே இரவில் கொல்லப்பட்ட 171பொதுமக்களில், அவர்களும்கொல்லப்பட்டுவிட்டார்கள்.

கல்லறைகளை சுத்திப் பார்கிறேன். சிறுவர்களுக்கென தனியான ஒருபகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. இறப்புக்கு வயது வித்தியாசம் இல்லை. ஒருகல்லறையின்மேல் "Alittlevoice is hushed and a little Angel is born, All our love Mummy, Daddy and family" என்று எழுதப்பட்டிருந்தது. Mummy, Daddy என்ற சொற்கள் அந்த குழந்தை கூப்பிடுவது போல ஓர் உணர்வை ஏற்படுத்தி, நெஞ்சை நெகிழ வைத்தது. இது எல்லாம் முகம் தெரிந்த கல்லறைகள். முகம் தெரியாத எம்மக்களின் கல்லறைகளை நினைக்கிறேன். காணாமல் போனவர்கள் எத்தனை பேர்.

பத்தாம் வகுப்பில் என்னோடு படித்த குமரகுருபரன் ஆமி எரியூட்டிய கரையோர வள்ளங்களையும், வலைகளையும் அணைத்து உதவிசெய்ய போனவன், ஆமியால் பிடித்துக் கொண்டுபோகப்பட்டான் என்று கதை. இது போல எத்தனை ஆண்கள், பெண்கள். கொழுப்பில் அதிகாலை இராணுவத்தால் கலைக்கப்பட்டபோது, தான் பிடிபட்டு முகம் தெரிந்தால் தான் பழகிய, இருந்த, தெரிந்த என்று எல்லோரையும் இராணுவம் விசாரணை என்ற பெயரில் கொன்றொழித்துவிடும் என ஒரு பேக்கறிக்குள் ஓடிப் போறணைக்குள் விழுந்து தன்னை மாய்ந்து கொண்டான் ஒரு வேவுப் புலிவீரன். கல்லறையே இல்லாது காற்றோடு கலந்தவர்கள் எத்தனை பேர்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைசாத்திடப்பட்ட பல ஐரோப்பிய ஒப்பந்தங்கள் முதலாம், இரண்டாம் உலகப்போரின்போது கொல்லப்பட்ட வீரர்களின் கல்லறைகளை பாதுகாக்கவெனக் கொண்டுவரப்பட்டன. பிரான்ஸ், ஜேர்மன் அரசுக்கிடையிலான 1871 ம் ஆண்டு Treaty of Frankfurt இல் இருந்து 1966ம் ஆண்டு France – German உடன்படிக்கை வரை பல மனிதாபிமான அடிப்படையினான, இறந்த போர்வீரர்களுக்கு இருதரப்பிலும் மதிப்பளிக்கும் வகையில் உருவாக்கிப் பேணப்பட்டது. சில பொதுவான புதைகுழிகள் கூட பல ஆண்டுகளுக்கு பின் கண்டுபிடிக்கப்பட்டன. 2007இல் பிரித்தானிய, அவுஸ்ரேலிய வீரர்களின் புதைகுழி ஒன்று பிரான்சில் Fromelles க்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

அது 1916 இல் ஜேர்மனிகளால் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. உலகவரலாற்றில், கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான புலிவீரர்களினதும், நாட்டுப்பற்றாளர்களினதும் கல்லறைகளை, அரசாங்க கட்டளையுடன் இடித்து, தரைமட்டமாக்கி அதன் மேல் தமது இராணுவமுகாமை நிறுவும், மிகவும் கண்ணியம் குறைவான, துவேசம்மிக்க செயலை, இந்த 2001 நூற்றாண்டில் செய்ய, சீறிலங்கா அரசு ஒன்றாலேயே முடியும்.

அங்கு இறுமாப்போடு பவனிவரும் இராணுவத்தை பார்க்க எனக்கு ஒன்று மட்டும் நன்றாக விளங்குகிறது. சீறிலங்காவின் பொருளாதார சீர்கேட்டுக்கும், சிங்களத்தின் அழிவுக்கும், இன்றையநிலைக்கும், காரணம் அவர்களின் சிங்கள,பௌத்த ஏகாதிபத்திய வெறிதான், வேறு ஒரு புறக்காரணியும் அல்ல. இறந்தவர்களின் கல்லறைகளை விட்டு வைத்து, ஒரு தாயின் மனதை வெல்ல முடியாதவர்கள். என்னென்று உலகத் தமிழர்களின் மனதை வெல்லப்போகிறார்கள். எல்லாம் நன்மைக்கே. தமிழ் ஈழம் நிச்சயம்.

உடல் மழையில் நனைந்தாலும், உள்ளம் உற்சாகமாக காரை நோக்கி நடக்கிறேன்.




**Prime Citizenship Test**

**முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்**

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

புதுவருட சலுகையாக
£ 165 .00 மட்டுமே

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்

நாங்கள் வார இறுதி வகுப்புக்களும் நடாத்துகின்றோம்



**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

**You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days**

**New Branches opened in** Hounslow, Wembley, and Birmingham

Call us on
Tel: **020 8150 9953**
Mob: **075 3893 3261**

www.prime citizenshiptest.co.uk

**Head Office**
14 Lombard Business Park,
2 Purely Way,
Croydon CR0 3JP

**North London Branch**
104 Millennium Business
Centre Humber Road
Staple Corner NW2 6DW

**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**

# பதவிக்கு விலை போகும் பரதேசித் தமிழர்கள்

**வ.கணேஸ்**
*(ஒருபேப்பருக்காக)*

ஈழத்தமிழர்கள் சுயநலம் மிக்கவர்களாகவும், பதவி மோகம் கொண்டவர்களாகவும், இவைகளுக்காக எதிரி களையே தலையில் தூக்கி வைத்து கொண்டாட கூடியவர்களாகவும், இருப்பதனால்தான் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றார்கள். ஈழத்தமிழனின் குணம் அறிந்துதானே சோனியா றோக்காரர்களை வைத்து G.T.Fஐ சந்தித்து அவர்கள் மூலமாக நல்ல றிக்கை விடப்பட்டு B.B.C அடங்கலாக இந்திய பிராமணிய பத்திரிகைகள் எல்லாம் G.T.Fன் அன்பு அறிக்கையை பந்தி பந்தியாக எழுதினார்கள். எண்பதா யிரம் மக்கள் துடித்து சாகும் போது கூட இரங்காத B.B.C கூட G.T.Fன் அறிக்கையை கண்டவுடன் அதிர்ந்துபோய் அறிவித்தது.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் உக்கிரம் பெற்றதும், மக்கள் கொத்துக்கொத்தாக இறக்கும் போதும் கூட சோனியா இதைத்தான் சொன்னார். ஈழத்தமிழர்கள் இலங் கைத்தீவில் சகல சௌக்கியங்களும் பெற்று பெரு வாழ்வு வாழ்வதற்காகத்தான் எல்லாம் நடக்கின்றதென்று. இவர் இலண்டன் வந்து பத்து நிமிடத்திலேயே பறத்தமி ழரை ஏமாற்ற முடியுமென்று கண்டதன்பின் மிகவும் தெளிவு பெற்று தமிழகம் போயும் அதே பாடலை பாடி யிருக்கின்றார். அங்கேயும் பதவி ஆசை கொண்ட பச்சை கிழவனும் கண்ணில் கண்டேன் உண்மை புலர்ந்தது, இடையை கண்டேன் உணர்ச்சி வந்தது என்று புலம்பி யிருக்கின்றார்.

இந்த பிசாசுகளெல்லாம் எங்களை தேவைப்படும் போது அரவணைப்பார்கள். பின் எதிராளி தேவைப்படும் போது எங்களுக்கு அடிப்பார்கள். ஆனால் எங்கள் தலை யாரிகளோ அவர்களது சந்தர்ப்பவாத அரசியல் புரியாது, தாங்கள் ஏமாறுவது போதாதென்று, மக்களையும் ஏமாற்றுகின்றார்கள். றோவின் சித்து விளையாட்டுக்கு விலை போகின்றார்கள். சிங்களவன் எங்களை அடிமை களாக்க எத்தனையோ சட்ட வரைபுகளை நிறைவேற்றி யிருக்கின்றான். அப்பவும் பதவி ஆசையில் படுத்திருந் தவர்கள்தான் எங்கள் தலைமைகள்.

ஆயுத போராட்டம் ஆரம்பமான காலம் தொட்டு சிங்கள இராணுவம் ஊர் ஊராய் சுற்றிவளைத்து பத்தோ பதினைந் தோ இளைஞர்களை கட்டி இழுத்து வந்து முட்டுக்காலில் இருக்கவிட்டு பின்பக்கமாக நின்று பிடரிகளில் சுட்டு வீழ்த்திவிட்டு, நாலைந்து பெண்களிடமும் தங்கள் கைங் காரியத்தை காட்டி விட்டு போவார்கள். பின்பு கொஞ்சம் மேலே போய் வீடுகளோடும் வாகனங்களோடும் சேர்த்து சுட்டெரித்தார்கள். இப்படியே கூடிக்கூடி எரிகுண்டுகள், இரசாயனக்குண்டுகள் வரைக்கும் வந்து இறுதியில் பங்கருக்குள் இருந்தவர்களையும் சேர்த்து மண்ணோடு மண்ணாக மூடிவிட்டார்கள்.

ஆனால் எம்மவரோ பதவிகளுக்காக அடிபடுகிறார்கள். இலங்கைத்தீவில் எஞ்சிய தமிழரின் தலைகளும் சரி, இங்கே புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தலைகளும் சரி, முக்கியமாக முள்ளிவாய்க்கால் முடிவுக்குப்பின் புலம் பெயர் நாடுகளில் நாளுக்கு நாள் நாங்கள் பதவிச் சண்டை களை தானே பார்க்கின்றோம். ஓர் அமைப் பொன்றில் ஒரு தமிழர் அங்கத்தவராக அமர்ந்து விட்டால் போதும் அவரது நினைப்புகளோ எங்கேயோ போய் விடுகின்றது. 'யார் குத்தினாலும் அரிசி யானால் சரி' என்று நொந்து போன தமிழ்ச்சனம் ஆதரவு வழங்கினால் இவர் கள் ஏதோ அந்தரத்தில் பறப்பதாக நினைக்கின்றார்கள்.

இலண்டனில் வேற்றின மக்கள் ஊர்வலமோ, ஆர்ப் பாட்டமோ நடத்தும்போது, அதை ஒழுங்கு செய்த வர்களும் கொடிபிடித்து போவதை பார்ப்பீர்கள். ஆனால் நம்மவர்கள் மட்டும் ஒழுங்கு செய்துவிட்டு அங்காங்கே கோர்ட்டு சூட்டுடன் நின்று தங்களை பெரியவர்களாக காட்டி சுயவிளம்பரம் தேடுவார்கள்.

குறிப்பாக 2009க்கு பின் புலம்பெயர் நாடுகளில் பதவிச் சண்டை அதிகரித்து கொண்டே போகின்றது. நாடு கடந்த அரசில் இருந்து பிரிந்தவர்கள் இங்கே நாறடித்தது போதாதென்று இந்தியா வரை சென்று நாத்திவிட்டு வந்தி ருக்கிறார்கள். நொந்து போன மக்களுக்கு ஏதாவதொரு விடிவு வேண்டும், இனத்தை அழித்தவன் கழுத்தை அறுக்க வேண்டும், என்று உங்களுக்கு ஆதரவு தந்தால் நீங்கள் இனத்தையே விற்கின்றீர்கள்.

ஒருவருக்கொருவர் எச்சில் உமிழ்வது. அடித்து மண் டையை பிளப்பது. படுகேவலமாக ஒருவரைஒருவர் விமர்சிப்பது. வாசிப்பவர்கள் ஒன்றும் மந்தைகள் கிடை யாது. பதவி மோகத்தால்தான் பறையடிக்கிறீர்கள் என்று பார்த்தாலே புரியும். ஆனால் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள், உங்களது இந்த கேவலமான வேலை களால் நாளுக்கு நாள் தேசியத்துக்கு ஆதரவான மக்களை கொஞ்சம் கொஞ்சமாக வெளியே கிள்ளி வீசிக் கொண் டிருக்கிறீர்கள்.

தமிழனுக்கு எப்போது இந்த பதவி ஆசைகள் அகன்று எமது எஞ்சிய மக்களையேனும் சிங்களத்தின் சிறைகளில் இருந்து காப்பாற்ற வேண்டுமேன்று சுத்தமாய் சுய நலம் துறந்து புறப்படுகின்றானோ அன்றுதான் நமது விடு தலைக்கான ஆரம்ப புள்ளியாக அமையும். G.T.F நாடு கடந்த அரசை சாடுவது, B.B.C, G.T.Fஐ சாடுவது, இளையோர் புறப்பட்டால் முதியோருக்கு முதுகுவலி, இப்படியே நீங்கள் இருப்பதனால்த்தானே உங்களுக் குள்ளேயே றோக்காரனும் சிங்கள உளவாளிகளும் புக முடிகிறது.

ஒரு அமைப்பென்றிருந்தால் கருத்து வேறுபாடு வருவ தொன்றும் புதினமில்லையே. ஆனாலும் அதை பேசி தீர்க்கின்ற பக்குவம் உங்களுக்குள் இருக்க வேண்டும். அது உங்களிடம் இல்லாத பட்சத்தில் நீங்கள் அமைப் பொன்றில் அங்கம் வகிப்பதற்கு தகுதி உடையவர்களாக இருக்க முடியாது. உங்களது இந்த பதவி இழுபறி சண்டை களால் நொந்து போன எமது இனத்தை நீங்கள் மென் மேலும் நோகடிக்கிறீர்கள்.

சந்தர்ப்ப வசத்தால் வடகிழக்கில் சிங்களவனோடு அண்டி வாழ்வதாக நடித்தாலும் ஒவ்வொரு தமிழனும் விடிவிலேயே விருப்பம் கொண்டிருக்கின்றான். ஆகவே உங்கள் வீட்டில் ஒரு பிரச்சினை வந்துவிட்டால் கணவனை மனைவியும், மனைவியை கணவனும் தெருத்தெருவாக விமர்சித்தா திரிகின்றீர்கள்? பிள்ளைகளுக்கு தெரியாமல் பிரச்சினையை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து முடித்து வைப்பீர்கள்.

**ஆனால் எம்மவரோ பதவிகளுக்காக அடிபடு கிறார்கள். இலங்கைத்தீவில் எஞ்சிய தமிழரின் தலைகளும் சரி, இங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தலைகளும் சரி, முக்கியமாக முள்ளிவாய்க்கால் முடிவுக் குப்பின் புலம் பெயர் நாடுகளில் நாளுக்கு நாள் நாங்கள் பதவிச் சண்டைகளைதானே பார்க்கின்றோம்.**

நீங்கள் பதவிக்காகவும், பவுசுக்காகவும் ஆளுக்காள் பல்லுடைபடுவதால் தேசியத்திற்கான ஆதரவு மட்டும் குறைந்து விடுவதில்லை, மேலாக சிங்களவனுக்கும் பஞ்சாமிர்தம் பருகிய மாதிரித்தான் இருக்கும். 'பூனை க்கு விளையாட்டாம் சுண்டெலிக்கு சீவன் போகுதாம்?' என்பது போல் நீங்கள் பதவிச்சண்டையில் திமி ரெடுத்தாட தமிழர்கள் நாளுக்கு நாள் ஒவ்வொன்றாய் இழந்து கடைசியில் உயிரையும் விட்டு விடுவார்கள்.

பன்னாடை தமிழருக்கு பதவி மோகம் மட்டும் இல்லாது இருக்குமானால், முழுத்தமிழினமும் பெருமை கொள்ளும்படி முப்பது வருடத்துக்கு முன்னரே தமி ழனுக்கென்று ஒரு நாடு கிடைத்திருக்கும். உங்களுக்கு மக்கள் தந்த பதவியை பலப்படுத்துங்கள். பதவிகளாக வந்துசேரும். ஆனால் நீங்களோ பதவியொன்று கிடைத்து விட்டால் போதும் உங்களை யாரும் அணுக முடியாது. தலைக்கனம் உங்கள் தலைகளில் ஏறி உட்கார்ந்துவிடும்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை மூனிடம் கையளிக் கப்பட்டுவிட்டது. அதிலொரு பிரதி சிங்களவனுக்கும் போய்விட்டது. ஆனால் எங்களுக்கென்று ஒரு பிரதி இல்லையா? கொன்றவனுக்கு கொப்பி செத்தவனுக்கு செருப்பா? நீங்கள் இருக்கும் நிறுவனங்களை பலப் படுத்தி, நிபுணர் குழுவிடம் தொடர்பு கொண்டு தகுந்த ஆவணங்களை முன்நின்று சமர்ப்பித்திருந்தால் உங் களுக்கும் ஒரு பிரதி கிடைக்க உரிமை இருந்திருக்கும்.

நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள், தொண்டு நிறு வனங்கள், மன்னிப்பு சபை போன்றன மிகக்கொண்டு அவர்களுக்கு ஆவணங்களை கொடுத்தும், வாக்குமூலம் கொடுத்தும், எங்களுக்காக அறிக்கையை வெளியிடாமல் இனத்தை அழித்தவர்களுக்கு பிரதியை கொடுத்திரு க்கி றார்கள். இதற்கெல்லாம் உங்களுக்கு கோபம் வராது. ஆனால் நம்மவர்கள் ஏதாவது பேசிவிட்டால் போதும் வாரிக்கட்டி கொண்டு சண்டைக்கு புறப்பட்டு விடுவீர்கள்.

ஆகவே தயவுசெய்து நீங்கள் முன்நின்று தமிழர் களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்பினால் அடிதடியை விலக்கி வைத்து விட்டு, ஆக்கபூர்வமானவை நிறையவே உண்டு. அவைகளிலே உங்கள் கவனங்களை செலுத்தி, நற்காரியங்களை செய்து, நற்பெயரெடுங்கள். நல்ல பதவிகள் உங்களை தேடி வரும்.











பெற்றோர்களே!
உங்களது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் நாங்களும் பங்குகொள்ள விரும்புகிறோம். உங்களது பிள்ளைகளின் புகைப் படத்தையும் அவர்களுடைய பிறந்த திகதியையும் வாழ்த்துச் செய்தியையும் எங்களுக்கு முன்பதாகவே அனுப்பி வையுங்கள் அவை இங்கு பிரசுரமாகும்
ஒரு பேப்பர்






# ஐ.நா ஆலோசனைக் குழு அறிக்கை: இனக் கொலையா? போர்க் குற்றமா? வகை சொல்லலாமா?



THE UNITED FRIGGIN' NATIONS
உதவாக் கரை நாடுகள் சபை

**வேல். தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

ஐக்கிய நாடுகள் சபையின் செயலதிபர் பான் கீ மூன் இலங்கையில் நடந்த இறுதிப் போரின் போது நடந்தவை தொடர்பாக ஒரு வகைசொல்லல்(accountability)தேவை என்பதற்காக பல மனித உரிமை அமைப்புக்களின் வலியுறுத்தலின் பின் தனக்கு ஆலோசனை வழங்க ஒரு குழுவை அமைத்தார். பல இழுத்தடிப்புக்களிளின் வலியுறுத்தலின் பின் தனக்குஆலோசனை வழங்க ஒரு குழுவை அமைத்தார். பல இழுத்தடிப்புக்களின் பின்னர்இந்தக் குழு அமைக்கப்பட்டது இந்தோனேசியாவைச் சேர்ந்த முன்னாள் சட்டமா அதிபர் மர்சுகி டறுஸ்மன், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டவாளர், நீதியாளர் யஸ்மின் சூகா, அமெரிக்காவைச் சேர்ந்த சட்டத்துறைப் பேராசிரியர் ஸ்ரிவன்ரட்னர் ஆகியோர் இந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

## அறிக்கை வருமா என்ற சந்தேகம்

பான் கீ மூன் ஆலோசனைக் குழு அமைத்த போது ரஷ்யா எதிர்த்தது. ரஷ்ய எதிர்ப்பின் பின்னணியில் இந்தியா இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்பட்டது. இந்தக் குழுவிற்கு நான்கு மாத அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதுபோதாது என்று ஆரம்பத்தில் பலரும் கருதினர். எதிர்பார்த்தது போல் நான்கு மாதத்திற்கு மேல் குழு எடுத்தது. ஆலோசனைக் குழு அமைக்கப்பட்ட போது இந்தக் குழு எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும் என்று ஐநா பேச்சாளரிடம் கேட்கப்பட்டபோது அது அறிக்கை சமர்பிக்கலாம் அல்லது சமர்பிக்காமல் விடலாம் என்று தெரிவித்தது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. 122 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் 12 பக்கங்கள் மட்டுமே கொழும்பிலிருந்து கசிந்துள்ளது.

## கிருபாகரனின் புறக் கம்மாரிஸ்

பான் கீ மூன் ஆலோசனைக் குழு அமைத்த போது தமிழர்களுக்கான மனித உரிமைச் செயற்பாட்டாளராகிய பிரான்ஸ்சை சேர்ந்த கிருபாகரன் அவர்கள் தெரிவித்த கருத்து: இந்த ஆலோசனைக் குழு துருப்புச் சீட்டுக்கள் இருக்க மற்றச் சீட்டுக்கள் விளையாடி வெற்றி பெற்றது போல் அமையலாம் (புறக் கம்மாரிஸ்). அதாவது முடிவில் இலங்கை அரசிற்குப் பாராட்டுத் தெரிவித்து விட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் போர் குற்றம் புரிந்தார்கள் என்று தனது முடிவைத் தெரிவிக்கலாம்.

## குரங்குகள் கையில் பூமாலை

ஐநாவின் வழமைப்படி மதிப்புரவின் நிமித்தம் இலங்கையிடமும் அறிக்கையின் ஒரு பிரதி வழங்கப்பட்டது. ஆனால் இலங்கை மதிப்புரவாக நடந்து கொள்ளவில்லை. அந்த அறிக்கையின் பகுதிகள் பத்திரிகைகளில் பகிரங்கப் படுத்தப்பட்டு அது கடுமையாக விமர்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஐநா அறிக்கையைப் பகிரங்கப்படுத்த முன்னர் அதை இந்தியாவின் வில்லங்கம் பிடித்த வில்லன் விஜய் நம்பியாரின் மீள் பார்வைக்காக சமர்பித்துள்ளது. இந்த நம்பியாரும் இலங்கையின் போர்க் குற்றத்தில் சம்பந்தமுள்ளவர். தமிழர்களுக்கு விரோதமாகச் செயற்படுமொரு இந்திய மலையாளி என விமர்சிக்கப்படுபவர். இவர் இந்த அறிக்கையை என்ன செய்வார் என்பது பெரும் கேள்விக்குறி.

## இனக்கொலையிலிருந்து வகை சொல்லல்.

2009-மே மாதத்திற்குப் பின்னர் இலங்கையில் நடந்தவை ஒரு இனக்கொலை என்று தமிழர்கள் தரப்பில் கூறப்பட்டது. இந்தியப் பாராளுமன்றதில் இலங்கையில் ஓர் இனக்கொலை நடந்தது என்று ஒரு தமிழ்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததை அவைத் தலைவர் அது அவைக் குறிபேட்டில் இடம்பெறக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தார்.

1983இல் இலங்கையில் நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறையை ஒருஇனக் கொலை என அப்போதைய இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தியும்இந்திய சட்டவாளர்கள் அமைப்பும் தெரிவித்திருந்தது இன்கு கவனிக்கத் தக்கது. பல நாடுகள் இலங்கை இறுதிப் போரில் நடந்தவை ஒரு போர்க் குற்றம் என்று கூறுவதைத் தவிர்த்து நடந்தவை தொடர்பாக இலங்கை வகை சொல்ல வேண்டும் என்றே தெரிவித்து வந்தனர்.

## நீதிபதியின் ஆசனத்தில் குற்றவாளி

இலங்கையின் இறுதிப் போரின் போது நடந்தவை தொடர்பான ஒரு வகைசொல்லலை இலங்கைதான் செய்ய வேண்டும் என்று சில நாடுகள் முக்கியமாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வந்தது. அதற்குரிய உதவிகளைத் தான் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்தது. இறுதிப்போரில் ஐநாவின் அரசியல் அங்கங்களும் அமைப்புக்களும் பொது மக்களைக் காக்கத் தவறியதையும் ஆலோசனைக் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அது ஒரு சுயாதீன விசாரணைக் குழுவால் விசாரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படவில்லை. ஆலோசனைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரை 1-ஏ இல் இலங்கை அரசு ஒரு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பார்த்தும் மஹிந்த வடிவேலு பாணியில் இன்னுமாடா இவங்க என்னை நம்புறாங்க என்று சொல்லியிருப்பார்.

## போர்க் குற்றமும் மனுக்குலத்திற்கு எதிரான குற்றமும்

இலங்கையில் கசிய விடப்பட்ட ஐநா ஆலோசனைக் குழுவின் அறிக்கையின் படி இலங்கையில் போர்க் குற்றமும் மனித குலத்திற்கு எதிரான குற்றமும் இழைக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் இருப்பதாக பான் கீ மூனின் ஆலோசனைக் குழு தெரிவித்திருப்பது தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய அம்சம்.

## மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் 90,000 இற்கு மேற்பட்ட போரால் விதவையானோர் இருப்பதாக இலங்கை அரசு தெரிவித்தது. 20,000 இற்கு மேற்பட்ட விதவைகள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கலாம். 10,000இற்கு பெண்கள் கணவன்மாருடன் இறந்திருக்கலாம். இதை வைத்துப் பார்க்கும் போது 120,000இற்கு மேற்பட்ட 25இற்கும் 65இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்கள் இலங்கைப் போரில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதே வயதுடைய 90,000 பெண்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும். 25 இற்கு குறைந்த வயதுடையவர்கள் ஒரு இலட்சம் கொல்லப்பட்டிருக்க வேண்டும். 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் 25,000 பேர் கொல்லப்பட்டிருக்க வேண்டும். மொத்தத்தில் இலங்கையில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் போரினால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். சரியான ஒரு கணக்கெடுப்பின் மூலம் இது நிரூபிக்கப்படலாம். இது ஒரு இனக் கொலைக்கான முக்கிய சாட்சியமாகும். இப்படி இருக்கையில் இறுதிப் போரில் இறந்தவர்கள் 20,000 அல்லது 40,000 ஆக இருக்கலாம் என்று பல தரப்பிலும் இருந்து தமிழர்கள் உட்பட செய்திகள் வருவது வருத்தத்துக்குரியது.

ஆலோசனைக் குழுவின் அறிக்கையின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பது நிச்சயமல்ல. பான் கி மூன் தனது பதவி நீடிப்பிற்கு இலங்கைப் போர்க்குற்ற விசாரணையைப் பலி கொடுப்பாரா என்ற சந்தேகம் மனித உரிமை அமைப்புக்களிடை தோன்றி விட்டது. போர்க்குற்ற விசாரணைக்கு உலகெங்கும் வாழ் தமிழர்கள் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் போயஸ் தோட்டத்து ஆத்தாவும் கோபாலபுரத்துத் தாத்தாவும் இதுவரை மௌனமாகவே இருக்கிறார்கள்.

## ஐநா இனக் கொலையைப் போர் குற்றமாக்குகிறதா?

ஐநாவின் ஆலோசனைக் குழுவின் அறிக்கையில் உண்மையில் கொல்லப்பட்டவர்களின் தொகை பற்றியோ அல்லது அதை அறிவதற்கான வழிவகைகள் பற்றியோ தெரிவித்ததாகத் தகவல் இல்லை. போர் குற்றமும் மனித குலத்திற்கு எதிரான குற்றமும் இழைக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் இருப்பதாக தெரிவித்திருப்பது மகிழ்ச்சி தருவதாயினும் அதன் பின்னணியில் ஐநாவில் இருக்கும் வில்லன்களின் சதி உண்டா என நாம் பார்க்க வேண்டும். பான் கீ மூனின் பிரதம ஆலோசகர் விஜய் நம்பியார். இவரின் சகோதரர் சதீஷ் நம்பியார் இலங்கையின் படைத்துறை ஆலோசகர். சதீஷ் இந்திய அமைதிப் படை என்று சொல்லப்படும் அட்டூழியப் படையிலும் பணிபுரிந்தவர். இவரே இலங்கையில் மே 2009இன் பின் இலங்கையில் போர்க் குற்றத் தடயங்களை சீன நிறுவனத்தின் மூலம் அழிக்க இலங்கைக்கு ஆலோசனை வழங்கியவர். பான் கீ மூனின் இளைய மகளின் கணவர் சித்தார்த் சட்டர்ஜீ என்னும் இந்தியர். இவரும் அமைதிப் படையில் பணியாற்றியவர். பாது காப்புச் சபையில் சீனாவும் ரஷ்யாவும் நிரந்தர உறுப்பினர்கள். இந்தியா இன்னும் ஓராண்டுக்கு மேல் தற்காலிக உறுப்பினர். பான் கீ மூன் இந்த ஆண்டு இறுதியில் தனது பதவிக்காலம் முடிந்து அடுத்த 4 ஆண்டுகளுக்கான ஐநா பொதுச் செயலர் பதவிக்கு போட்டியிட விருக்கிறார். இது தமிழர்களுக்கு சாதகமானது அல்ல. இலங்கை இந்தியாவைத் தூண்ட, இந்தியா இரசியாவைவேண்ட இனிவரும் நாட்களில் ஐநாவின் ஆலோசனைக் குழுவின் அறிக்கைக்கான ஆப்புவைத்தல் தொடரும்.






# UN experts' report makes the case for genocide

Jan Jananayagam
Tamil Guardian

Based on leaked extracts, the UN expert panel's report on Sri Lanka constitutes a watershed moment in international understanding of the crimes committed in the closing phase of the war in Sri Lanka.

Crucially, although the word does not appear in the extracts, the report's contents well supports the charge that Sri Lanka engaged in genocide of the Tamils. The report lays out in detail the calculated, deliberate and systematic targeting of Tamil civilians by the Sri Lankan armed forces, operating under the direct command of the country's top political leadership.

The former UN spokesperson in Sri Lanka, Gordon Weiss, has aptly termed the publishing of the UN experts' report as a 'Srebrenica' moment for Sri Lanka and indeed for the world.

The analogy is correct on many counts. Firstly, it was in relation to Srebrenica that the ICTY (International Criminal Tribunal for the Former Yugoslavia) most clearly formulated the principle that part destruction – specifically, a geographically contained (i.e a small territory) destruction - of an ethnic or national group constituted genocide.

## Deaths and more

The ICTY held to be genocide the systematic executions of an estimated 8,000 Bosnian men and boys -or 1 in 5 - out of a population of 40,000 (the target group) in Srebrenica, and a total population of 2 million. However, the now well substantiated allegations against Sri Lankan state and the Rajapakse regime are an order of magnitude greater.

The UN expert panel finds that a credible estimate of civilian deaths in the Vanni would be 75,000 (or nearly ten times Srebrenica's grim total) from an estimated population of 330,000 Tamils (or 1 in 4 of the target group), out of a total population of 3 million Tamils in Sri Lanka.

The report also estimates the ratio of physically injured to dead as 1:2 or 1:3, and says the number killed could be much higher. It notes that approximately 40,000 surgical procedures and 5,000 amputations were carried out on the wounded, under horrific conditions.

The genocide convention, of course, covers not just killing but serious physical or mental harm. And the UN experts' report goes on to provide harrowing details of the subhuman medical and humanitarian conditions the Sri Lankan state created for the Vanni population, surrounded by its armed forces, by withholding food and medical supplies and relentless bombardment for months on end.

## Deliberate, systematic, widespread

The UN experts' report makes clear the deliberate, widespread and systematic nature of the physical harm and destruction that the Sri Lankan state inflicted on the Tamils. This not only meets the International Criminal Court's (ICC) definition of 'Crimes Against Humanity' (as the expert panel makes clear), it also demonstrates, crucially, the strategic logic - i.e. the intent to destroy – that makes this genocide.

As genocide experts recognize, it is not necessary to have explicit or recorded statements of intent to destroy or indeed explicit orders to this end. For example, not even the Nazis left a traceable trail of explicit orders for the various forms of destruction of their target groups. Intent can be inferred, often where no other plausible explanation is possible.

To return to Srebrenica, it is not the numbers that make the comparison valid. Indeed, the Rajapaksa regime seems to have adopted the modalities of the Serbian genocide.

Srebrenica was also a designated safe haven (by the UN), encouraging civilians to concentrate there, and thereby making the mass killings possible. As the UN experts' report notes, in Vanni, the Sri Lankan state three consecutively times declared 'No fire Zones', thereby encouraging civilians to concentrate there, before unleashing its mass bombardments.

The charge of genocide against the Rajapakse regime is simply this: that from the outset, it intended to substantially destroy the target group, namely the Tamils in the Vanni, and to ethnically cleanse the region in such a way that the community living there would not be able to be ever reconstituted in its original form.

## Selected site

The ICTY found that the Srebrenica was chosen for its cataclysmic destruction because of the location's strategic significance for the viability of the Bosnian state. As the ICTY's 2004 report (p6) found, "capture and ethnic purification of Srebrenica would therefore severely undermine the military efforts of the Bosnian Muslim state to ensure its viability."

Similarly, Sri Lanka marked the Vanni for a hammer blow because of its symbolism as a Tamil heartland and its strategic significance for the viability of a Tamil state. In a continuation of this logic, two years after the war ended, the vast majority of returning Tamils live under tarpaulins and corrugated sheets, while the Sri Lankan military sets up increasing numbers of bases and camps and, in parts, settles Sinhalese.

Crucially, the ICTY found that Serbian forces decided that "the elimination of the Muslim population of Srebrenica, despite the assurances given by the international community, would serve as a potent example to all Bosnian Muslims of their vulnerability and defenselessness in the face of Serb military forces."

Similarly, the Sri Lankan state sought to deal the Tamil people such a traumatizing blow that they would no longer challenge Sinhala dominance of the entire island. As President Rajapaksa declared afterwards, the idea (of an independent Tamil Eelam) that began at Vaddukoddai in 1976 had been ended at Mulliyavikal in 2009.

## Realisation dawning

While the UN experts' report has not labeled what it oulines as genocide, it is clearly cognizant of the presence of the necessary indicators; the report is unequivocal that "[Sri Lanka's] campaign constituted persecution of the population of the Vanni."

Genocides do not occur outside of historical context and a prevailing racism. As many historians note, the Nazis' extermination of Jews occurred amid the latent anti-Semitism in Europe of that period, and prior centuries of persecution.

The UN experts' account of the events of 2009 have to be located, therefor, in their proper historic and contemporary trajectory. In successfully killing1 in 4 of the people of Vanni, the Rajapakse regime was continuing long-running trends of ethnic cleansing and annihilitary persecution undertaken by earlier governments.

As such, it is not the recognition of Vanni as Sri Lanka's Srebrenica moment that is so surprising but the fact that this took so long to happen.

# Creating Tamil Eelam is the Only Remedy – *Prof. Boyle*



Reacting to the contents of the UN expert panel's report on Sri Lanka's war-crimes, Professor Boyle, expert in International Law, and Professor at the University of Illinois College of Law, told TamilNet, "there is absolutely no way the GOSL [Government of Sri Lanka] is going to implement any of them [panel's recommendations], and the GOSL has already rejected all of them, according to published reports. Therefore, under these circumstances of longstanding and ongoing genocide against them [the Tamils], the only effective remedy the Tamil People now have is to create the State of Tamil Eelam and move to have the International Community recognize it."

***Professor Boyle added:***

These excerpts support the worst conclusions that many of us drew during the course of the GOSL genocide against the Tamils in Vanni, which continues even today.

All Tamils must support Recommendation 1 (B) (ii) of the Report, that the U.N. Secretary General set up an International Commission of Inquiry on Sri Lanka to investigate GOSL war crimes, crimes against humanity, and genocide against the Tamils, by reference to and in accordance with the Statute of the International Criminal Court.

The U.N. Human Rights Council just recently established such a Commission on Libya. But given the Council's notorious bias in favor of Sri Lanka and against the Tamils, as recognized by this Report, the Council is not a viable mechanism for the establishment of that GOSL Commission.

The U.N. Secretary General must do it himself on behalf of the United Nations Organization itself. As for the rest of these Recommendations, there is absolutely no way the GOSL is going to implement any of them, and the GOSL has already rejected all of them, according to published reports.

Therefore, under these circumstances of longstanding and ongoing genocide against them, the only effective remedy the Tamil People now have is to create the State of Tamil Eelam and move to have the International Community recognize it. CREATE THE STATE OF TAMIL EELAM!

In Recommendations 4(A) the report states: The [UN] Human Rights Council should be invited to reconsider its May 2009 Special Session Resolution (A/HRC/8-11/L. 1/Rev. 2) regarding Sri Lanka, in light of this report.

*Courtesy: TamilNet*

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing, Serving all the Sri Lankan Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
• Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!
Special rates for Containers and Machinery
4 Collection Points . Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge 35.00 upto Hounslow. Within M11 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: info@massshipping.com.,
Web : www.massshipping.com
*Condition Apply Warming
No hidden charges
No bnognus promotions

T.N. MOTORS SERVICES
All Makes & Models
CROYDON
181 Handcroft Road,
West Croydon, CR0 3LF
T: 020 8689 1984
tn.motors@hotmail.com
Working Hours:
Monday - Saturday 9.00 am to 6.00 pm
Services and repair all makes and models, MOTs, Air Conditioning, Welding Insurance Work, Bodywork, Tyres, Exhausts Automatic & Manual Gearbox Repairs, Engine Rebuilds Specialists, Courtersy Cars Available on Most Repairs and Vehicle Recovery Services
MITCHAM WORKSHOP 1
R/O 36A, Grenfell Road,
Mitcham, Surrey CR4 2BY
T : 020 8648 3458
M : 07956274764
F : 020 8665 9111
020 8689 1984 • 020 8648 345

# UN Advisory Panel Report on accountability for Last War in Sri Lanka in 2009- A real Trouper's Find



By: Dr C P Thiagarajah

The 'three-strong UN Expert panel on Sri-Lanka, consisting of Marzuki Darusman from Indonesia, the UN's special envoy for North Korea (Chair), human rights expert Yasmin Sooka from South Africa and Steven Ratner, an expert in international law of war from the United States, produced their report of accountability in the last war in Sri-Lanka in 2009 between the Government of Sri-Lanka (GSL) and the LTTE on 12 April. It is a real trouper's find. It is a real deal and will help to rewrite history of the Tamils and Sinhalese if the International community put an effort to implement it in full without fear or favour. If not it will fall by the wayside as things against the Tamils are happening fast and furious in their Traditional Homeland (TH) of North and East of Sri-Lanka.

The report is short of credibility as far as the present situation of the people of Vanni who cheated death through providence's help during the GSL assault in the 'no-Fire Zone' in Mullivaikal. This may be due to the GSL arrogance in not allowing the Panel to visit Vanni to inspect the scorched earth of the TH. It is a fact that the entire civilian homes as well as government infrastructures were pulverized during the military onslaught against the ethnic Tamils. Even after two years of the genocidal war people are without shelter which they had before the war. The government is rubbing salt in the wounds of Tamils by refusing to allow India to build the promised 50000 houses or building houses at its expense. The GSL has forgotten that they are sailing close to the wind by doing so.

Time and Tide wait for no man. The Tamil Diaspora should consistently keep up their political action to ensure that the IC take action to put into practice what is recommended by the UN Panel. Even the silver surfer should use the silver screen to keep up disseminating information of HR violations. The Tamil Diaspora must give their full support to international Human Rights (HR) activists like Mr Matthew Russell Lee of the Inner City Press, AI, ICG and HRW to enable them to take the Tamils issue to fruition. They are the only people among many others who kept up the pressure on the UN with constant consistency. Tamils Diaspora thanks them profusely from the bottom of their heart.

Recommendations apart who is to enforce these recommendation as some involved in the last stages of the war like UN chief of Staff, Mr Vijey Nambiar is still in the post.

> Successive Sinhala Sri-Lanka governments had been ethnic cleansing the Tamils for the last 63 years and therefore they cannot be entrusted with the safety and security of the Tamil minority.

Many GSL army commanders involved in war crimes are in the UN and in diplomatic posts for Sri-Lanka overseas. How they will impact on the implementation is still a question mark? Countries like India and China are also involved in the war. India ran a hospital in the war zone and therefore should be able to give gruesome details of the extent of the injuries caused and the use of chemical weapons etc. The Economist last week speculated that GSL will carry on ignoring this report. This may not be wishful thinking as the Sinhalese had been reckless in killing the civilians hiding in hurriedly dug out bunkers in the No Fire zone. If the Government is forced to put into gear an inquiry some politicos will deliver their swansong address.

The status quo of the situation in the TH is that the citizens are under military occupation. Who is to see that the army withdraws before the Tamil civilians could be free to co-operate with a war crime inquiry? These are problems that have to be discussed at international level without relying on Sri-Lanka alone. Successive Sinhala Sri-Lanka governments had been ethnic cleansing the Tamils for the last 63 years and therefore they cannot be entrusted with the safety and security of the Tamil minority. Those leaders were so communal minded that they tend to be as stubborn as a mule. The first prime minister D S Senanayake to the present Mahinda Rajapakse never saw the need to give the Tamils their basic political rights of self determination even after several agreements after talks. When it comes to delivering Tamil rights MR is a Sunday driver. Presently he is procrastinating talks with the Tamil National Alliance party re power devolution. Hence, any organizations, committees or groups set up for inquiry purposes should be represented by the Tamils in proportion to their national population (demography) and political representation. This will be a Herculean task indeed and one that will bring the most sought after freedom for the Tamils.

*Courtesy: TamilCanadian*

சகல விதமான மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்!

TR AUTOS

£15 Offer
MOT Charge
Class 4 Car: £54.85
Class 7 Commercial Van: £58.60

- MOT
- SERVICE
- REPAIRS
- TYRES
- EXHAUSTS
- PRIVATE CARS
- TAXIS
- COMMERCIALS
- ACCIDENT & BODYWORK

For MOT:
Please Call Mr. Tharma
020 8540 6537
020 7252 4438



Unit 23, Riverside Business Park
Lyon Road, South Wimbledon, SW19 2RL
Fax: 0207 358 2524
Email: trautos@gmail.com



Elephant & Castle ல்
Complete automotive service and repairs by fully licenced mechanics

111 – 113 Elephant Road
London, SE17 1LB

# KIDS ஒருபேப்பர்

<u>My grandpa</u>

My grandpa is the best man. His heartbeat stopped 30 years ago but he is still in our memory. I went to Jaffna last year and I saw his house and land. I felt and smelt his hard work. His dad died when my grandpa was 14 and he took over his dad's place so he looked after his sisters when they were getting married and his brother who goes to university. He was a car buisness man and everyone knew him there, doing his duty perfectly. My grandpa had five kids. When he died all the kids were small but they never forget him. Everyday I see his picture in our house. He is our family's hero. Everyone dies in the world but stay in the mind. We will never forget the worlds best grandpa. Thank you grandpa.

Arunshan and the spell-checker ... in the world



A flower dedicated to Grandpa


## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is Ashuvinie***



Thank you Parents

Thank you parents for all you did and work for money, you must be thanked and living happily, you have chose schools for us to study well and so on, Thank you Parents Thank you.

By; Ragaveena Sureshkumar

Age:7





*By: Abitha*



*By: Ariharan P*



*By: Harrish M*




*By: Lakkia*



*By: Nivethan T*



*By: Rehashan*



*By: Vigaashan*



*By: Lakkia T*



*By: Ragaveena*

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | U | M | A | L | L | I | W | S | O |
| E | L | L | U | K | H | I | B | N | J |
| E | E | M | P | A | R | U | P | U | U |
| L | O | I | P | D | C | X | T | U | K |
| A | A | L | R | U | S | O | P | C | X |
| K | T | A | U | K | K | L | M | R | D |
| A | V | K | F | U | T | N | G | U | F |
| I | U | U | N | B | R | A | I | N | W |
| S | O | H | I | Q | Y | Z | A | I | B |
| I | L | M | A | D | P | E | O | E | N |

**Hidden Words:**

**Subject: Tamil spicies**

KADUKU, MILAKU, PARUPU, MALLI, ELLU, ELAKAI


**Submitted by:**

***By: Elena Edward (Age 6) (Tooting)***



சித்திரைப் பெருநாள் - மதுரை
£ 995
மட்டுமே!
மற்றும் அறுபடை வீடு தரிசனம்
(12 நாள் சுற்றுலா)
அறுபடை வீடுகள்
மற்றும்...
• திருத்தணி
• பழநி
• திருப்பரங்குன்றம்
• பழமுதிர்சோலை
• திருச்செந்தூர்
• சுவாமிமலை
• தஞ்சாவூர்
• திருப்பதி
• ராமேஸ்வரம்
• மதுரை மீனாட்சி
• பிள்ளையார்பட்டி
• கன்னியாகுமரி
நினைத்தேன் மூர்த்தி – திருவண்ணாமலை, தர்சிய மூர்த்தி – சிதம்பரம், சாக மூர்த்தி – காசி இடங்களுக்குச் சென்று வர எல்லோர்க்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவ்வாறானதொரு வாய்ப்பை இச்சுற்றுலா மூலம் ஒழுங்கு செய்துள்ளோம்.
இம்மாதம் June 25ம் திகதி புறப்பட்டு July 10 திகதி திரும்பும் சுற்றுலாவில் உங்களுக்கு பாக்கியம் பலம்.
சிதம்பரம் ஆடிமாத 7ம் திகதி தேர்த்திருவிழா மற்றும் 8ம் திகதி காலை ஆடி உத்தர அபிசேகம் போன்றவை தரிசிப்பது உங்கள் வாழ்வில் கிடைக்கமுடியாத அரிய வாய்ப்பு. இவ்வரிய வாய்ப்பை தவறவிடாமல் விசேடமாக உங்களை அழைத்துச்செல்லவே இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.
அத்துடன் ஆறுபடைவீடு சிதம்பரம் பிள்ளையார் பட்டி ஆகிய இடங்களுக்குச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன
ஆலப்புழை செல்பவர்களுக்கு
அறுபடைவீடு தரிசனம் இலவசம்.
£ 1200
மட்டுமே
ஆலப்புழை படகு சவாரி
கன்னியாகுமரி
திருச்செந்தூர்
திருவண்ணாமலை
மதுரை
திருப்பரங்குன்றம்
பழனி
திருச்சி
Chennai (Shopping)
(7 நாள் சுற்றுலா)
A/C Coach,
A/c Room சுத்தமான
சைவ உணவு மற்றும் குடிநீர் எல்லா
வகையான வசதிகளும் செய்து தரப்படும்.
14 வருட
அனுபவம்
குமரன் TRAVELS
அழையுங்கள் 020 7043 4319

# Millions of people are probably unaware they're owed compensation. Are you one of them?



## Call us now if you were sold a life policy after 29 April 1988* with any of the following companies:

## Abbey Life | Windsor Life | Zurich | Canada Life | Lincoln Financial Group | Sun Life Financial of Canada

* In some cases we have recovered compensation for people sold plans before this date

** We have recovered compensation for plans sold with other companies so why not ask?

- No Win No Fee • No upfront costs of any kind • High Success Rate
- Contact us even if you no longer have the plan or investment
- In some cases you can claim the compensation and continue with the plan or have replacement cover
- Paperwork not handy/not available? No problem we only need some basic details to get started and your insurers should still have your details
- Abbey Life policyholders with Covermaster Plans, Living Assurance, Wealthmaster, PEP or Protected Savings Plans should contact us immediately
- Persons sold pension mortgages, endowment plans for savings, whole of life plans for mortgages/inheritance tax purposes should call us
- Retired persons sold bonds which have lost money; persons who were single when they were sold a policy should also contact us

*'Mr W received over £22,000 for a mis-sold Abbey Life Pension Mortgage'*

*'Mr & Mrs C recently recovered over £15,000 for various plans they were mis-sold by Abbey Life'*

*'Mr & Mrs L were recently awarded just over £84,000 for a mis-sold whole of life plan taken out for inheritance tax planning'*

*'Mr P recovered over £20,000 for various plans sold to him by Lincoln Financial Group'*

## Call Bipin on 020 8220 6792 / 020 8220 9596

For full details and a free review – lines open Mon-Sat 9am to 8pm and Sun 11am to 5pm

# LIFE POLICY RECLAIM LTD.

YOUR KEY TO £THOUSANDS

10 Northbrook Road, Ilford, Essex IG1 3BS. Regulated by the Ministry of Justice in respect of claims management activities.

**www.lpreclaim.co.uk | lifepolicyreclaim@live.co.uk**

# ஐ.நா அறிக்கை ஏட்டுச் சுரைக்காய்

பாகம் 92

ஐ நா நிபுணர்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அந்த அறிக்கையின் நிறைவேற்றுச் சாராம்சம் என்னு மொன்றைபத்திரிகைகள் வெளியிட்டுள்ளதாகக்கூறி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையில் காணப்படும் சில தமிழ்ச் சொற்கள் இதுவரை அறிந்திராதவையாகவுள்ளன. இது எனக்கு மட்டும்தானா பலருக்குமா என்று தெரியாது. எங்களைப் போன்ற சாமானியர்களுக்கும் சற்று விளங்கும்படியாக, கடினமான சில சொற்களை நீக்கிவிட்டு அவ்வறிக்கையைப் பிரசுரித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். இங்கே முக்கியமான விடயமென்னவென்றால் ஐ நாவின் அறிக்கையின் உள்ளடக்கம் என்ன என்பதில் யாருக்கும் தெளிவில்லை. எல்லோரும் அறிக்கையின் சாராம்சம் எதுவென்பதைக் கூறாமல் சும்மா வெறுமனே தத்தம்பாட்டில் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள் போலத் தெரிகிறது. ஆக தெளிவில்லாதவோர் அறிக்கைக்குப் பலரும் அறிக்கை மேல் அறிக்கையாக பதில் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். யோசித்தால் கொஞ்சம் தலை சுற்றுவதுபோல இருக்கிறது.

தற்செயலாக வெளிடப்படாமலேயே போய் விட்டால் முந்திக்கொண்டு அறிக்கைகளை விட்டதில் ஒரு பிரயோசனமுமில்லை. வீணாக அரசாங்கத்தை இன்னொருபடி பகைத்துக் கொண்டதுதான் மிச்சமாகலாம்.

தற்போது ஐநாவின் அறிக்கை சிறீலங்காவின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசிபிக் பிரிவின் இயக்குனர் அறிக்கையொன்றை விட்டிருக்கிறார். சிறீலங்கா அரசாங்கம் தனக்கிருக்கும் சர்வதேச ஆதரவுச் சக்திகளின் முழு ஆதரவுடன் ஐநாவின் அறிக்கைக்கு முகம் கொடுத்து, பாதுகாப்புச் சபையின் விவாதத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க விடாமல் செய்துவிட்டால், ஐநா அறிக்கையை ஆதரித்து தங்கள்பாட்டில் அறிகை விட்டவர்களெல்லோரும் மூக்குடைபட வேண்டியேற்படலாம். ஆதலால் இத்தகைய விடயங்களில் கொஞ்சம் நிதானத்தைக் கடைப்பிடிப்பதுதான் சரியான அணுகுமுறை போலத் தெரிகிறது.

"ஆணாய் பெண்ணாய்க் காணவில்லையாம் ராமநாதனாம் பெயர்" என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுவார்கள். அதுபோலத்தான் இந்த விவகாரமும் தெளிவற்றதாக இருக்கிறது.

சிங்களபேரினவாத சக்திகளின் ஒட்டுமொத்த ஆதரவும், தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அவகளுக்கு இலங்கைத் தீவில் எத்தகைய பாத்தியதையுமில்லாமல் செய்துவிட வேண்டுமென்பதிலேயே இருந்தது. அதில் அவர்கள் வெற்றியும் பெற்றுவிட்டார்கள். இனி அவர்களுக்கிருக்கும் ஒரே குறிக்கோள், தற்போது இலங்கையரசாங்கத்திற்கெதிராகத் திரண்டிருக்கும் உலக அபிப்பிராயத்திற்கெதிராகப் போராடுவதுதான். இவ்வளவு பெரிய சாதனையை சாதித்துவிட்ட அவர்களுக்கு தங்களுக்கெதிரான உலக அபிப்பிராயத்தை மாற்றியமைப்பது பெரியவிடயமில்லை. பேரினவாதச் சிங்களம் ஒன்று திரண்டு ஐநா அறிக்கைக்கெதிராகப் போராடி ஒருவழி பண்ணாமல் விடப்போவதில்லை. இலங்கையின் எண்பது சதவீதமான சிங்களவர்களின் நூற்றுக்கு நூறு வீதமான ஆதரவோடு உருவாகக்கூடிய பேரெழுச்சிக்கு முன்னால் அடிபணிந்து ஐநா தன் அறிக்கையை வாபஸ் வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த விடயத்தில் எதிர்க்கட்சி, இடதுசாரி வலதுசாரி என்ற பேதத்திற்கே சிங்களவர் மத்தியில் இடமில்லை.

"அப்பே ஆண்டுவ" என்ற ஒரே தாரக மந்திரத்தோடு இலங்கையைத் தனிச்சிங்கள நாடாக்கப் பாடுபட்டு அதில் முழுவெற்றி பெற்றிருக்கும் பேரினவாதச் சிங்களம், அதற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்ட ராஜபக்ச அரசாங்கத்தையும், அந்தப் போராட்டத்தில் தியாகவுணர்வோடு ஈடுபட்ட இராணுவத்தினரையும், அதிகாரிகளையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிராது. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ளாமலிருப்பதுதான் பெரிய வேடிக்கையாக இருக்கிறது.

## அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

தமிழர்களுக்கு நியாயமானதும் நீதியானதுமானவோர் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கக்கூடிய மிகவும் வாய்ப்பான புறச்சூழல்போராட்டக் காலத்திலேயே இருந்தது. அதை உலகம் கோட்டை விட்டுவிட்டது. இனிவரப்போகும் காலங்கள் சிங்கள அரசாங்கத்திற்கு இராஜதந்திர நெருக்குவாரங்களை மட்டுமே கொடுக்கக் கூடியவை. சீனா ரஸ்யா போன்றநாடுகளின் உதவியோடும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆதரவோடும், போர்க்காலத்தில் வன்னியில் நடந்த மனிதவுரிமை மீறல்கள் சம்பந்தமாக மேற்குலகு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைச் சமாளித்துவிடுவது இலங்கைக்கு ஒன்றும் பெரிய விடயம்போலத் தெரியவில்லை. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பார்கள்' அதுபோலத்தான் இந்த விடயத்தின் சூடும் இந்த அறிக்கையோடு ஆறிப்போவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆப்கானிஸ்தான், ஈராக், எகிப்து, லிபியா போன்ற நாடுகளைப் போலல்லாது இலங்கையின் நிலைமை வேறானது. மேற்குலகைப் பயப்படுத்தும் அல்கைடா போன்ற இயக்கங்களின் சவால்களை முறியடிப்பதும், எண்ணெய் வளமுள்ள நாடுகளைத் தமது செல்வாக்கிற்குள் கொண்டுவருவதும் மேற்சொன்ன நாடுகளில் மேற்குலகின் நோக்கங்களாயுள்ளன. ஆனால் இலங்கை போன்ற ஒரு சிறிய தேசத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக எந்த முக்கியத்துவமும் இல்லாததால், எப்போதோ முடிந்துபோன மனிதவுரிமை மீறல் சம்பவங்களைச் சாக்காக வைத்து மேற்குலகோ அல்லது அதன் இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவோ உள்நுழைந்து எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடப்போவதில்லை. அப்படியானவோர் நிகழ்ச்சித்திட்டத்தை சீனாவோ, ரஸ்யாவோ, இந்தியாவோ ஆதரிக்கப் போவதுமில்லை.

இத்தகைய யதார்த்தப் புறச்சூழல்களைச் சரிவர எடைபோட்டுக்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்ற பொறுப்புமிக்க மக்கள் இயக்கங்கள் காய்களை நகர்த்துவார்களாயின் இன்று நிர்க்கதியாகிப் போய்விட்ட ஈழத்தமிழர்களுக்கு அரசியல் ரீதியில் ஏதாவது நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கமுடியும். அதைவிடுத்து எதிர் காலத்தில் என்னபயன் கிடைக்குமென்பதில் போதிய தெளிவில்லாமல், ஐநா போன்ற நிறுவனங்களின் வெற்று அறிக்கைகளுக்குப் பெரிய முக்கியத்துவத்தைக் கொடுத்து, நூற்றுக்கு நூறு மக்கள் ஆதரவோடும் அரச ஆதரவோடும் போராடத் தயாராயிருக்கும் தீவின் எண்பதுவீத சிங்களத்தின் எரிச்சலைக் கிளறிவிடுவதில் அரசியல் ரீதியாக எவ்வித பிரயோசனமும் வரப்போவதில்லை.

தமிழனுக்குச் செய்யப்பட்ட அநீதிக்குக் காலாயிருந்த பேரினவாதச் சிங்களத்திற்கு உலக அரங்கில் அவப் பெயரைத் தேடிக்கொடுக்க வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனுக்குமுண்டு. அதனை இத்தகைய அறிக்கைகளால் சாதிக்க முடியுமா? தெரியவில்லை.

"கண்கெட்ட பிறகு சூரியநமஸ்கர்ரம்" என்பது போல மக்கள் அங்கே தொகைதொகைக் கொல்லப்பட்டபோது பிரித்தானிய ஊடகங்கள் மக்களின் அவலநிலையைப் பெரிதாக எடுத்துச் சொல்லவில்லை.

தற்போது சனல் 4 போன்ற பிரித்தானிய ரிவிக்களில் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல் சம்பவங்களைக் காட்டுகிறார்கள். முகாம்களில் வாடும் மக்களின் அவலநிலை காட்டப்படுகின்றது. லண்டனில் பாராளுன்றத்திற்கு அருகில் நடத்தப்பட்ட தொடர்ச்சியான போராட்டத்திற்கு அக்காலத்தில் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

( தொடர்ச்சி 25ம் பக்கம்-


# AYNGARAN INTERNATIONAL



PROUDLY PRESENTS

Starring- Jeeva, karthika, Pragash Raj, Ajmal and others
Music: Haris Jeyaraj Director: KV Anand

Daily shows from Friday 22 Apr 11 to Thursday 5 May 2011

- Cineworld Ilford 10:30, 14:00, 17:40, 21:20
- Cineworld Wandsworth 12:50, 16:30, 20:00
- Cineworld Feltham 12:00, 15:20, 18:40, 22:00
- Cineworld Enfield 21:45
- Cineworld Stapels Corner 12:50, 16:30, 20:10
- Cineworld Milton Keynes 12:15, 15:45, 19:30
- Cineworld Birmingham 20.00
- Cineworld Cardiff 21.00
- Cineworld Crawley 20.00
- Cineworld Glasgow 12:50, 16:30, 20:10
- Cineworld Aberdeen 20.00

For more show time details
Ayngaran: 02085401500, 02084713133,
Cineworld: 08712002000
Websites: www.ayngaran.com, www.cineworld.co.uk

# நினைவு வணக்க நிகழ்வுகள்














ஆனந்த புரத்தில் அழியாத் தடங்களாக மண்ணில் வித்தாகி வீழ்ந்த வீரத் தளபதிகள் மற்றும் போராளிகள் உட்பட தியாகத் தாய் அன்னை பூபதி மற்றும் மாமனிதர்கள், நாட்டுப்பற்றாளர்களை நினைவுகூரும் நினைவுவணக்க நிகழ்வு அண்மையில் லண்டன் ஹறோ பகுதியில் உள்ள Harrow Arts Centre மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்பமான இந்த நிகழ்வில் முதன்மைச்சுடரினை ACT NOW தொண்டு நிறுவனத்தின் உதவி இயக்குனர் திரு. கிறஹம் வில்லியம் அவர்கள் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து இதுவரை காலமும் தமிழீழ விடுதலைக்காய் களமாடி விடுதலைக்கு உரம் சேர்த்து மண்ணினுள் வித்துக்களாகி வாழும் வீர மறவர்களான மாவீரர்களுக்காகவும், தாயகத்தின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து செயலாற்றி ஈழ வரலாற்றில் இடம் பிடித்த மாமனிதர்கள் மற்றும் நாட்டுப்பற்றாளர்கள் உட்பட போரினால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்காகவும் அக வணக்கம் செலுத்தப்பட்டது.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான ஈகைச்சுடரேற்றலும், மலர்மாலை அணிவிப்பும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மதிப்பிற்குரிய ஆன்மீகவாதி சங்கர் அவர்களும், ACT NOW அமைப்பின் உதவி இயக்குனர் திரு. கிறஹம் வில்லியம் அவர்களும், நாடுகடந்த தமிழீழ அரசின் வெளிவிவகார அமைச்சரான திரு தயாபரன் அவர்களும் நினைவுரைகளை ஆற்றினர்.

இந்த நினைவு வணக்க நிகழ்வின் நிகழ்ச்சிகளாக ஈழத்துக் கவிஞர் சுப்ரமணியம், செல்வி பாரதி ஆகியோரின் கவிதைகளும் கீர்த்திகா ஸ்கந்ததேவா அவர்களின் பாட்டும், சவுத்தோல் மாணவிகள் மற்றும் கிலிங்கரன் தமிழ் கல்விக்கூட மாணவ மாணவிகளின் நடனங்களும் இடம் பெற்றன.

# கருத்துக்கணிப்பு அறிக்கை வெளியீடு





புலம் பெயர் நாடுகளின் தமிழ்மக்களால் வட்டுக் கோட்டைப் பிரகடனத்தை மீள் வலியுறுத்தி நடாத்தப்பட்ட சுதந்திர இறைமையுள்ள தமிழ் ஈழத்ததுக்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு அவ்வவ் நாட்டு அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், இன்னும் பல்வேறு துறைசார் நிபு ணர்களின் மேற்பார்வையில் 2009-2010 களில் கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டது

அவற்றின் முடிவுகளுடனும் பிரித்தானியாவில் நடாத்தப்பட்ட முழுவிபரங்களும் அடங்கியதான அறிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை Harrow Civic Centre இல் தமிழ் தேசிய சபையினரால் வெளியிடப்பட்டது.

# தென் சூடானுக்கான பயணம்.



நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று தென் சூடானுக்கு உத்தியோகமுறை பயணமொன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளனர். எதிர்வரும் July மாதம் தென் சூடான் உத்தியோகபூர்வமாக உலக அரங்கில் தனிநாடாக அமைய இருக்கின்ற நிலையில் தமிழர் பிரதிநிதிகளின் பயணம் அமைந்துள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் நோக்கில் அமையப் பெற்றிருந்த இந்த பயணத்தில் பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. தென் சுடானின் கட்டுமானங்களின் தேவைகளை கண்டறிந்து ஆய்வினைக் மேற்கொண்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகள் விரைவில் அமைச்சரைவில் ஆய்வறிக்கையை சமர்பிக்கவுள்ளனர்.

இதேவேளை புலம் பெயர் தமிழர்கள் தென் சூடானில் முதலீடு செய்யக்கூடியதான தொழில்துறைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக நிதித்துறை துணை அமைச்சர் நடராஜா ராஜேந்திரா மேலும் தெரிவித்தார்.




CHITRAVATHI CAKE CLASSES

கேக் அலங்கார வகுப்புகள் நடைபெறுகின்றன.

May, June new classes starting
Monday/ wednesday/Friday
Morning 9.45 to 12.30
and Evening 1 to 3

Private Classes also
conducted Private
lessons also given

Tel 0208 2401519 Mobile: 07944668642



# தமிழ் தேசிய சபை

## ஊடக அறிக்கை : 19/04/2011

புலம் பெயர் நாடுகளின் தமிழ்மக்களால் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை மீள் வலியுறுத்தி நடாத்தப்பட்ட சுதந்திர இறைமையுள்ள தமிழ் ஈழத்துக்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு அவ்வவ் நாட்டு அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், இன்னும் பல்வேறுதுறைசார் நிபுணர்களின் மேற்பார்வையில் 2009-2010 களில் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது யாவரும் அறிந்ததே.

கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்ட சகல நாடுகளினதும் முடிவுகளுடனும் பிரித்தானியாவில் நடாத்தப்பட்ட முழு விபரங்களும் அடங்கியதாக எமது அறிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (17-04-2011)Harrow Civic Centre இல் தமிழ் தேசிய சபையினரால் வெளியிடப்பட்டது.

வெளியீட்டு நிகழ்வுகள் ஈழ விடுதலைப்போரில் உயிர் நீத்தோரின் நினைவாக ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய சபைச் செயலாளர் திரு.சி.சிறிரஞ்சன் அவர்களின் வரவேற்புரையும், இந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் அவசியத்தையும் விளக்கினார், மேலும் Prof. Bryan Woodriff - Chief Election Monitor of the Tamil Referendum, Navin Saha Assembly member of GLA & Graham Williamson - Chairman Act Now ஆகியோரின் பேச்சுகளும் இடம்பெற்றன. நாடுகடந்த தமிழீழ அரசின் வெளிநாட்டு அமைச்சர் திரு.தயாபரன் அவர்களால் நாடு கடந்த அரசின் பிரதமர் திரு.வி.உருத்திரகுமாரின் செய்தி வாசிக்கப்பட்டது. அறிக்கையின் முதற்பிரதியைProf. Bryan Woodriff பெற்றுக்கொள்ள அதனைத்தொடர்ந்து ஏனைய விருந்தினர்களும் அறிக்கையைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாதாரபூர்வமான அறிக்கையை சர்வதேச நாடுகளின் தலைவர்களுக்கும், கொள்கை வகுப்பாளர் களுக்கும் எடுத்துச் சென்று எமது நியாயத்தை வலியுறுத்த இவ்வாவணம் வழிவகுக்கிறதென அனைவரினது பாராட்டுடனும், செயலாளரின் நன்றியுரையுடனும் நிகழ்வு நிறைபெற்றது.

இவ்வண்ணம் :சி.சிறிரஞ்சன்
தொடர்புகளுக்கு: tnc@sriranjan.com

# A Good News For Mothers



It is now easy to get cloths for boys for special Occasions.

Asian fashion for children is all set to change with the launch of a new and unique range of traditional yet contemporary outfits for little boys.

Born from a mother's frustration when trying to dress her two year old son for a traditional South Indian wedding, the KuttiBaba range makes sure it's not just the girls that get to dress up in their finest.

Ramani Vaheesan, founder of Kutti Baba, said: "Everyone knows dressing little girls is fun and easy, with a huge range of gorgeous clothes to choose from. Start looking for something special for a boy and straight away it gets harder.

"I didn't want a shalwa kameez, or a tiny suit and frilly shirt. I wanted a simple, elegant and stylish vershdi – but in miniature of course.

"Millions of men wear them; they're the national costume of at least four states in India and of Sri Lanka but I had to design and make my own, I called it the kutti vershdi. "From very simple beginnings, with my son's first kutti vershdi cut from his Appa's vershdi, I have created a whole new range of elegant and comfortable clothes, including vershdis, dhotis and shirts, in complementary colours. Now your son can dress like the kutti Raja he really is in my range of traditional clothing for little people."

Contact Mail : ramani@kuttibaba.com
Tel:+44 7716 719502

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

APRIL 23

**நினைவு வணக்க நிகழ்வுகள்**

பிரித்தானியாவில் அன்னை பூபதியின் 23வது நினைவு வணக்கநிகழ்வும் நாட்டுப்பற்றாளர் நினைவு கூறலும்

இடம்: Crawley
3 Bridge junior schoolC Gales drive , RH10 1PD
நேரம்: 23-04-2011 @ 10.30AM
தொடர்புகளுக்கு: 07403179162

இடம்: Coventry
St paul's community hall, 346, Foleshill road , CV6 5AJ
நேரம்: 23-04-2011 @ 5.30PM
தொடர்புகளுக்கு: 07466516248 / 07702345932,

இடம்: Pinner
Pinner Green Social Club, Pinner,London HA5 3TJ
நேரம்: 24-04-2011 @6.00PM

இடம்: Lewisham
London Sivan Temple, 4a Clarenden rise, SE13 5ES
நேரம்: 30-04-2011 @ 7.00PM

இடம்: Leicester
Thurmaston Community centre Silverdale Drive, LE4 8NJ
நேரம்: 25-04-2011 @ 5.00PM
தொடர்புகளுக்கு: 07519655473/ 07984876041

APRIL 24
SUNDAY
@ 14:30

**நூல் வெளியீட்டு விழாவும் கலந்துரையாடலும்**

நீற்றா பற்றிமாகரன் அவர்கள் எழுதிய சங்ககாலத் தமிழர் வாழ்வும் கலைகளும் நூல் வெளியீடும் சங்க இலக்கியத்தின் இன்றைய தேவைகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கும்

இடம்: இலண்டன் சிவன் கோவில் மண்டபம்
4A Clarenden Rise, London SE13 5ES
தொடர்புகளுக்கு: 01865437397 / 07877302731


விசேட அறிவித்தல்



# இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

பாலாலயம் செய்யப்பட்ட எங்கள் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் தினமும் மூன்று வேளைப் பூசைகள்;
விசேட அபிசேக ஆராதனைகளுடன் முறைப்படி நடைபெற்று வருகின்றன.

அடியார்கள் அனைவரும் தற்போதைய பாலாலய காலத்தில் அபிசேகங்களில் பங்குபற்றி அம்பாள் அருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம். ஜூன் மாதம் 6ம் திகதி நடைபெற இருக்கும் குடமுழுக்கு வைபவத்தை அடுத்து 45 நாட்கள் மண்டாலாபிசேகம் நடைபெற இருப்பதால் அதில் உபயகாரர்களாகப் பங்குபெற விரும்புபவர்கள் தயவுசெய்து ஆலயத்துடன் தொடர்புகொண்டு, தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.



06.06.2011 குடமுழுக்கு வைபவம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரகுருக்களின் தலைமையில் நடைபெறும்



22.07.2011 வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன்
சிவஸ்ரீ கை. வாமதேவக்குருக்களின் தலைமையில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு : 2வது கும்பாபிஷேகத்திற்கான ஆலயத் திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருவதால் அதற்கு காணிக்கை நன்கொடை வழங்க விரும்பும் அடியவர்கள் ஆலயத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம். அடியவர்கள் ஆலயத்துடன் தொலைபேசியூடாகவோ (02088100835) அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு நன்கொடைகளை வழங்கலாம்.

வங்கிக் கணக்கிலக்க விபரம்:
Account Name : Shri Kanaga Thurkkai Amman Temple Trust,
Account Number : 02717646 Sort Code : 30-98-91 Bank : Lloyds TSB, Branch : Uxbridge

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5, Chapel Road, London. W13 9AE. Tel: 0208 -810 0835 • Founded on 10.08.1991 Charity No : 1014409
www.ammanealing.com • Email : info@ammanealing.com

# மகிந்தா மாமாவுடன் சில நிமிடங்கள்




*அன்புள்ள மகிந்தாவிற்கு!*

நான் கடிக்க மிளகாய் எழுதிக் கொள்வது, அவசர அலுவலாக வெளியூர் சென்றிருந்ததால் சில மாதங்களாக அரசியல் அலசல்களில் கலந்துகொள்ள முடியவில்லை. எனினும் தற்போதைய உங்களின் நிலை குறித்து வேதனையடைந்த நான் சில ஆலோசனைகளை கூறிவிடலாம் என நினைக்கின்றேன்.

எனது ஆலோசனை என்பது உங்களை சுற்றி இருப்பவர்கள் கூறுவதுபோல குரங்குவால் போல் நீண்டு செல்லாது. இந்த பத்தியின் முடிவில் ஒரு வரியில் எனது ஆலோசனை இருக்கும். அதனைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்ற ஆலோசனைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையால் நீங்களும், உங்களை சுற்றியுள்ளவர்களும் வெகுவாக ஆடிப்போய்விட்டீர்கள் என்பதை உங்களின் நடவடிக்கைகளில் இருந்து அறிந்து கொண்டேன்.

அதனை முறியடிப்பதற்கு பல இராஜதந்திரிகளை நீங்கள் நியமித்துள்ளதுடன், மே தினத்தில் மிகப்பெரும் ஊர்வலத்தை நடத்தி சிறீலங்கா மக்கள் உங்களுடன்தான் என்று காட்டப் போகிறீர்களாம். எந்த நாதாரி மாமா உங்களுக்கு இந்த ஆலோசனைகளை தந்தது?

அமெரிக்கா தன்மீது தாக்குதல் நடத்தப் போகின்றது என்பதை தெரிந்துகொண்ட ஈராக் அதிபர் சதாம் குசேன் 2002 ஆம் ஆண்டு ஈராக்கில் தேர்தல் ஒன்றை நடத்தி தனக்கு 99.9 சத விகித மக்கள் வாக்களித்துள்ளதாக காட்டியிருந்தார். ஆனால் அதன் பின்னரும் தொமகவ் குரூஸ் ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளது மாமா.

மாமா நீங்கள் மகாவம்சத்திலும் இடம்பிடிக்கப்போகிறீர்களாம், நல்லது மாமா, பண்டைய கால சரித்திரங்களை புரட்டுவதை கைவிட்டு நிகழ்கால சரித்திரங்களை புரட்டுங்கள் மாமா. ஏனெனில் சதாம் குசேன் கூட குருதியினால் குரானை எழுதி பள்ளிவாசலில் வைத்தவர் தான். ஆனால் என்ன நடந்தது?

தனது தலை தான் முதலில் உருளப்போகின்றது என்பதை தற்போது உறுதிப்படுத்திக் கொண்டுள்ள உங்களின் சகோதரன் கோத்தா, சீனாவையும், ரஸ்யாவையும் கூட்டிக்கொண்டு வரப்போவதாக மிரட்டுகிறார். அவரின் மிரட்டலை நம்பி நீங்கள் ஏமாறவேண்டாம். ஏனெனில் லிபியாவின் தெற்கு பகுதியில் மட்டும் 44 பில்லியன் பரல் எண்ணைப்படிவுகள் உள்ளது மாமா. ஈராக் தற்போது உற்பத்தி செய்யும் எண்ணையின் அளவு நாள் ஒன்றிற்கு 2.6 மில்லியன் பரல்கள். இந்த நாடுகளை கூட கைவிட்ட சீனாவும், ரஸ்யாவும் உங்களின் கருவாடு காயப்போடும் துறைமுகத்தை காப்பாற்ற ஓடிவருவார்கள் என நீங்கள் எண்ணுகிறீர்களா? வழமைபோல அவர்கள் எதிர்ப்பை காண்பிப்பார்கள் அவ்வளவு தான் அதற்குமேல் என்ன செய்ய முடியும்.



லிபியா பிரச்சனையிலும் வெளிநடப்பு செய்தவை தான், ஆனால் அவர்களில் தலைக்கு மேலால் உரசிச்சென்ற ரொர்னடோ ஜி-2குண்டு விமானம் லிபியாவுக்குள் புகுந்துவிட்டது. மேற்குலகத்தை சீனா முழுமையாக எதிர்த்தால் சீனர்கள் செய்யும் பொம்மைகளை அவர்களே வைத்து விளையாட வேண்டிய நிலை தான் ஏற்படும். அது சீனாவுக்கும் தெரியும்.

ரஸ்யா காரர்களில் நிலையும் அதுதான் கோதுமை மாவைக்கூட அமெரிக்காவிடம் கடன் கேட்கின்றனர். உலகிலேயே ஒரு டசின் விமானம்தாங்கி கப்பல்களை கொண்ட ஒரே நாடு அமெரிக்கா தான் மாமா. அவர்கள் நடத்தும் வானவேடிக்கைகளில் எவற்றை உங்களுக்கு உதவுவார்கள்.என நீங்கள் எதிர்பார்க்கும் சீனாவும்,ரஸ்யாவும், இந்தியாவும் தடுத்துள்ளன?

கொசோவோ, சேர்பியா, மென்ரோநீக்கிரோ, அல்பேனியா, ஆப்கானிஸ்த்தான், ஈராக், தென் சூடான், லிபியா, ஐவோரி கோஸ்ட், எகிப்து, துனீசியா, யேமன், சிரியா என அவர்கள் கால் வைத்த இடங்கள் அனைத்தும் வெற்றியை தான் கண்டுள்ளனர். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் கைக்கொண்ட உத்திகள் வேறு மாமா. நீங்கள் எதிர்பார்க்கும் பாதையால் அவர்கள் வரப்போவதில்லை.மின்சார நாற்காலியில் உக்காரப்போவதாக கூறி சிங்கள மக்களை உசுப்பேத்தியுள்ளீகள்? மாமா. நல்லது,நீங்கள் மின்சாரநாற்காலி என்று சொன்னது, உங்களை கொண்டுபோய் அமெரிக்காவில் கொல்லுவார்கள் என்று மக்களை ஆத்திரமடையச் செய்வதற்காகத்தான் என் நினைக்கிறேன் மாமா. ஏனெனில் சிறீலங்காவில் மின்சாரக்கதிரை கிடையாதுதனே.

இங்கேயும் ஒரு தப்பு பண்ணீட்டிங்கள் மாமா, மீண்டும் சமகால வரலாற்றை பாருங்கள், சதான் குசேனை கூட்டிச் சென்று ஈராக்கில் தான் தூக்கினார்கள், போர்க்குற்றவாளியான யூக்கோஸ்லாவாக்கியா அதிபரும் தனது நாட்டில் வழக்கை சந்திக்கும்போதே மரணத்தை தழுவினார். துனிசியா அதிபருக்கும் அங்கு தான் சாவு. இவை என்னத்தை கூறுகின்றன?

உங்களை மாதிரி நாதாரிகளை கொண்டு போய் தமது நாட்டில் தூக்கி தங்களின் பெயரை அவர்கள் கெடுக்கப்போவதில்லை. உங்களுக்கு உங்கே தான் மாமா தூக்கு கயிறு. எனினும் நீங்கள் பதவியில் இருப்பதால் கொஞ்சம் தாமதமாகலாம்.

ஆனால் நீங்கள் முன்னர் நினைத்தது போல 40 வருடங்கள் சிறீலங்காவை ஆட்சி செய்ய முடியாது மாமா, 18 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தது கூட சுத்த வேஸ்ட். ஏனென்றால் உலகில் 30 வருடம் 40 வருடம் என ஆட்சி செய்தவர்கள் எல்லாம் துண்டக்காணோம் துணியக்காணோம் என ஓடுகிற காலமிது.

நீங்கள் ரீவி பார்க்கிறனியள் தானே.கேணல் கடாபிக்கு விழுகிற அடியை பார்த்துதமது நாட்டிலும் ஒருவர் 10 வருடம் மட்டுமே ஆட்சி செய்யலாம் என கியூபா தன்னிட்சையாகவே அறிவித்துள்ளது. முறுக்கு மீசையுடன் திரிந்த சிரிய அதிபர் அசாத் கூட மீசையை மளித்துவிட்டு வெள்ளைக்காரனை போல காட்சி தருகின்றார்.

என்ன மாமா செய்வது, காலம் கெட்டுக்கிடந்தால் புடலங்காய் கூட பாம்பாகத் தான் தெரியும். உங்கட நிலையும் அப்படித்தான். பிரித்தானியாவில் இருந்து தலைதெறிக்க ஓடிய நீங்கள், உலகக்கோப்பைக்கான துடுப்பாட்ட போட்டியில் இருந்தும் நடுச்சாமத்தில் தலையிலை துண்டைப்போட்டுக்கொண்டு ஒடியிருக்கிறீர்கள்.இப்ப உங்களுக்கு ஓடுகிறகாலம். மலையாள மந்திரிகர்கள் தந்த தாயத்துக்களுக்கும், மந்திரித்த நூல்களும் கூட வேலை செய்யுதில்லை எனகேள்விப்பட்டேன். படுகொலைகளை செய்துபோட்டு சாமி கும்பிட்டு என்ன பிரயோசனம்?


சரி மாமா எனக்கு நேரமாகீட்டுது, நான் சொல்ல வந்த ஆலோசனையை மறந்துபோடுவேன். என்னென்றால், உங்களை சுத்தியிருப்பவர்கள் கூறுவதை கேட்டு இருக்கிற கொஞ்சக் காலத்தையும் பாழடிக்க வேண்டாம் மாமா.

1991 ஆம் ஆண்டு வீழ்ந்த சோவியத்து தொடக்கம் தற்போது விழப்போகும் லிபியா வரையிலும் நடந்த பிரச்சனைகளை அலசி ஆராய்ந்துநூம் போட்டு யோசித்துப் பார்த்தேன் மாமா. எனக்கு ஒன்று மட்டும் தான் விளங்கியது.

**"Count your days" மாமா.**

இது தான் எனது ஒரு வரி ஆலோசனை. அதனை மாற்றமுடியாது மாமா. இதனை மனதில் வைத்துக்கொண்டு செயல்படுங்கள். நான் வாரன் மாமா.என்றும் நீங்கள் செய்த படுகொலைகளை மறக்காத,

*- கடிக்க மிளகாய்*






✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

## மனம் விட்டு பேசுங்கள் மகிழ்ச்சி பொங்கும்.



அந்த நாட்களில், பாடசாலை பருவத்தில், ஒத்த வயதுடையவர்களோடு ஓயாமல் அரட்டை அடித்த ஞாபகம் சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட போது அறியாத சில உண்மைகளை அடி மனசில் உணர்த்தியது. எம்மில் எத்தனை பேருக்கு இந்த அனுபவம் கிடைத்ததோ இல்லையோ, நிச்சயம் ஒரு சிலருக்காவது வந்திருக்காவிடில் அவர்கள் எதையோ மறைக்கிறார்கள் என்று தானே அர்த்தம்.

புலம்பெயர்ந்து வாழும் சராசரி குடும்பங்களில், குறிப்பாக இளம் குடும்பங்களில் வேலைக்கு செல்லும் கணவனும் மனைவியும், ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசும் நேரத்தை நாளொன்றுக்கு உத்தேசமாக கணக்கெடுத்தால் ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலம் கூட அமைவது கஷ்டம். அதிலும் பாடசாலைக்கு செல்லும் குழந்தைகள் இருப்பின் அந்த ஒரு மணித்தியாலம் கூட கிடைப்பதே அருமை. இது பொய்யல்ல. அனுபவப்பட்டவர்களே அழுது தொலைத்த கதைகள். ஏன் இந்தக்கணக்கு என்று பார்த்தால், அதுதான் பிரச்சினையே.

சராசரி குடும்பங்களில் மகிழ்ச்சி இல்லை. மனம் விட்டு பேச முடியாத சாதாரண சபலங்கள், அடுக்கடுக்காக மனதில் நிரம்பி குமுறி வெடிக்கும் எரிமலைபோல் ஒரு நாள் வெளிப்படும். கக்கும் எரிமலையை கட்டுப்படுத்த முடியாமல், விலகிச்செல்லும் முடிவுக்கே குடும்பங்கள் தள்ளப்படுகின்றது. புலம்பெயர்ந்த தமிழ் குடும்பங்களில் மலிந்து போய்க்கிடக்கும் விவாகரத்து அல்லது மனமுறிவு இதற்கு நல்ல உதாரணம். ஓயாமல் ஒளியாமல் உழைப்பது நல்ல ஆண்பிள்ளைக்கு அழகுதான். ஆறுதலாக சில மணித்தியாலங்களாவது குடும்பத்துடன் செலவு செய்ய முடியுமானால், ஆண்களுக்கு அதைவிட அழகு வேறு எதுவுமே இல்லை.

எனது பயணத்தில் ஒரு புதிய அனுபவம். சுராசரிஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்கள் பேசிய மொழி எனக்கு புரியவில்லை இடைக்கிடை அவர்கள் பாவித்த ஆங்கில சொற்களைத்தவிர. ஆனால் அவர்களுடைய தோற்றம், நடவடிக்கைகள் யாவும் இஸ்லாமிய சகோதரர்கள் போலிருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை ஆறு அல்லது ஏழு பேராக இருக்கலாம். விமானத்தில் வெவ்வேறு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், எல்லோரும் அருகருகே இடம் பிடித்து ஒரு சிலர் நின்று கொண்டும் இடைவிடாது அளவளாவிக்கொண்டே இருந்தார்கள். ஆரம்பம் முதல் விமானம் தரையிறங்கும் வரை, ஒரு சில இடைவெளி தவிர, கிட்டத்தட்ட பத்து மணித்தியாலங்கள் அவர்க்ளுடைய அன்யோனயமான சம்பாஷணை நிற்கவே இல்லை.

இவர்களைக்கண்டு ஒருபுறம் எரிச்சலும் மறுபுறம் பொறாமையும் எனக்கு ஏற்பட்டது. ஒரு புதிய அனுபவம், ஏனெனில் எமது குடும்பங்கள் தவறவிட்ட ஒரு மகிழ்ச்சியை அவர்களால் அனுபவிக்க எப்படி முடிந்தது.

## பாவிக்காத சக்தியை விரைவில் மீளப்பெற புதியரக மின்கலம்.

அன்றாட வாழ்வில் பாவனைக்குட்படுத்தப்படும் அத்தியாவசியமான பொருட்களுக்கு மின்கலம் (Battery) தரும் மின்சக்தி இன்றியமையாதது. கைத்தொலைபேசி தொடக்கம் மடிக்கணணி (Laptop) ஈறாக மின்சாரத்தால் இயங்கும் வரைக்கும் லித்தியும் இயோன் (Lithium Ion) மின்கலங்கள் இல்லாமல் இயங்க வைக்க முடியாத வேவை இன்று நிலவுகிறது. இதில் கண்டறியப்பட்ட சிக்கல் என்னவெனில், மின்கலத்தில் விரயமாகும் சக்தியை மீள நிரப்ப வெகு நேரம் எடுப்பது காற்றாக பறக்கும் மனிதர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கவனித்தார்கள்.

இலிநொய்ஸ் (Illinois) பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் Paul Braun தலைமையில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட குழுவினர், இரண்டு வருட கால கடும் முயற்சியின் பலனாக, புதியதோர் தொழில் நுட்பத்தை கண்டுபிடித்துள்ளனர். இதுவரை மின்சாரத்தினுள் மின்சக்தியை தேக்கிவைக்க உதவும் Cathode எனப்படும் மெல்லிய தகடும், Anode எனப்படும் தகடும் மின் சக்தியை உள்வாங்கும் போது ஒரு திசையிலும், விரயமாகும் போது எதிர் திசையிலும் இயங்குவது வழமையான முறையாகும். இவர்களுடைய ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய வடிவமான 3-D Nanostructure கூடிய வேகத்தில் மின்சக்தியை உள்வாங்க வழிவகுத்துள்ளது.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

ஆராய்ச்சிநிலையத்தில், பரீட்சிக்கப்பட்ட இப்புதியரக மின்கலம் பத்து வினாடிகளில் இழந்த சக்தியை மீளப்பெறுவது நிருபிக்கப்பட்டுள்ளது. தமது ஆராய்ச்சியின் நம்பகத்தன்மையை அறிக்கை வடிவில் கடந்த மார்ச் மாத Nature சஞ்சிகையில் Braun அவர்கள் சமர்ப்பித்துள்ளார்.

மேற்கூறிய கண்டுபிடிப்பை மின் கலத்தயாரிப்பாளர்கள் நெறிப்படுத்த ஆரம்பித்தால், புதியரக மின்கலங்கள் பாவனைக்கு வருவது வெகு தூரத்தில் இல்லை. பாவனையில் வந்திருக்கும் தற்போதய மின்கலங்களுக்கு அடிக்கடி புத்துயிர் கொடுக்க வேண்டிய நீண்ட நேரத்தை, அப்புதியரக மின்கலம் வெகுவாக குறைப்பதோடு, மின்சக்தியால் இயங்கும் கார் வாகனங்களுக்கு, எரிபொருள் நிரப்பும் கார்களை போன்று அதேயளவான நேர அவகாசத்தில் இப்புதியரக மின்கலங்களாலும் மின்சக்தியை நிரப்ப முடியுமென Braun அவர்கள் தெரிவிக்கிறார்.

எரிபொருள் பாவனையால் மாசடைந்து வரும் சூழல், ஆராய்ச்சியாளர்களின் அயராத உழைப்பால், ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்படும் என்ற விஞ்ஞானிகளின் எதிர்பார்ப்பை பசுமை விரும்பிகள் நிச்சயம் வரவேற்பார்கள்

## வலிக்காத நுளம்பு ஊசி.

குழந்தைகள் தொட்டு முதியவர்கள் வரை ஊசிமருந்தை உடலில் ஏற்றும்போது முகம் சுளிக்காதவர்கள் கிடையவே கிடையாது. ஏனெனில் மெல்லிய உலோகத்தால் உருவாக்கப்பட்ட ஊசிகள் உடலின் தசையை ஊடுருவும் போது வலியேற்படுவது இயற்கையே. முன்பொரு காலத்தில் பாவிக்கப்பட்ட ஊசியின் தடிப்பை விட இப்போது பாவிக்கும் ஊசிகள் மிக மெல்லியதாகவும், கண்ணுக்கு தெரியாத கடுகளவு மோட்டார்கள் மூலம் செலுத்தப்படுவதினாலும் தசையில் உண்டாகும் வலி குறைவாக இருந்தாலும், நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் அடிக்கடி இரத்த பரிசோதனை செய்ய ஊசி பாவிக்கப்படுவதால் அவர்களுக்கு உண்டாகும் வலியை தடுக்க கண்டுபிடித்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.

கேன்சாய் (Kansai) பல்கலைக்கழகத்தை சேர்ந்த Seiyi Aoyagi என்பவரும் அவரது குழுவினரும் மேற்கொண்ட ஆராய்ச்சியில், அவர்களுக்கு கிடைத்த இயற்கையான துரும்பு, உடலில் இரத்தத்தை உறிஞ்சும் நுளம்புகள் எப்படி நுணுக்கமாக உடலில் இருந்து கடியோ வலியோ தெரியாமல் இரத்தத்தை உறிஞ்சுகின்றதோ, அதே போன்றதொரு வடிவத்தை உருவாக்கியுள்ளார்கள். நுளம்புகளின் வாயின் வடிவத்தையொட்டியே இந்த புதியரக ஊசி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியில் ஈடுபட்ட Seiyi Aoyagi இதற்கு முன்னர் பல தடவைகள் முயற்சி செய்திருந்தாலும், தற்போது கண்டுபிடித்துள்ள நுளம்புகளின் வாயை ஒத்த ஊசி, பரீட்சைகள் மூலம் உடலில் ஏற்றப்படும்போது, உடலில் எந்தவித வலியும் உணர முடியாத அளவிற்கு செயல்படுவதாக பெருமிதம் அடைகின்றனர்.







Vithu.com

# VITHU TRUST FUND

- Vithu Trust is a charity organisation dedicated to improve and safeguard the lives of Children inSri Lanka and raises voice for the needy.
- There are thousands of children who go through the day without a single nourishing meal. They include victims of war, which has thrown the bread - winners of these families out of work and the future of our youngsters into darkness.
- Your contribution as a donor, no matter how big or small, will make a huge difference in the lives of these children.
- With your donation we help children in need o food, shelter, education, Counselling & medical.

**விதியை மதியால் வெல்லலாம்!**
**Vithu Trustஆல் பலரின் விதியை மாற்றலாம்!!**

Contact : **Vithu Trust Fund**


**T : +44 208 407 5767 - M : +44 796 144 1237**

Registered charity since 2004 in England & Wales - 1107418
W : www.vithu.com - E : charity@vithu.com

Bank Details


## VITHU TRUST FUND

Account No : 92205262 - Sort Code : 40-18-41
HSBC, Croydon Branch 9 Wellesley Road, Croydon, CR9 2AA, UK











# நரகத்தில் இத்தாலிச் சனியன்




இத்தாலிச் சனியாள், ஐஸ்வர்யாராய்,தீபிகா படுகோன் ஆகியமூவரும் இறந்துநரகத்திற்குப் போனார்கள். அங்கு அவர்கள்நிறையக்கோழிக்குஞ்சுகள் இருக்கும் ஒருதோட்டத்தில் அடைத்துவிடப்பட்டனர். மூவருக்கும் பெரும் கவலை தமக்குஎன்னதண்டனைகிடைக்கப் போகிற தோஎன்று. அங்குள்ளகாவலன் அவர்களுக்கு சொன்னான் நீங்கள் இங்குஉள்ளகோழிக் குஞ்சுகளைமிதிக்காமல் இருக்கும் வரை உங்களுக்குஎந்தவிதமானதண்டனையும் கிடையாதுஎன்று.

எங்குபார்த்தாலும் கோழிக்குஞ்சுகள். ஆனாலும் இத்தாலிச் சனியாள், ஐஸ்வர்யாராய்,



தீபிகாபடுகோன் ஆகிய மூவரும் கவனமாக இருப்பதாகமுடிவெடுத்தனர். ஆனால் மறு நாளே அங்குள்ளதொலைக் காட்சியில் தாளம் படப்பாடல்கள் ஒளிபரப்பானதைப் பார்த்து மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த ஐஸ்வர்யாராய் ஒருகோழிக் குஞ்சைமிதித்துவிட்டார். உடனே அவர் இடி அமீனுடன் ஒருதனிஅறையில் வைத்துப் பூட்டப்பட்டார்.

ஒருவாரம் இத்தாலிச் சனியாளும் தீபிகாபடுகோனும் மிகக் கவனமாக இருந்தார்கள். ஆனால் உடம்புமுழுவதும் மறைக்கும் ஆடையைஅணியும் அவர்களுக்குக் கொடுத்தபோது தீபிகாபடுகோபத்தில் துள்ள ஒருகோழிக் குஞ்சு மிதிபட்டது. தீபிகா மா ஓசேதுங்குடன் ஒரு அறையில் வைத்துப் பூட்டப்பட்டார்.



இப்போதுசனியாள் மிகக் கவனமாகத்தான் இருந்தார். ஒருகோழிக் குஞ்சு கூட மிதிபடவில்லை. ஆறு மாதங்கள் ஓடியது. ஒருநாள் திடீரெனசனியாள் ஹ்ரித்திக் ரோஷனுடன் வைத்துஒருதனியறையில் பூட்டப் பட்டார். மகிழ்ச்சிதாங்கமுடியவில்லசனியாளுக்கு. ஹ்ரித்திக் ரோஷன் கவலையுடன் சொன்னார் "இரு கோழிக் குஞ்சுகளைஒரேயடியாகமிதித்து விட்டேன்".

*- வேல் தர்மா*

## வாசகர் கருத்துக் களம்

அன்பின் ***ஒரு பேப்பர்*** ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். ஊங்களின் ***ஒரு பேப்பர்*** எனது கைக்குக் கிடைக்கும் போதெல்லாம் முதலில் இருந்து கடைசி வரை வாசித்து மகிழ்வேன். குறிப்பாக பக்கம் 6ல் வரும் தன்னம்பிக்கை தரும் கருத்துக்கள் மிகவும் கவர்ந்த பக்கம். பக்கம் 18 மீண்டும் போர் படித்து ரசித்தேன் எல்லாம் சரி ஒரு இடத்தில் "முக்காலும் காகம் முழுகிக் குளித்தலும் கொக்காகாது" என்ற ஓர் உதாரணம் கண்டேன். நான் கேட்பது என்னவெனில் காகம் ஏன் கொக்காக வேண்டும்? யாரோ எப்போதோ வெள்ளைதான் உயர்ந்தது என்ற கருத்தை சொன்னார்கள் என்பதற்காக அதை தூக்கிப்பிடித்து ஏதோ பழமொழி எழுத வேண்டுமென்பதற்காக இன்னமும் எழுதிக்கொண்டிருப்பதில் புதுமை இல்லை புதுமையாக சிந்திக்க வேண்டும், ***ஒரு பேப்பர்*** புதுமைக் கருத்துக்களில் ஒளிர வேண்டும். அப்போது தான் ***ஒரு பேப்பர்*** இன் தனித்துவம் உணரப்படும். காகம் கொக்கை விட எல்லா விதத்திலும் சிறந்த பறவை. மனிதனின் வாழ்விற்கும் பக்க துணையாக மனிதனுடனேயேவாழ்கின்றது. மனித வாழ்விற்கு எந்த விதத்திலும் (நேரடியாக) உதவாத ஒரு காட்டுப் பறவையாக ஏன் மாற வேண்டும் என்று எப்போதாவது சிந்தித்தது உண்டா? எல்லாம் எங்களின்அடிமனதில் ஊறிப்போன வெள்ளை தான் சிறந்தது என்ற வக்கிர புத்தி. இதற்கு சாட்டாக பழமொழி என்ற பெயரில் உழுத்துப் போன சொற்களை கொண்ட வாக்கியங்களை பயன்படுத்துவதை இனிமேலாவது தவிர்த்து விடுங்கள். வேண்டுமென்றால் முக்காலம் கரைந்தாலும் கொக்கு காக்கையாகுமா? ஏன்று காகத்தின் பெருமையை உலகறியச் செய்யுங்கள். பெருமையுள்ள காகத்தை சிறுமைபடுத்தாதீர்கள். பழமொழி என்ற பெயரில் நீங்கள் கொக்கைப் பெருமைப் படுத்துவதில் எந்தவித நியாயமும் இல்லை. ஏனெனில் காகத்தை விட கொக்கு எந்த விதத்திலும் சிறந்த பறவை அல்ல இதைப் புரிந்து கொண்டால் சரி.

*- சடாசிவா*

## ஈழத்தில் சிறையிட்ட சுவாசங்கள் - பனித்துளி சங்கர்

கொன்று குவித்தது உடல்களை
மட்டும் இல்லை தமிழனின்
உணர்வுகளையும்தான் .!

உடல்கள் இல்லை என்ற போதும்
இன்னும் சிறைப் பிடிக்கப்பட்டுதான்
கிடக்கிறது தமிழனின் சுவாசங்கள் அந்த
முள்வேலி முகாம்களில்

தோட்டாக்களின் சத்தங்களும்,
தமிழனின் கதறல்களும் மட்டுமே
இன்னும் ஓங்கி ஒலித்துக்
கொண்டிருக்கிறது
நிசப்த இரவுகளிலெல்லாம்
தனிமை என்ற பெயரில் .!

இரவுகள் கடக்கும் நேரத்தில் எல்லாம்
சிறகுகளில் சிலுவைகள் சுமக்கிறது
உள்ளம் .!

தூரத்துப் பெண்ணொருத்தியின்
கதறல் சத்தம். – அழுது அழுது
வறண்டு போன கண்களிலும் மீண்டும்
ஊற்றெடுக்கும் கண்ணீர் !

இறந்த உடலென்று உணராத
குழந்தையொன்று அங்கு
அழுகை நிறுத்தி கொங்கைகளை
சுவைத்துக் கொண்டிருக்கிறது .

காக்கைக்கும் , கழுகுக்கும்
பங்காளி சண்டை இறந்த தமிழனை
யார் முதலில் ருசிப்பது என்று .

எஞ்சியதை இழுத்து செல்ல
எதிர்பார்புகளை எல்லைகளில்
நிறுத்தி காத்திருக்கும் ஓநாய் ஒன்று .

இவர்களின் உயிர்களை எல்லாம்
குடித்து முடித்த மகிழ்ச்சி களைப்பில்
ஓய்வெடுக்கும் எதிரியின் துப்பாக்கிகள்
என ஒவ்வொன்றாய் பார்த்து ரசித்த
இரவொன்று இறந்துபோனது பகலை
பிரசவித்த சில நொடிகளில் !!!!....


EACH தொண்டர்கள் தேவை!

For more information Call EACH on
020 8577 6059
For a pack
Email:info@eachhounslow.org.uk
Website:www.eachcounselling.org.uk

**தமிழ் சமூகத்தினரின் வாழ்க்கையை மீழமைக்க உதவும் எம் இப் பாரிய திட்டத்தில் நீங்களும் பங்கெடுக்க விரும்புகின்றீர்களா?**

போரினாலும் வன்முறைகளினாலும் பாதிக்கப்பட்ட உங்கள் உறவுகளின் வாழ்க்கையை மீழமைக்க உதவுவதற்கு தமிழ் சமூகத்திடையே இருந்து ஆண் பெண் தொண்டு பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**இத்திட்டத்தில் பங்கு கொடுத்தால்:**

பிரத்தியேக பயிற்சி பெறுவீர்கள்.

புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் உங்களுடைய வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வீர்கள்.

உங்களுடைய போக்குவரத்துக்கான செலவுகளும் வழங்கப்படும்.

**எமது தொண்டர்களிடம் நாங்கள் எதிர் பார்ப்பது:**

முழுமையான பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழிகளையும் பேசத் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது வாரத்தில் 3 மணி நேரமாவது எமக்காக செலவிட வேண்டும்.

ஆதரவு மேற்பார்வை பயிற்சிப் பட்டறைகளுக்கு சமூகமளிக்க வேண்டும்.

மேற்கொண்டு பயிற்சிகளை பெற தயாரானவர்களாக இருக்க வேண்டும்.

**EACH, established in 1991, is a voluntary sector organisation providing specialist community- based services for individuals and families affected by alcohol and drug problems, domestic violence and mental health concerns.**

Registered Charity No **1025967** Company No **2818814**

If you would like any further information, email info@eachhounslow.org.uk or call **EACH** on **020 8577 6059** for a pack.
Website: www.eachcounselling.org.uk

The project is funded by Equality and Human Rights Commission

# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## புதுவருடம் புகாத வன்னி.



2009 மே மாதத்திற்கு பின்பு எங்களுக்கு என்ன புதுவருடம் வேண்டிகிடக்கிறது என்று சலப்படைந்தார்கள் வன்னி மக்கள். இழவு வீட்டில் எப்படி சந்தோஷமாக புதுவருடம் கொண்டாட முடியுமென்று எண்பது வீதமானவர்களுக்கு மேல் புதுவருடம் வந்ததே தெரியாமல்தான் இருந்தார்கள்.

## புத்த விகாரையில் புது வேட்டி அவிழ்ந்தது டக்ளஸ்சுக்கு.



புதுவருடத்தன்று யாழ் நாக விகாரைக்கு போய் முட்டுக்காலில் இருந்து ஶ்ரீ விமலகோரிடம் ஆசி பெற்றுவிட்டு எழும்பும் போது கால்களில் மிதிபட்ட வேட்டி கழண்டுவிட்டது. சிரைந்த வேட்டியை தேரரே சேர்த்தெடுத்து கொடுத்திருக்கிறார். தன்னை அசுவாசபடுத்தியடக்ளஸ் இந்து ஆலயங்களை விடவும் புத்த ஆலயங்கள் அமைதியானவை என்று புகழாரம் சூட்டியிருக்கின்றார்.

## களமிறங்கும் கருணாவும், கே.பியும், டக்ளஸ்சும்.



ஐ.நா நிபுணர் குழுவின் போர்க்குற்ற அறிக்கையை எதிர்த்து மிகப் பெரிய அளவில் ஆர்ப்பாட்?ட எதிர்ப்புகளை காட்ட சிங்கள மக்களை விடவும் தமிழ் மக்களை வைத்து எதிர்ப்பது சிறந்ததென கே.பி வழங்கிய ஆலோசனையை அடுத்து கோத்தபாய இந்த மூவரையும் 17.04.11 அன்று அவரது அலுவலகம் அழைத்து பெருந்தொகை பணமும் கொடுத்து, தமிழ் மக்களை ஆர்ப்பாட்டங்களுக்கு தயார் படுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## யாழ் அரச அதிபரின் தராள மனம்.



யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாக யாழ் மேஜர் கருத்து சிங்காவை தொடர்பு கொண்டு தனது ஆதங்கத்தை தெரிவித்ததுடன், யாழில் பொதுமக்களை பாரியளவில் திரட்டி ஐ.நாவுக்கு மிகப் பெரிய எதிர்பை தெரிவிக்க வேண்டுமென்றும், இதற்கு இராணுவத்தின் பங்களிப்பும் தேவைப்படும் பட்சத்தில் தனக்கு உதவ வேண்டுமென்றும், இதை ஜனாதிபதிக்கு அறிவிக்கும்படியும் கேட்டுள்ளார்.

## அடிமை வேலை செய்யும் அன்றைய போராளிகள்.



முல்லை மாவட்டத்தில் கேப்பாபுலவு, மற்றும் துணுக்காயிலும் பாரியளவில் காடுகளை அழித்து சிங்கள கிராமங்களை அமைத்து வருகிறது சிங்கள அரசு. இதற்கு முன்னைநாள் போராளிகளை வைத்து அடிமை வேலை வேண்டுகிறது சிங்கள இராணுவம். ஆயிரக்கணக்கான போராளிகளின் கால்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் காடழிப்பது, கல்லுடைப்பதென பல வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## T.B.C நிமோ.

இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் T.B.Cஇல் விடுதலை புலிகளுக்கு எதிராக நச்சு வார்த்தை பிரச்சாரங்களை பற்றி பேசி வந்தவராம் இந்த நிமோ. இவரது பெயர் முருகுப்பிள்ளை நிர்மலன். இவர் ஒரு காலத்தில் வேலைக்கள்ளனாக இருந்து விடுதலை இயக்கமொன்றில் சேர்ந்தவர். பின் வெளிநாடு போய்விட்டார். கோட்டாவை ஆதரிக்கும் பாணியில் மக்களோடு பேசி வருவதோடு, காணிப்பிரச்சினைகளிலும் மூக்கை நுளைத்து இராணுவத்தை பயன்படுத்தி தான் சார்ந்தவர்களுக்கு காணிகளை அடாத்தாக பிடித்து கொடுத்து வருகிறார்.

## வடமராட்சியில் சிங்களவர்.



யாழ் வடமராட்சியில் திக்கம், கரவெட்டி, நெல்லியடி போன்ற இடங்களில் தொகையாக சிங்கள இளைஞர்கள் வீடுகளை வாடகைக்கு பெற்று தங்கியிருக்கிறார்கள். இவர்கள் பகலில் குடியும் கும்மாளமுமாக இருப்பார்கள். மாலையில் கூட்டம் கூட்டமாக எங்கேயோ போய்விடுகிறார்கள். பின்பும் அதிகாலையில்தான் வீடுகளுக்கு வருகிறார்கள். இவர்களில் வீதி வியாபாரிகளும் உள்ளனர். ஆனாலும் கோத்தபாயவின் தனிப்பட்ட உளவாளிகள்தான் இவர்களில் பலர் என்று அறியமுடிகிறது.

## இலங்கை கிறிக்கற் சபை நடுக்கம்.

வருகிற மாத கோடைகால துடுப்பாட்ட போட்டி இங்கிலாந்துக்கும், இலங்கைக்கும் இலண்டனில் நடைபெற இருக்கின்றது. போர்க்குற்றம் மகிந்தா மீது சுமத்த முன்னரே இலண்டன் தமிழர்களை மகிந்தாவை கலைத்தவர்கள். அப்பட்டமாக ஆதாரங்களுடன் இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தப்பட்ட பின் இலண்டன் வந்து மானத்தோடு கிறிக்கற் விளையாட இலண்டன் தமிழர்கள் விடமாட்டார்கள். முரளியும் இல்லாதவிடத்து மும்முரமாக தமிழர்கள் களமிறங்கி ஆட்டத்தை அவமானப்படுத்துவார்கள் என்ற பயம் பிடித்திருக்கிறது அவர்களுக்கு.

## ஐ.நா அறிக்கை.... ( 18ம் பக்க தொடர்ச்சி)

வாகனப் போக்குவரத்தையே பாதிக்குமளவுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு நடத்திய ஊர்வலங்களையெல்லாம் ஏதோ காரணத்திற்காக ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்தன. போதாததற்கு தமிழ் இளைஞன் செய்த உண்ணாவிரதப் போராட்டம் கூடக் கொச்சைப்படுத்தப்பட்டது.

இப்போது எல்லாம் முடிந்த பிறகு என்றுமில்லாத அக்கறையுடன் சில ஊடகங்கள் இவ்விடயத்தில் கரிசனை காட்டுகின்றன. 'தற்போதுதான் அவர்களுக்கு உண்மைகள் விளங்கியிருக்கின்றன.' என்று இதற்கு நாம் ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கமுடியாது. அது சரியான கணிப்பீடாகாது.

தெற்காசியப் பிராந்தியத்தில் நடைபெறும் இத்தகைய மனித உரிமை மீறல்களை கண்டும் காணாததுபோல நடக்கவிட்டு, சட்டிலைட் மூலமோ, விலைக்கு வாங்கப்பட்ட ஏஜண்டுகள் மூலமோ அவற்றைப் படம்பிடித்து வைத்துக்கொண்டு, தங்கள் ராஜதந்திர தேவைகளுக்காக அச்சான்றுகளைப் பாவித்து சம்பந்தப்பட்ட நாடுகளை மிரட்டுவதற்காகவே இச்செயல் முறைகள் நடைபெறுகின்றன. மற்றும்படி எந்தவொரு அக்கறையும் பாதிப்புக்குள்ளாகும் மக்கள்மீது யாருக்குமில்லை. இருந்திருந்தால் அதனை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தியிருக்க முடியும். மொத்தத்தில் வெள்ளை மாளிகையுட்பட்ட எல்லா மேற்குலக அதிகார வர்க்கத்தினதும் உள்நோக்கம் யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்களைப் பலிக்கடாக்களாக்கி அந்த கொடுமைகளைச் சான்றாதாரங்களாக வைத்துக்கொண்டு அவ்வாதாரங்களைத் தங்களுக்கு வேண்டிய நேரத்தில் மனிதவுரிமை மீறல் என்ற பெயரில் உரியவிதத்தில் பயன்படுத்துவதுதான்.

அரசியலில் , ராஜதந்திரத்தில் இத்தகைய கயமைத்தனங்கள் நிறையவுள்ளன. அதனால் அமெரிக்கா போன்ற நாடுகள் வன்னியில் நடந்த கொடுமைகளைப் படங்களாக சட்டிலைட்டில் எடுத்து வைத்துள்ளன என்று நாம் திருப்தியடைவதில் எந்த அர்த்தமுமில்லை. தங்களது உள்நோக்கங்களுக்காகவே நாம் இனப்படுகொலை செய்யப்படுவதை அவர்கள் படம்பிடித்தார்கள். அதைப்போதியசாட்சியங்களாக வைத்துப்பின்னர் மிரட்டுவதற்காகவே அவர்கள் அப்போது அந்த அனியாயங்களுக்கெதிராக எதுவும் செய்யாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதனை முடிவு வரை தொடரவிட்டார்கள். இப்போது ஐநாவின் ஊடாக சான்றாதாரங்களுடன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளெல்லாம் இலங்கையில் எமக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதற்கா? அதனைப் பொறுத்திருந்தான் பார்க்கவேண்டும். அதுவரை ஆர்ப்பரிக்காமல் இருப்பதே நல்லது.

## சர்வதேசமும்...... (3ம் பக்க தொடர்ச்சி)

ஆனால் வன்னியில் மக்களை பாதுகாப்பான பிரதேசத்துக்கு நகர்த்தக் கூடிய நிலை இருக்கவில்லை. காரணம்.. எல்லா பக்கமும் இராணுவ நடவடிக்கை. அந்த வகையில் அவர்கள் முள்ளிவாய்க்காலை நாடியது மக்களுக்கு ஒரு பாதுகாப்பான வெளியேற்றம் வேண்டியே ஆகும். ஆனால் சர்வதேசமோ.. மனித உரிமை அமைப்புக்களோ அப்போது அப்படியான ஒரு பாதுகாப்பான வெளியேற்றத்தை செய்ய முன் வரவில்லை.

இப்போ லிபியாவில் மிஸ்ரா என்ற போராளிகளின் பிரதேசத்தில் இருந்து பிரிட்டனும் அமெரிக்காவும் மக்களை கடல்வழியாக மீட்டு.. போராளிகளின் இன்னொரு கட்டுப்பாட்டு பகுதி நோக்கி நகர்த்தி உதவுகிறார்கள். ஏன் இதை சிறீலங்காவில் செய்ய முடியவில்லை..???! அப்போது எங்கே போனது இந்த மனிதாபிமானம். அந்த பகுதியில் லிபிய போராளிகள் மக்கள் வாழ்விடங்களில் இருந்து துப்பாக்கி சண்டை போடுகின்றனர். அப்போ பிரிட்டன்... அமெரிக்கா அந்தப் போராளிகள் மக்களை கேடயமாக பயன்படுத்துவதாக குற்றம் சாட்ட முடியுமா..??! ஆனால் கடாபியின் படைகள் அப்படிச் செய்வதாகச் சொல்கின்றனர்.

ஆக தங்களின் தேவைகளுக்கு ஏற்ப நிலைமைகளை அதிகாரம் படைத்தோர் விபரிக்கின்றனரே தவிர.. செய்ய வேண்டியவற்றை சரியான வேளையில் இவர்கள் செய்யாததாலேயே சிங்கள இராணுவம் இத்தனை பலியிடல்களையும் போர்க்குற்றங்களையும் துணிந்து செய்ய முடிந்துள்ளது. விடுதலைப்புலிகளின் மீதான போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில்.. சர்வதேச நீதியான விசாரணை நடத்த வேண்டும். சிறீலங்கா இராணுவ அச்சுறுத்தலுக்குள் இருந்து தமிழ் மக்களை விடுவித்துவிட்டு அந்த மக்களிடம் விசாரணை நடத்த வேண்டும். விசாரிக்கப்படும் மக்களின் பாதுகாப்பை சர்வதேசம் உறுதி செய்து கொடுக்கும் என்றால் உண்மையில் வன்னியில் என்ன நடந்தது என்பதை மக்களில் பலர் நியாயத்தின் பால் நின்று சொல்லக் கூடும். அது விடுதலைப்புலிகள் மீதான பல குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் என்பதே உண்மை.

COMPUTER REPAIRS
உங்கள் கொம்பியூட்டர்
- Slow வாக வேலை செய்கிறதா?
- அடிக்கடி இறுகிப் போய் நிற்கிறதா?
- வைரஸ் ஏதும் பூந்திட்டுதா?
- Error மெசேஜ் வருகிறதா?
- Internet க்கு போனா அறுபத்தி எட்டு windows திறக்கிறதா?

எல்லாம் சரி செய்யலாம்
அழையுங்கள் NO FIX - NO FEE
020 7043 4318

DATA RECOVERY
உங்கள் கொம்பியூட்டர்
- Hard disk இறுகிப் போய்விட்டதா?
- மிக முக்கியமான data மாட்டிக் கொண்டதா?
- பிள்ளைகளின் முக்கியமான படங்கள் அழிந்து போய் விட்டதா?

பிரச்சனைக்கு முடிவு கட்ட
அழையுங்கள் NO FIX - NO FEE
020 7043 4318

IT SUPPORT
FOR YOUR BUSINESS
- PC / Server Maintenance
- Wireless / Wired Networking
- OS / Software (re)Installation
- Regular Data Backup
- Anti-Virus / Firewall Setup
- Block unwanted website visits, safe valuable staff time
- Broadband Supply

CALL US ON
020 7043 4318
FREE CONSULTATION

# நான் தமிழன்

'தமிழர்களுக்கு இனி வெற்றியே இல்லை என்ற வெப்பியாரமே எனைச் சூழ்ந்து நிற்கிறது' என்ற வரியுடன் சென்ற முறை என் பத்தியை நிறைவு செய்திருந்தேன். ஓம் உண்மை என்னைச் சுட்டுப் பொசுக்கி சொல்லொண்ணா துக்கத்தில் சாம்பலாக்கி விடுகிறது.

அது உண்மை தானே ?எங்கிருந்து வெற்றி பெறுவது? எதில் வெற்றி பெறுவது? யார் வெல்வது? என் பிள்ளைகள் பிள்ளைகளின் பிள்ளைகள், 'தமிழர் வென்றனர்' என்ற வாக்கியத்தைத் தம் சீவியத்திலும் கேட்பார்களா? கேட்கும் சந்தர்ப்பம் இருக்கிறதா?

இராஜராஜ சோழன் எல்லா அரசர்களையும் வென்று சக்கரவர்த்தி ஆனான். இராஜேந்திரச் சோழன் கங்கை கொண்டு கடாரம் வென்று இமய உச்சியில் புலிக்கொடி பதித்தான். கனகவிசயன் என்ற சிங்கள அரசனின் தலையில் சேரன் செங்குட்டுவன் என்ற தமிழ் அரசன் கற்களை வைத்து நடாத்திக் கூட்டிக்கொண்டு போனான் என்ற கதைகளைக் கேட்டோம் அறிந்தோம். அப்பொழுதெல்லாம் தமிழர்களுடன் வெற்றி என்ற சொல் நெஞ்சில் பொறிக்கப்பட்டிருந்தது. வீரம் என்ற கவசம் நெஞ்சில் அணியப்பட்டிருந்தது.

பிறகு எம் தேசியத் தலைவர் வந்தார். முப்பது வருடங்களாக தமிழர்களின் வெற்றி பொறிக்கப்பட்டே வந்தது. வருடத்திற்கு இரண்டு மூன்று வெற்றிவிழாக்கள் என தமிழர் கொண்டாடினர். அதனால்த் தான் தமிழகத் தமிழர் மலேசியத் தமிழர் சிங்கப்பூர்த் தமிழர், ஏனைய உலகத் தமிழர் என்று அனேகரும் எமது தேசியத் தலைவரை தங்கள் தலைவர் எனவும் கொண்டாடினர். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக பிரபாகரன் விளங்கினார்.

இவ்வாறு த்மிழ் தமிழ் என்று உரைப்போரை 'குறுந்தேசியவாதிகள்' என்று குறை கூறுவோரும் உண்டு. அவர்கள் கற்ற வரட்டு அரசியல் அவ்வாறே வார்த்தையாடத் தூண்டும். அவர்களுக்குப் பதில் இடுவது என் நோக்கம் இல்லை. எனக்கு நானே பதிலளிப்பது மாத்திரம் அல்ல பகிர்ந்து கொள்வதும் என் நோக்கம்.

தமிழ் தமிழ் என்று என்னைச் சிந்திக்க வைத்தவன் சிங்களவனே அது வரை நானும் 'ஆண்ட தமிழினம் மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன தவறு' என்ற கேள்வியை 'யாரை ஆள?' என்ற பதில் கேள்வியின் மூலம் நக்கலடித்துக் கொண்டு தான் இருந்தேன்.

தமிழீழம் என்பதும் தற்காலிகத் தீர்வே! அதுவே முழு இலங்கைக்குமான புரட்சியின் முதற்படிஎன்ற வரட்டுத்தனமான வாதங்களையும் வைக்திருந்திருக்றேன். இன்னும் சொல்லப்போனால் நிறைய. எனது அத்தனை பேய்த்தனமான வாதங்களையும் உடைதெறிந்ததும் சிங்களவனே. தமிழ்த் தேசியம் என்பது வெறும் சொல்லளவில் சொன்ன என்னை தமிழத் தேசியமென்ற உணர்வு நிலைக்கு இட்டுச் சென்றவனும் அவனே! அச்சிங்கள மக்களுக்கும், என்னை ஞானம் பெறவைத்த கொழும்பு நகருக்கும் மிக்க நன்றிகள்.

1992இல் இருந்து 1996 வரையான நான்கு ஆண்டுகள் கொழும்பில் வசித்தேன். என்தொழில் ஆசிரியர். உப தொழில்களாக சரிநிகர் பத்திரிகை இலங்கை வானொலி, பிரத்தியேகக் கல்வி நிறுவனம், வகுப்புக்கள் என இருந்தேன்.

இவற்றினிடையே உயிர்ப்பாக நாடக அரங்கு செயற்பாடுகளில் ஈடுபட்டேன். சிங்கள நாடக அரங்குக் கலைஞர்களுடன் பரீட்சியமும் பழக்கமும் நட்பும் ஏற்பட்டது.95ம் ஆண்டு சித்திரை மாத பாடசாலை விடுமுறை தினங்களில் மாணவ மாணவியர்க்கு பாடசாலையில் நாடக அரங்கப் பயிற்சி வகுப்புக்களை எடுத்தேன் அச் சமயம் ஆசிரியர் மாணவர் என்ற பேதம் ஏதுமில்லை. அதனால் வட்டமாகவே வகுப்புக்கள் நடந்தன அப்போது ஆசிரியர் மாணவர் அனைவரும் நண்பர்கள்.கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை தான் என் பாடசாலை. பாடசாலையிலிருந்து அரை மைல் நடந்து இரத்மலானைச் சந்திக்கு வந்து பேருந்து எடுக்கவேண்டும். எடுத்தோம்.

எனக்கு அருகில் கஜேந்திரா, நான் 'இளையராஜா' என்றேன் அவன் 'ரகுமான் என்றான்' எங்கள் வாதம் இப்படியிருக்கையில் இன்னமும் பேருந்து புறப்படவில்லை எமக்கு பின்னால் இரண்டு வரிசை ஆசனங்கள் தள்ளி செந்தூரனும் ரகுநாதனும் இருந்தனர்

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

சடாரென பின்னால் ஒரு சத்தம். நாங்கள் அந்தரப்பட்டுதிரும்பிப் பார்த்தோம் செந்தூரனின் கன்னத்தில் இரண்டு மூன்று அடிகள் வீழ்ந்திருக்கின்றன. செந்தூரனுக்கு முன் ஒரு சிங்களப்பெண்! வேண்டாம் எதற்கு மரியாதை? சிங்களத்தி! அவள் ஏதோ ஏசிக்கொண்டிருக்கிறாள் சிங்களவர் எல்லோரும் திரும்பிப்பார்க்கின்றனர். செந்தூரன் திகைத்து முழுசிக் கொண்டிருக்கிறான். சிங்களத்தியின் வாயில் 'பறத்தமிழா' என்ற சொல் அடிக்கடி வருகிறது. வேறு எதுவும் எனக்குப் புரியவில்லை. நாங்கள் 'கள்ளத்தோணி' 'பறத்தமிழா' என்ற சொற்களை அடிக்கடி கேட்டுக் கேட்டு வந்தோம். எங்களது கொம்யூனீசிய தோலில் அது குத்திக் கிழிக்கவில்லை. மெல்லிய பிராண்டல் கூட இல்லை

இப்பொழுது பறத்தமிழா என்ற சொல் என்னை என்னமோ செய்கிறது. சிங்களத்தி ஆசனத்தில் போய் அமர்ந்ததும் நான் செந்தூரனிடம் போய் என்னவெண்று கேட்டேன் அவன் சொன்னது இது தான் 'செந்தூரனும் ரகுநாதனும் கதைத்தபடியே பின்னால் திரும்பிப்பார்த்து சிரித்திருக்கிறார்கள். சிங்களத்தி தன்னைப் பாாத்துவிட்டு நக்கலடித்துச் சிரிக்கிறார்கள் என்று எண்ணி அடித்திருக்கிறாள். இது தான் கதை இதில் பொய் சொல்ல ஒன்றுமில்லை'

இவர்களுக்கு அடிக்கலாம் என்று அவளைத் தூண்டியது இவர்கள் பேசிய தமிழ். ஏன் அடித்தாய் என்று கேட்க யாரும் இல்லை என்ற துணிச்சல். ஏன் அடித்தாய் என்று யாரும் கேட்டால் ஏனைய சிங்களவர்கள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை. யாவற்றினும் மேலாக தமிழர் சிங்களவர்களுக்கு அடிமை எனும் மனோபாவம்.

நாங்கள் அதில் இருபதுபேராவது இருந்தபோதும் ஒன்றும் செய்யாது இருந்தது அதே காரணங்களால்.இந்த ஒரு கதையை வைத்தா தமிழத்தேசியம் பற்றிக் கதைப்பதா என்று யாரும் கேட்டால் அவர்களுக்குச் சொல்வேன். நான் இருந்த நான்கு வருடங்களில் ஆகக் குறைந்தது பத்துக் கதைகளையாவது இப்படிச் சொல்வேன்

இந்தக் கோபம் என்னை என்ன செய்யத்தூண்டியது என்றால் கடவுள் நம்பிக்கை இல்லாதபோதும் 'நான் தமிழன்' என்று அடையாளப்படுத்த விபூதியைப் பூசிக் கொண்டு கொழும்பு முழுக்க உலாவினேன். தராக்கி சிவராம் எனக்கு அடிக்கடி சொல்வான் 'மச்சான் நீ உன்னைத் தமிழன் இல்லை என்று சொல்லலாமெடாப்பா ஆனால் சிங்களவன் அடிக்கடி உனக்கு நீ தமிழன் என்று சொல்வான்'

அதன் பிறகு நான் பூநகரித் தவளைப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது சிங்கள இராணுவத்தினரின் சடலங்களை ஏற்றிக்கொண்டு சைரன் அடித்தபடி அம்பியூலன்ஸ் பறக்க அந்தச் சைரன் சத்தம் எனக்கு வெற்றிச் சங்கூதலாகக் கேட்டது.

இப்பொழுது 'நான் மனிதன்' என்பதிலும் பார்க்க 'நான் தமிழன்' என்பதே எனக்குரிய அடையாளமாகவும் உவப்பாகவும் இருக்கிறது.

# ஈழத்தமிழர்களுக்காக ஏப்-25 இல் ஆர்ப்பாட்டம் : வை.கோ - *செய்தி*

ஒரு இனப்படுகொலையை சர்வதேச அமைப்பான ஐநா தெளிவாக இனங்காட்டி சிறீலங்கா சிங்கள அரசை போர் குற்றவாளி விசாரணைக்கு உட்படுத்த கோரி உள்ள நிலையிலும்.. வை.கோ.. சீமான்.. நெடுமாறன் தவிர வேறு எவரும்.. இந்திய மத்திய அரசிடம்.. இந்தப்போர்க் குற்ற விசாரணைக்கு வலியுறுத்தவும்.. தமிழக மக்களுக்கு இவற்றை சொல்லவும் முனையவில்லை.

ஈழத்தமிழருக்காக 3 மணித்தியாலம் உண்ணா நோன்பிருந்து யுத்த நிறுத்தம் செய்த ஒருவரின் மூஞ்சிலும் ஐநா கரியை பூசியுள்ளது. பாவம் அவரின் முகம் ஏலவே பல கரிகளின் படைகளை கொண்டிருப்பதால் அவர் கரிநாய்நிதி என்று அழைக்கப் பெறுகிறார். இருந்தும் அந்த மனிதர் இன்னும் மௌனமே காக்கிறார். ஒருவேளை அவர் அனைத்துப் புலன்களையும் செயலிழக்கச் செய்துவிட்டு இருக்கிறாரோ என்னவோ..??! இவர் உலகத் தமிழினத் தலைவர்.

போர் என்றால் இழப்புக்கள் வரும் தான் என்ற பெரும் தத்துவத்தை சொன்ன செல்வி கொடநாட்டில் சசிகலாவோடு தீவிர பொழுதுபோக்கில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கும் இவற்றிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஆனால் அவர் 9 கோடி தமிழர்களை ஆளப் போகும் தலைவி..???! தீக்குளிக்கும் உறவுகளை வைச்சு அரசியல் செய்யும் திருமாவளவன்.. இது பற்றி ஏன் வை.கோ அவர்களுடன் சேர்ந்து இயங்கக் கூடாது. இங்கும் திமுக கூட்டணி ஆதரவு அரசியலா..??!

டாக்டர் ராமதாஸ் வாக்குப் பெட்டிகளை கட்டிக் கொண்டு கிடக்கிறார். எத்தனை தொகுதிகள் வரும். அடுத்த முறை என்ன பேரம் பேசலாம். அது உங்கள் உள்ளுார் அரசியல். ஐயா நீங்கள் உச்சரிக்கும் ஈழத்தமிழன்.. ஒரு வேதனையில் கிடந்து துடிக்கிறான் இப்பவாவது அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஐநா தீர்மானத்தை ஒட்டி ஈழத்தமிழர்களுக்கு என்று நீதி கேட்கவும் கூடாதா..??! தலைவருக்கு நேரம் அமையவில்லை போலும். மீனவர் சாவுக்கு சொந்தக் கட்சி ஆட்சியில் இருக்க ஆர்ப்பாட்டம் செய்யும் வினோதம் நடத்தும்.. தங்கபாலு ஐயா. நீவிர்.. நினைத்தது போல ஈழத்தமிழன் அழிந்து ஒழிந்துவிட்டான். அவர்களை ஒழித்ததற்கு நன்றி சொல்லி சிங்கள அரசுக்காக ஒரு நன்றி தெரிவிப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை அன்னை சோனியா தலைமையில் நடத்தினால் என்ன..???! நன்றிக்கடன் மறப்பது நன்றன்று. ராஜபக்ச இதனை உங்களிடம் மிகவும் எதிர்பார்க்கிறார் ஐயா.

இன்றைய நிலையில் ஐநா அறிக்கை சிறீலங்கா சிங்கள அரசு மீது மட்டும் போர் குற்ற விசாரணையை வலியுறுத்தவில்லை. அன்னை சோனியா வெறுக்கும் புலிகள் மீதும் செய்ய செய்துள்ளது. அதற்கு இந்தியாவை கொண்டு சட்டலைட் படம் எடுத்து செத்துப் போன புலிகளை பிடிச்சு வைச்சு.. விசாரணைக்கு.. உதவக்கோரலாமே.. ஐயா சுப்பிரமணிய சுவாமி. ஏய்யா சும்மா கிடக்கிறே..! உன் சட்ட அறிவை பயன்படுத்தி புலிகளை செத்துப் போன ஈழத்தமிழர்களை உயிர்ப்பிக்கலாமே. ராஜபக்சவை காப்பாற்றலாமே..??!

இடதுசாரி பெரியவர்களே.. சிவப்புத் துண்டை தோழில் போடும் தோழர்களே.. ஈழத்தமிழர் செங்குருதி தோய்ந்து கிடக்கும் நிலத்தில் சிவப்பு கொடி ரஷ்சியா செய்து கொடுத்து ஏவிய குண்டுகளின் கந்தக வாசமே அதிகம். கேளுங்கள்.. ஐயா உங்களின் லெனிடமும்.. மாக்ஸிடமும்.. சிவப்புக் கொடியை தேர்வு செய்ததே ஈழத்தமிழரின் குருதியால் பட்டை தீட்டவா என்று...! ஆம் என்றால்... எங்கள் தலைவிதி அது என்று செத்துப் போகிறோம்..!

செல்கள் விழுந்த போது கதறி அழுத திரையுலக.. மற்றும் பிரமுகர்களே.. இப்போது செத்துப் போன உங்கள் உறவுகளின் அஸ்தி கரைக்கும் நேரம். கொலையாளியை தண்டிக்க உலகத்தை நோக்கி முழக்கமிடமாட்டீர்களா..!

வை.கோவின் முயற்சி பாராட்டத்தக்கது. இருந்தாலும் இது விடயத்தில் அனைத்துக் கட்சிகளையும் திரையுலகம் மற்றும் பிரமுகர்களையும் கூட்டி ஆராய்ந்து ஒரு பலமிக்க உலகம் உற்றுநோக்கக் கூடிய ஒரு போராட்டத்தை நடத்துவதே மக்கள் ஆதரவை ஈழத்தமிழர் மீதான போர் குற்றவிசாரணையில் குவிப்பதே.. உள்ளூரிலும்.. உலக அரங்கிலும் அவை கவனத்தைப் பெறும். இப்போது உடனடிச் சாத்தியம் இல்லாவிட்டாலும் செய்வீர்கள் என்று நம்புகின்றோம். அண்ணன் சீமானும் இவை தொடர்பில் வை.கோவின் முயற்சிகளுக்கு உதவி நிற்பதும் கூட ஒத்துழைப்பதும்.. நாம் தமிழர்களாய் நிற்கிறோம்.. என்று உலகிற்கு இந்திய ஆளும் வர்க்கத்திற்கு காட்ட உதவும். அது ஐநா வரை செல்வாக்குச் செய்யலாம்.

*1 கோடி சிங்களவன் 9 கோடி தமிழனை அடிச்சு நொருக்கி அடிமைப்படுத்திறான் அச்சுறுத்திறான் என்றால்.. அதற்கு காரணம்.. சிங்களவனின் திறமையல்ல. தமிழனின் அறியாமை.. ஒற்றுமை இன்மையே ஆகும்..!*

*– நெடுக்கால போவான்*



உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுங்கள் !

**Australia இல் வசிக்கும்**
- 32 வயது (Doctor)
- 33 வயது (Doctor)
- 36 வயது (Civil Engineer)

மணமகன்கள்

**UK இல் வசிக்கும்**
- 31 வயது (B.Com)
- 34 வயது (M.Sc.)
- 35 வயது (Lawyer)

மணமகன்கள்

**Canada இல் வசிக்கும்**
- 29 வயது (Canada)
- 32 வயது (Toronto Bank - Working as a A/c)
- 36 வயது (IT Engineer)

மணமகன்கள்

Newzealand இல் வசிக்கும் 32 வயது (Accountant) மணமகன்கள் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு : 02086720673, 07904535905

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 29, 5'8", HSMP Visa in UK, MSc qualified, looking for an educated bride. Ref: 3344

2. வயது 30, 5'9", MBA finished, PSW Visaஇல் இருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3341

3. Age 37, 5'6", Graduate, Student Visa in UK, looking for a bride with UK Citizenship. Ref: 3339

4. Age 24, 5'4", Graduate, Student Visa in UK, seeking a suitable bride with UK Citizenship. Ref: 3338

5. வயது 35, 5'9", UK PR, Graduate, மணமகன் நன்கு படித்த துகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3337

6. வயது 28, 5'6", இலங்கையில் IT Companyஇல் வேலை செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3331

7. Age 33, 5'4", UK PR, looking for a Suitable bride. Ref: 3329

8. Age30, 5'5", British Citizen, BSc in Computer Science, looking for a well educated bride. Ref: 3291

9. Age 29, 5'8", British Citizen, Financial Sector, seeking well educated girl. Ref: 3301

10. வயது 38, 5'7", PR in UK, லண்டனில் கடையில் வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3289

11. Age 39, 5'5", British Citizen, Doctor, Divorced, looking for a well educated bride who live in UK. Ref: 808

12. வயது 36, 6' Franceஇல் வசிக்கும் மணமகனுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகளை தேடுகின்றனர். Ref: 3288

13. Age 35, 5'5", Student Visa in UK, Graduated, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 3292

14. Age 32, 6", UK PR, working in a shop, looking for a suitable bride. Ref: 3310

15. வயது 30, 5'9", MBA finished, Work Permit Visaஇல் வசிக்கும் மணமகனுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3325

16. Age 37, 5'8", Canadian Citizen, Self-employed, looking for a suitable bride. Ref: 1409

17. Age 45, 5'11", British Citizen, Divorced, working as Practicing GP, seeking matching bride. Ref: 3298

18. 32, 6', British Citizen, Doctor, looking for a well educated girl. Ref: 925

19. வயது 35, 5'5", இலண்டனில் Student Visa,ல் MBA படித்துக்கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3292

20. Age 29, 5'5", British Citizen, Software Engineer, looking for a educated bride. Ref: 3291

21. Age 29, 5'8", British Citizen, Bsc Graduate, looking for a well educated bride. Ref: 3301

22. Age 29, 5'9", Doctor, UK born, looking for a well educated bride. Ref: 3271

23. Age 29, 5'6", doing his Bachelor Degree, British Citizen, looking for a suitable bride. Ref: 3274

24. Age 28, 5'6", Self-Employed, British Citizen, seeking a matching bride. Ref: 3272

25. வயது 32, 5'6", இலங்கையில் Photographer ஆக பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3270

26. வயது 32, 5'3", MSc student, Student visa in UK, நன்கு படித்த தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3281

27. Age 47, 5'4", Doctor, No visa in UK, looking for a educated bride. Ref: 3267

28. Age 55, 5'2", A/L finished, UK PR, searching for a matching bride. Ref: 3269

29. Age 31, 5'7" A/L finished Living in US looking for a Suitable Bride Ref: 3258

30. Age 31, 5'6" IT Engineer working in a company in UK, German Citizen looking for a Suitable bride Ref : 3254

31. Age 37, 5'9", Engineer, British Citizen, seeking well educated bride in UK. Ref: 1084

32. Age43, 5'10", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 912

33. வயது 37, 5'7", A/L finished, UK PR, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 781

34. வயது 32, 5'3", IT Qualified, British Citizen, தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 1208

35. Age 27, 6", Self-Employed, British Citizen, looking for a suitable bride. Ref: 587

36. வயது 26, 5", இலண்டனில் Student Visa மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3259

37. வயது 35, 5'5", O/L finished, UK PR, தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3263.

38. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

39. Age 37, 6", UK PR, A/L finished, looking for a matching bride. Ref: 2916

40. Age 31, 5'10", Ph.D qualified, Canadian PR, seeking a suitable bride. Ref: 3228

41. 34 years, 5'2", Graduated, British Citizen, looking for a suitable bride. Ref: 2396

42. 33 வயது, 5'8", Engineer, இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை இலங்கையில் தேடுகின்றனர். Ref: 2371

43. 32 years, 5'7", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 1526

44. 25 years, 5'6", Student visa in UK, looking for a matching bride. Ref: 1703

45. 40 வயது, 5'7", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2578

46. 31 years, 5'7", A/L finished, UK PR, looking for a matching bride. Ref: 686

47. 26 years, 5'10", Finansial Sector, British Citizen, looking for a educated bride. Ref: 1825

48. 30 வயது 5'9", Self Employed, Norwayஇல் வசிக்கும் மணமகன் ஐரோப்பிய நாட்டு குடியுரிமை பெற்ற மணமகளைத் தேடுகின்றார். Ref: 2249

## மணமகன் தேவை

1. வயது 34, 5'5", IT qualified, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3342

2. வயது 30, 5'7", Engineer, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3340

3. Age 33, 5'2", Medical Sector, Living in Sri Lanka, looking for a matching groom. Ref: 3336

4. Age 29, 5'6", A/L finished, living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3335

5. Age 33, 5'4", Living in SriLanka, Graduate, looking for an educated groom. Ref: 3345

6. Age 28, 5'5", British Citizen, Accountant, looking for a well educated groom. Ref: 3316

7. Age 33, 5'2", British Citizen, Doctor, looking for a well educated groom. Ref: 3307

8. Age 27, 5'3", British Citizen, Doctor, seeking matching and well educated groom. Ref: 3308

9. வயது 29 5'3", Tourist Visa in UK, A/L படித்த பெண்ணுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3313

10. வயது 33, 5'6", இலங்கையில் Accountant ஆக வேலைசெய்யும் பெண்ணுக்குநன்கு படித்த இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனை தேடுகின்றனர். Ref: 826

11. Age 41, 5'6", British Citizen, Pharmacist, seeking educated groom. Ref: 3290

12. வயது 25, 5", இலங்கையில் வசிக்கும்A/L படித்த பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 1222

13. Age 29, 5'3", Tourist Visa in UK, worked in a bank in Jaffna, looking for a matching groom with UK PR or Citizenship. Ref: 3314

14. வயது 41, 5'6", British Citizen, Pharmasist, நன்கு படித்த தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 3290

15. வயது 26, 5'6", Psygologist, கொழும்பில் வசிக்கும் பெண்ணுக்கு இலண்டனில் நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3299

16. Age 32, 5'5", A/L finished, Student Visa in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3302

17. Age 25, 5'2", Bio Medical Engineer, Australian Citizen, looking for a educated groom. Ref: 3282

18. வயது 34, 5'5", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3268

19. வயது 33, 5'2", A/L finished, இந்தியாவில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3278

20. Age 24, 5'6", BA finished, looking for a suitable groom with UK citizenship. Ref: 3277

21. Age 29, 5'4", Doctor, Australian Citizen, looking for a well educated groom. Ref: 3232

22. Age 28, 5'4", BSc degree holder, British Citizen, serching for a matching groom. Ref: 1596

23. வயது 25, 5'4", Accountant Student, இலண்டனில் Student Visa,ல் இருக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3260

24. வயது 26, 5'4", இலங்கையில், BA final year படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3257

25. Age 32, 5'4", Doctor, Stident visa in UK, looking for a matching groom in UK. Ref: 3243

26. வயது 32, 5'2", ஆசிரியையாக இலங்கையில் வேலை செய்யும் பெண்ணுக்கு இலண்டனில் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3240

27. Age 31, 5'4", Architect, British Citizen, looking for a well educated groom. Ref: 3227

28. வயது 29, 5'2", Account Student, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 881

29. வயது 32, 5'4", Architect ஆக வேலை செய்யும் ஜேர்மனிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 589

30. 42 வயது, 5'2", ஆசிரியையாக இலங்கையில் பணிபுரியும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2622

31. 26 வயது, 5'3", நோர்வேயில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2749

32. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

33. 31 years, 5'4", Architect & self employed, German Citizen, living in UK, looking for a well educated groom. Ref: 589

34. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

35. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

36. 28 வயது, 5'2", இலங்கையில் ஆசிரியராக பணிபுரியும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 2392

37. 30 வயது, 5'6", A/L finished, கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை எதிர்பார்க்கின்றனர். Ref: 2496

38. 50 வயது, 5'6", Finished Hotel Management in Colombo, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 804

39. 49 வயது, 5'6", Finished Hotel Management, Canadian Citizen, பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 805

40. 41 years, 5'4", Doctor, Living in Sri Lanka, looking for a educated groom anywhere. Ref: 1514

41. 43 years, 5'1", A/L finished, Living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref 2119

42. Age 29, 5'5", working as a Financial Analyst, British Citizen, looking for a well educated groom. Ref: 2175.

43. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

44. Age 28,. 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

45. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, லண்டனில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

46. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

47. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

48. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylonஇல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகினறனர். Ref: 1871

49. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782

50. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

51. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

52. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

53. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

54. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

55. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable grrom. Ref: 1580

56. வயது 25, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

57. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# பனங்கள்ளு



கோடை பிறந்தால் தாயகத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகும். கொடியேறி கோயில்களில் வருடாந்த உற்சவம் தொடங்குவது ஒரு கொடியேற்றம். பனை என்கின்ற யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று வடக்கு கிழக்கிற்கு கொடையாக வாய்த்த மரம் கொடியேறுவது இன்னொரு கொடியேற்றம். பனை கொடியேறுகிறது என்று கள்ளுப்பிரியர்கள் மகிழ்வார்கள். கள்ளு என்றால் யாழ்ப்பாணம் என்ற அளவிற்கு கள்ளுக்கு யாழ்ப்பாணம் பெயர் பெற்றது. அதுவும் இளவாலை, கீரிமலை கிராமங்களுக்கு இடையே உள்ள கோயில் கிராமத்து கள்ளுக்கு தனி ருசி. சோம பானம் என்று ஆதிமுதல் முனிவர்கள் அரசர்கள் கூட கள்ளு அருந்தியதாக புராணங்கள் தெரிவிப்பதாக ஒரு கருத்து.

யாழ்ப்பாண சுன்னக்கற் பூமியில் வறண்ட செம்பாடு கலந்த மண் பனை என்ற நெடுத்த மரம் வளர்வதற்கான சூழ்நிலை சிறப்பாக வாய்த்துள்ளது. பனை தன்னுடைய ஒவ்வொரு பாகத்தையும் மக்கள் தேவைக்கு தருவதால் கற்பகத் தரு என்று பெயர் பெற்றது. நீண்ட வைரமரம் வீடு கட்ட, தீராந்தியாக, சிலாகையாக, வேலிக்கு வரிச்சாக, விறகாக, கள்ளுக்கொட்டில்களில் இருந்து குடிக்க வாங்காக, பனங்குத்திகள் Stool என்ற இருக்கையாக, இன்னும் ஆடு மாட்டுக்கு பலாமர இலையை குத்தி பொறுக்க, வேலியடைக்க குத்தூசியாக, கிணற்றில் இருந்து தண்ணீரை கோலி இறைக்கும் துலாவாக பயன்படும்.

மரத்தின் பயன் இது என்றால், பனை ஓலை வேலி அடைக்க, வீடு மேய, விறகு பற்ற வைக்க, ஆடு மாடுகளுக்கு குழையாக கிளித்து போட என பல பயன்பாடுகள். பனங்குருத்து என்ற குருத்தோலை விரித்து காய வைக்க ஓலைச் சாராகும். துலைவாசல் கொட்டிலில் தாழ்வாரத்தில் விரித்து காய வைக்க ஓலைச்சார் வரும். ஓலைச்சாரில் ஓலையில் புட்டு அவிக்கும் நீத்துப் பெட்டி, குஞ்சுப்பெட்டி, கடகம், கொடைப் பெட்டி என்ற பேஸ், அழகான பொம்மைகள், அலங்கார பதாதைகள் என்பன செய்யப்படும்.

பனை ஓலையை விட பனை ஓலையை தாங்கும் பனம் மட்டையில் நார், வேலி வரிச்சு, விறகு என்ற பயன்கள். அடியில் அமைந்த கங்குல் மட்டைகள் நல்ல விறகு. பனம் பழத்தில் பனாட்டு, பனங்கற்கண்டு, பனங்காய் பாகு, பனங்காய் பணியாரம் என்று பல உணாக்கள். கொட்டியை பாத்தியில் போட்டு பதி வைத்தால் பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல், ஒடியல் மா என பல பயன்பாடுகள். பனங்கொட்டையை நெடுக்காக கத்தியால் வெட்டினால் பனம் பூரான் என்ற சுவை பதார்த்தம். பனங்கொட்டை, பன்னாடை எல்லாமே விறகு. பன்னாடை கள்ளு வடிக்கவும் பயன்படும். பனங் கொட்டையில் வடிவமைக்கும் பொம்மைகளுக்கு வெளிநாட்டிலும் மதிப்பு அதிகம்.

போராட்ட பொழுதுகளில் இந்த நெடும் பனம் கூடல்கள்தான் பல குடும்பங்களின் உயிரை ஷெல் சன்னங்களில் இருந்து காத்தன. போராளிகள் காவலரண்கள், பொதுமக்கள் பங்கர் என்று நிலக்கீழ் அரண்கள் அமைக்கவும் இந்த நெடு மரங்கள் பயன் தந்தன.

கோடை தாகத்திற்கு கொழுத்தும் வெயிலில் உழைத்து களைத்தவர்களுக்கு பனங்கள்ளு ஒரு அரிய பானம். பனையின் பாளைகளில் பூக்கள் பூத்து, பூக்கள் காயாகி, காய் பழமாகி பயன் தருவதை அறிவோம். பனையின் பாலை தள்ளுகின்ற பருவம் பனைக்கொடியேற்றம். பாளையில் பூக்கள் பூக்கும் பருவத்தில் கள் இறக்குவோர் பாளையை பதப்படுத்தி ஆரம்பித்து விடுவார்கள். பனையில் ஏறி வட்டுக்குள் இருந்து பாளையை இதற்குள் உள்ள உருண்டை தட்டுப்பொல்லால் தட்டி சூராகச்சீவி ஒட்டி என்ற பாளையை கட்டி பாளையில் சீவிய கள்முனையால் சொட்டு சொட்டாக வடியும் கள்ளை அதற்குள் சேர செய்து கள் சேகரிப்பது தொழிலாளர் பணி. இந்த அரிய சுவை பானத்தை உயர பனையில் இருந்து இறக்கி தரும் தொழிலாளிகளை பள்ளர், நளவர் என்றும் கீழ்சாதி தீண்டத்தகாதவர் என்றும் தள்ளிவைத்த சாதி முறைமை எங்கள் இனத்தின் சாபக்கேடு.

இருக்க நிலம் இல்லாமல் வேளாள நைனா, நைனாத்திகளின் பனங்காணிக்குள் மூலைக்குள் கொட்டில் அமைத்து குடியிருந்த வாழ்க்கை இவர்களுடையது. மதியம், மாலை என்று இந்த தொழிலாளர்களின் வீடு கள்ளு கொட்டிலாக மாறும். கலகலப்பு அடையும். பனங்கொத்தி பனஞ்சாறில் இருந்து பனை ஓலையில் செய்த பிளாவில் கள்ளை வாங்கி நைநாமார்கள் நெடியை ஊதி விலத்தி கள்ளை உறிஞ்சி உறிஞ்சி குடிப்பார்கள். வெறி ஏற விவாதம் கலகலக்கும். சினிமா, அரசியல் எல்லாமே அலசப்படும். கடி ருசிக்கு பொரித்த முரல், புளுக்கொடியல் விற்கப்படும். இது கள்ளுக்கொட்டில் முறை சட்டபூர்வமாக நீக்கப்பட்டு தெங்கு, பனம் பொருள் உற்பத்திச்சங்கம் என்ற முறைமை உருவாக்கப்பட்டது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

1971ல் சிறீமாவோ அரசின் நிதி அமைச்சராக இருந்த என்.எம்.பெராரோவையே இந்த முறையை மாற்றிய பெருமை சாரும். லங்கா சமசமாய கட்சியின் தலைவராக இருந்த அவர் கள்ளு உற்பத்திசங்கங்களை உருவாக்கி இந்த சங்கத்தின் மூலம் பொது இடங்களில் கள்ளுத்தவறணைகளில் மட்டும் கள்ளு விற்கலாம் என்ற முறையை கொண்டு வந்தார். இது கள்ளிறக்கும் தொழிலாளிகளின் கருத்தை அந்தஸ்த்துக்கு உட்படுத்தியது.

பனையில் ஏற நெஞ்சு பனையில் உரஞ்சாமல் நெஞ்சு பட்டி கட்டி, இரு கால்களுக்கும் தளநார் கட்டி, இடுப்பில் வளையப்பட்டி கட்டி, இடுப்பில் முட்டி, சீவல் குடவை, குடுவைக்குள் பாளைக் கத்தி, தட்டுப்பொல்லு இடுப்பில் பின்புறம் கச்சையில் தொங்க எம்பி எம்பி பனையில் உயர ஏறி கள்ளிறக்கும் இந்த தொழிலாளர்கள் என்றும் பள்ளத்திலேயே தங்கள் வாழ்க்கையை அமைத்திருந்தார்கள்.

கள்ளுக்கொட்டில்கள் கள்ளுத்தவணைகள் ஆனபொழுது இவர்கள் வழ்க்கையும் உயர்ந்தது. கள்ளிலும் பல வகை குருத்துக்கள்ளு என்ற பூங்கள்ளு சுவையானது. பூம்பாளைகளில் வடிவது. காய்ப்பருவ கள்ளு சிறு கசப்பானது. பாளைகள் காய்ப்பருவத்தை அடைய வடிவது. புதுக்கள்ளு சேர்க்கும்போது முட்டிக்குள் அடியில் சிறிது முதல் நாள் கள்ளை விட்டு ஊற்றினால் புளிப்பு ஏறும். வெறியும் வரும். பனங்கள்ளுக்கு தனிப்பனை கள்ளு என்றால் மவுசு அதிகம். ஒரு பனையால் இறக்கப்படும் கள்ளு இது. பின்னைய காலத்தில் எல்லா கள்ளும் ஒன்றாக தவறணையில் ஊற்றப்படுவதால் தனிப்பனை கள்ளின் மவுசு அதிகமானது. கள்ள கள்ளு விற்பனைக்கும் இந்த தனப்பனை கள்ளின் ஆர்வம் வழிகோலியது.

பாறை பூமியில் பனங்கள்ளு பாங்காக வடிவதாலேயே கூவில்கள்ளு சிறப்படைந்தது. கீரிமலை கேணியை நீந்துவார், நீந்தாதார் கூவிலடி சேராதார் என்பதும் அந்தக்கால தெருகுறள்களில் ஒன்று. முட்டிக்கு சுண்ணாம்பை பூசி கள்ளை சேர்த்தால் வெறி ஏறாது. அது கருப்பனீர். சிறுவர்களும் விரும்பி குடிப்பது. சின்னமுத்து என்ற நோய்க்கு முழுகிய பின் கள்ளை மருந்தாக கொடுக்கும் ஒரு வழக்கமும் இருந்தது.

அப்பத்துக்கு மா புளிக்க வைக்க அந்த நாட்களில் பால் பேணியை தந்து அம்மா வைரவன், வன்னியனிடம் அல்லது சரவணையிடம் கள்ளு வாங்கி வா என்று அனுப்பும்போது அவர்கள் பனையால் இறங்கும்வரை காத்திருந்து அவர்கள் ஊற்றி தரும் கள்ளை பால் பேணிக்குள் வாங்கிவரும் போது மணந்து பார்ப்பதும், தொடு நாக்கில் வைத்து சுவை பார்ப்பதும் அந்த நாள் ஞாபகங்கள்.

அழகான அந்த பனைமரம், அந்த பனங்கள்ளு சுவை, எங்கள் தாயகம் இவைகளை நினைக்கும் போது அழகான அந்த பனைமரம் என்றும் நினைவில் வந்து கொண்டே இருக்கும்.

Spicy Village
Indian & Srilankan Cuisine
We cater all indian and sri lankan food
அப்பம், தோசை மற்றும் தாயக உணவு வகைகளை தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
• Mutton Roll or Veg Rolls ............ £ 0.50
• Fish Cutlet ............ £ 0.50
• Paties ............ £ 0.50
Take away ONLY
100 இடியப்பம், சொதி, மற்றும் சம்பல், £ 10 மட்டுமே
Takeaway Only
HOME DELIVERY AVAILABLE
உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். (பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)
86 Brighton Road, Purley CR8 4DA
TP: 020 8660 0956



30 ம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 03.03.1940
மறைவு 23.04.1981
திதி 07.05.2011
அமரர் திரு. அப்பையா பாலசிங்கம் (பரமசாமி)
(வாகன விற்பனையாளர்) மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
எங்களை இவ்வுலகில் கல்விச் செல்வம் பொருட்செல்வம் என்பவற்றில் சிறந்து விளங்க வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வத்தை அன்புடன் நினைவு கூர்கிறோம்.
உங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், மைத்துனர், மைத்துனி, உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.
தகவல் : மனைவி, பிள்ளைகள்



# தமிழ் சினிமா தமிழனின் சினிமாவா !!



'சினிமா ஆபாசமான வியாபாரிகளின் கைகளில் மாட்டிக் கொண்டு நன்மைகளைக் காட்டிலும் தீமைகளையே அதிகம் செய்கின்றன. புரட்சிகரமாகத் தோற்றமளிக்கக் கூடிய வக்கிரமான கதைக் கருக்களால் சினிமா பொது மக்களை அவமானப்படுத்துகிறது.' 1907களில் லெனின் ரஷ்ய, ஜெர்மானிய, பிரெஞ்சு சினிமாக்களைப் பற்றி குறிப்பிட்டது கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்குத் தமிழ் சினிமாவுக்குப் பொருத்தமாக இருப்பது எவ்வளவு வேதனையானது.

சினிமா என்பது ஒரு பண்பாட்டு வடிவம். சமூகம் என்பது சினிமாவை எந்த அளவுக்குப் பாதிக்கிறதோ அதே அளவுக்கு சினிமாவும் சமூகத்தைப் பாதிக்கிறது. தொடக்ககால திரைப்படங்களில் காங்கிரஸ் விடுதலை இயக்க சிந்தனைகள் மக்களிடையே செல்வாக்குப் பெற தமிழ் சினிமா ஆற்றிய பங்களிப்பை மறந்துவிடக்கூடாது.

சின்னத்திரையில் நேர்காணல்கள் நிகழ்த்தும் நடிக, நடிகைகளையும் இயக்குனர்களையும் எடுத்துக் கொண்டாலோ இன்னும் வேதனை. மும்பையிலிருந்து இறக்குமதியாகி, தமிழ் சினிமாவில் பணமும் புகழும் சம்பாதிக்கும் நடிகைகள் பேசும் ஆங்கிலப் பேச்சுக்களை, ஒன்றும் புரியாமல் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, இறுதியில் உளறிக்கொட்டி அவர்கள் இறுதியில் சொல்லும் 'வணக்கம்', 'நன்றி' எனும் தமிழ்ச் சொற்களுக்குக் காத்திருக்கும் அளவுக்கு தமிழனுக்குத் தன்மானம் குறைந்துவிட்டதா என்ன? தமிழ்நாட்டில் வந்து கோடிகோடியாக சம்பாதிக்கும் இவர்களுக்குக் குறைந்த பட்சம் தமிழில் உரையாடக்கூட முடியாமல் போய்விட்டதா?

ஏன் தமிழ்நாட்டில் கதைகளே கிடையாதா? இவர்கள் எடுத்துப் பேசுவதற்கு பிரச்சினைகளே இல்லையா? வயிற்றில் பசியுடனும் இதயத்தில் கறைகளுடனும் கோலிவுட் வாசலில் நிற்கும் இளைய சகதிகளிடம் கேட்டுப்பாருங்கள். அவர்கள் சொல்வார்கள் உங்களுக்கு உயிர்த்துடிப்புள்ள ஆயிரம் கதைகளை.

தமிழ் மண்ணையும், மக்களையும் வைத்து உன்னதமான கதைகளை எழுதிய ஜெயகாந்தனிலிருந்து அ.மாதவன் வரை, பிரபஞ்சனிலிருந்து நாஞ்சில்நாடன் வரை எத்தனை கதைசொல்லிகள் இங்கே இருக்கிறார்கள். வங்காள சினிமா மேதை சத்யஜித்ரேயின் வெற்றி அவர் தனது சினிமாவுக்காக எடுத்துக் கையாண்ட தாகூரிலிருந்து, சுனில் கங்கோபாத்யாயா வரையிலானவர்களின் கதைகளும் ஒரு காரணம் என்பதை தமிழ் சினிமாக்காரர்கள் புரிந்துகொள்ளவில்லை. 'சினிமா என்பது கேளிக்கைதான். அதன் பணி பண்பாட்டை நிலை நிறுத்துவது அல்ல' என்று சினிமா வியாபாரிகள் சொல்ல நேரலாம். ஆனால் உங்களது கேளிக்கை தமிழ் ரசிகளைத் தொடவேண்டுமென்றால் அது வெறும் தமிழ்மொழியில் பேசினால் மட்டும் போதாது. அது தமிழ்ப் பண்பாடு எனும் அந்தரங்க மொழியிலும் பேசவேண்டும்.

பல தமிழ் சினிமாக்கள் குறிப்பாக மணிரத்னம் போன்றவர்களால் தயாரிக்கப்படுபவை. ஒரே நேரத்தில் தமிழ் ரசிகனையும், இந்தி ரசிகனையும் திருப்திபடுத்தும் நோக்கில் எடுக்கப்படுகின்றன. இவை ஒரே கதை, ஒரே நடிகர்களைக் கொண்டு தமிழிலும், இந்தியிலும் தயாரிக்கப்படுகின்றன. இதன் பல வசனங்கள் இந்தியிலும், பல காட்சிகள் தமிழ் ரசகினுக்குப் புரியாமல் போய், தான் தமிழ்ப் படம் பார்க்கிறோமா அல்லது இந்திப் படத்தின் தமிழ் 'டப்பிங்' பார்க்கிறோமா என்கிற சந்தேகத்தை உணடாக்கும் வகையில் அமைந்து விடுகின்றன. 'சினிமாவை வெளிச்சத்தின் சுவை' என்று குறிப்பிடுவார். ரஷ்ய சினிமாவின் அரிச்சுவடியை உருவாக்கிய எலவ்குலஷேவ் வெளிச்சம் எனும் தூரிகையின் உதவி கொர்ண்டுதான் சினிமா எனும் ஓவியம் தீட்டப்படுகிறது. ஆனால் வெளிச்சம் அப்பாவியானது என்று சொல்ல முடியாது. அது தன்னால் கட்டி எழுப்பப்படும் பிம்பங்களின் மீது ஒரு மண்ணின் சீதோஷ்ண நிலையை, சமூக மதிப்பீடுகளை எல்லாம் கட்டி எழுப்பிவிடுகிறது.

சினிமா என்பது ஒரு கனவுத் தொழிற்சாலை, அது ஒரு மந்திரஜாலம். அதனால்தான் முழுக்க முழுக்க தமிழ் அடையாளங்களைப் படைத்துக் காட்ட வேண்டும் என்று முனைந்து நின்ற பாரதிராஜா போன்றவர்களின் கிராமங்கள், உண்மையில் ராஜமுந்திரியிலும், மைசூரிலும் படமாக்கப்பட்டபோதும் அவை ஏதோ தமிழ் நாட்டின் ஒரு பகுதிபோல ஜோடித்துக் காட்டப்படும்.

இன்று கோலிவுட்டின் தமிழ் சினிமா ஒரு சிக்கலான காலகட்டத்தைக் கடக்கிறது. உலகமயமாதலின் கேள்விகளையும், மாநிலத்தின் பண்பாட்டுக் கொள்கைகளையும், மோஸ்தர், விளம்பரம், மேற்கத்திய இசை, நடனம் மற்றும் இன்றைய நுகர்பொருள் கலாசாரம் என்று அனைத்தின் நெருக்கடிகளையும் இன்றைய சினிமா தனக்குள் உறிஞ்சிக்கொள்கிறது.

சமூக யதார்த்த சினிமா இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டு, விளம்பரப் படங்களில் காணப்படும் ஒரு போலியான பளபளப்புடன் இன்றைய சினிமா நம்முன் படைக்கப்படுகிறது. மத்தியதர வர்க்கம் ஒரு புதிய வடிவம் எடுத்திருக்கிறது. ஒரு புதிய மத்திய தர வர்க்கம் எழுந்து வந்து நுகர்வுக் கலாசாரத்தை உயர்த்திப் பிடிக்கிறது. பழைய மத்தியதர வர்க்கம் எப்போதும் பாதுகாப்பையும், எதிர்கால சேமிப்பையும் முன் வைத்து, குடும்பத்தில் பாசம், அன்பு, கூட்டுக் குடும்பம் ஆகியவற்றை உயர்த்திப் பிடித்த போது பழைய பீம்சிங் படங்களும், பிறகு பாலசந்தர், விசு படங்களுமாக வெற்றி கண்டன.

இன்றைய புதிய, மத்திய தர வர்க்கம் விளம்பரங்கள் கண்முன் உற்பத்தி செய்து காட்டும் நுகர்பொருள் கலாசாரத்தின் இலட்சிய வடிவங்களோடு உறவுகொண்டு நிற்கிறது. இதனால்தான் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களோடு இயங்கும் மகேந்திரன், பாரதிராஜா, ஆர்.வி. உதயகுமார், சேரன், தங்கர்பச்சான், பாலா போன்றவர்களைக் காட்டிலும் பண்பாட்டு அடையாளம் கெட்ட சினிமாவை படைக்கும் மணிரத்னம், ஷங்கர், எஸ்.ஜெ.சூர்யா போன்றவர்களை நோக்கி அலைபாய்கிறது.

'எது நல்ல சினிமா' என்பது குறித்த கோட்பாடும், செயல் திட்டமும் இன்று மாறிப்போயுள்ளன. இந்த காலகட்டத்தில்தான் உலகமயமாதலுக்கு எதிராகத் தமிழன் தன் அடையாளத்தைத் தனது சினிமாவின் மூலமாக நிறுவிக் கொள்ளவேண்டிய கட்டாயம் நேர்கிறது. தமிழ் சினிமா இந்த சவாலை ஏற்குமா?

- நட்பு

# திரை விமர்சனம்

## Rio



அனிமேஷன் ஜாம்பவான் பிக்ஸ்சர்க்கு போட்டியாக இருக்கும் அனிமேஷன் ஸ்டுடியோகளில் ஒன்று 20th Century Fox இன் Blue Sky ஸ்டுடியோ. Ice Age மூன்று பாகங்களையும் உருவாக்கியவர்கள். Ice Age படத்தின் மூன்றாம் பாகம் சமீபத்தில் வந்து வசூலை அள்ளியது. Robots, Hoton Hears a Who என்ற இரு அனிமேஷன் படங்களை தந்துள்ளார்கள். ஆனால் Ice Age படங்களே இவர்களுக்கு நல்ல பெயரை தந்தது. Rio இவர்களின் ஆறாவது படம். Ice Age படங்களுக்கு அடுத்து மற்றொரு வெற்றி படத்தை தந்துள்ளார்கள்.

நீல நிற கிளிவகையை சார்ந்த படத்தின் கதாநாயகனர்ன Blu பறக்க தெரியாத சிறுவயதில் பிரேசிலில் உள்ள Rio நகருக்கு அருகில் உள்ள காட்டில் இருந்து பறவை கடத்துபவர்களால் பிடிக்கப்பட்டு அமெரிக்காவிற்கு கொண்டு செல்ல படுகிறது. அங்கே தவறுதலாக வண்டியில் இருந்து கீழே விழுந்து Linda என்னும் குட்டிப்பெண் எடுத்து வளர்கிறாள். வருடங்கள் பல ஆகிறது. Lindaவுடன் சேர்ந்து Blu கிளியும் பறக்க தெரியாமலே வளர்கிறது. இருவரும் இணை பிரியா நண்பர்களாக உள்ளனர்.

Tulio என்ற பறவைகள் ஆராய்ச்சி செய்பவன் Lindaவை காண வருகிறான். Blu கிளி வகைகள் அழிந்து விட்டதாகவும் , உலகிலேயே மீதி இரண்டு தான் உள்ளன எனவும், ஒன்று ஆண் கிளியான Blu, மற்றொன்று பெண் கிளியான Jewel தன்னிடம் பிரேசிலில் உள்ள Rioவில் உள்ளதாக கூறுகிறான். இவை இரண்டையும் சேர விட்டு இதன் வகைகள் அழியாமல் காக்க முடியும் என கூறுகிறான். அதற்கு தன்னுடன் Bluவும், Lindaவையும் Rio விற்கு அழைக்கிறான்.

Lindaவும் சம்மதித்து Blu டன் Rioவிற்கு செல்கிறாள். அங்கே Bluவும், Jewel பெண்கிளியும் பறவைகளை கடத்தி விற்கும் கும்பலால் கடத்தப்பட்டு விட அவைகளை தேட ஆரம்பிக்கின்றனர் Lindaவும், Tulioவும். பறவைகளை கடத்தி விற்கும் கும்பலில் இருந்து காலில் கட்டப்பட்ட சங்கலியோடு தப்பிக்கும் Bluவும், Jewelம், Bluவுக்கு பறக்க தெரியாததால், பறக்க முடியாமல் வேறு சில பறவைகளின் உதவி கொண்டு காலில் கட்டப்பட்ட சங்கலியை அவிழ்க்க படாதபாடு படுகின்றன.

Bluவும், Jewelம் சங்கலியை எப்படி அறுத்தன , பின் இரு கிளிகளும் எப்படி காதலில் விழுகின்றன , இவை இரண்டையும் தேடி கொண்டிருக்கும் கும்பலில் இருந்து எப்படி தப்பித்தன, Blu எப்படி பறக்க ஆரம்பிக்கிறது என்பது மீதி படத்தில் சுவராசியமாக நகைசுவையோடு செல்கிறது.

படம் முழுக்க ப்ரேசிலின் Rio நகர அழகையும் கார்னிவல் பிரம்மாண்டத்தையும், மிகச்சிறப்பாகக் கையாண்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு சேஸிங் காட்சிகள் பிரமாதம், குறிப்பாக Rioவின் Lindaவையும், Tulioவையும் மோட்டார் வண்டியில் கூட்டிச் செல்லும் சிறுவனின் காட்சி மிகப்பிரமாதம். இவர்களின் நண்பர்களாக வரும் செந்தலைப் பறவையும், மஞ்சள் குருவிக்குஞ்சும் திரைக்கு வெளியேயும் பறக்கின்றன.

Bluவும், Jewelம் முதன் முதலில் சந்திக்கும் காட்சிகளும், திருட்டு குரங்கு கூட்டமும், Blu மற்றும் Jewelவுடன் கடைசிவரை வரும் மூன்று பறவைகளும் ரசிக்கவைக்கின்றன. பறவைகளை கடத்தி விற்கும் கும்பலில் இருக்கும் வில்லன் பறவையும் மறக்க முடியாத ஒன்று. அனிமேஷன் ரசிகர்கள் தவற விட கூடாத படம். படத்தின் முதலில் வரும் பறவைகள் அனைத்தும் சேர்ந்து போடும் ஆடலும் பாடலுமே போதும் கொடுத்த டிக்கெட் காசுக்கு. இந்த கோடையில் சிறுவர்களுக்கு அருமையான படம்.

- அகிலன்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ
creative artwork from concept to design

## "மாப்பிள்ளை" - திரைவிமர்சனம்



*நடிகர்கள்: தனுஷ், ஹன்சிகா, விவேக்*

*இசை: மணி சர்மா*

*இயக்கம் : சுராஜ்*

விருது, கலைப் படைப்பு என்பதையெல்லாம் தாண்டி ரஜினியின் படங்களுக்கென்று ஒரு உத்தரவாதம் உண்டு. அது அதிகபட்ச பொழுதுபோக்கு. அவர் என்ன செய்தாலும் அதை அவரது ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளவார்கள். எந்த வசனம் பேசினாலும் ரசிபபார்கள். இதையே வேறு நடிகர்கள் காப்பியடிக்கும் போது, மகா கடுப்பாகி விடுவார்கள்.

ரஜினியின் மாப்பிள்ளை படத்தின் ரீமேக் என்று கூறிக் கொண்டு வந்திருக்கும் தனுஷின் மாப்பிள்ளை அப்படி ஒரு கடுப்பேத்தும் படம் தான். கதை பற்றி சொல்லத் தேவையில்லை பழைய ரஜினி நடித்த மாப்பிள்ளையின் கதைதான் இன்றைய கால கட்டத்திற்கு ஏற்றார் போல் கொஞ்சம் மாற்றி படம் பார்க்க வந்தவர்களை சிரிக்க வைத்து, அழவைத்து, நோக வைத்து, ...வைத்து அனுப்பியிருக்கிறார் சுராஜ்.

சென்னையில் அக்கா வீட்டில் ஒரு நல்ல பக்திமானாக இருக்கும் தனுஷ் (சரவணன்), அந்த பகுதியில் நமீதா ரசிகர் மன்ற தலைவராக இருக்கும் விவேக்(சின்னா)கிற்கு காதலில் உதவ நாயகி ஹன்சிகாவை சந்திக்க, ஹன்சிகா தனுஷின் நல்ல குணத்தைப் பார்த்து காதலில் விழ இவர் வெறுக்க அவர் காதலிக்க இறுதியாய் நாயகியின் அம்மாவான கோடீஸ்வரி ராஜேஸ்வரியம்மாவிடம் (மனீஷா கொய்ராலா) பெண் கேட்க செல்கிறார் தனுஷ். மாப்பிள்ளை நல்ல குணமுடையவர் என தெரிந்து திருமணத்திற்கு சம்மதிக்கிறார். திருமண ஏற்பாடுகள் நடைபெறும் வேளையில் மாப்பிள்ளை தனுஷ் கும்பக்கோணத்தில் மிக பெரிய முரட்டிபயல் என தெரியவர மாப்பிள்ளையை மாற்றி திருமண ஏற்பாடு நடக்கிறது. அதை முறியடித்து தனுஷ் திருமணம் செய்துக் கொள்கிறார் பின் வீட்டோட மாப்பிள்ளையாக வலம் வருகிறார்.

இருவருக்கும் முதல் இரவு நடக்க விடாமல் தடை செய்யும் மனீஷா அவர்களை பிரிக்க திட்டமிடுகிறார். இதற்கிடையில் தனுஸை சொந்த கிராமத்திற்கு அழைக்க வரும் அப்பா அம்மாவை அவமானம் படுத்திவிட, மேலும் தனுஷின் தங்கை மனீஷாவின் மகனை காதலிக்க அந்த திருமணத்தையும் நடத்த திட்டம் தீட்டி அனைவரையும் கிராத்திற்கு வரவழைக்கும் தனுஷ் பின்பு வில்லன்களின் சூழ்ச்சியில் சிக்கி அவமானம் படுகிறார் தனுஷ்.

இறுதியில் தன் தங்கைக்கு திருமணத்தை நடத்தினாரா? ராஜேஸ்வரி தனுசை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டாரா என் இறுதிகாட்சிகளில் நகைச்சுவையுடன் சொல்லிருக்கும் படமே மாப்பிள்ளை.

இனி விஷயத்துக்கு போவோம்....

தனுஷ் ஆரம்பத்தில் பக்திமான் போன்று மிக அமைதியான கேரக்டரில் வந்து விவேக்குடன் கலந்து எல்லாரையும் சிரிக்க வைக்கிறார். அதன் பின்பு கும்பகோணத்தில் கலக்கல் இளைஞனாக வந்து ஊர் முழுக்க கலாட்டா தகராறு செய்யும் போது தனுஷ் அமர்களப்படுத்துகிறாராம். தனுஷ்க்கு ஒரு பீடியை கூடப் பிடிக்கத் தெரியவில்லை, அப்படியே கும்பகோணம் புது பஸ் ஸ்டாண்டில் ஒரு குத்தாட்டம் , கூடையுடன் ஒரு குத்தாட்ட நடிகை எசகு பிசகாக உடை அணிந்து கொண்டு வருகிறார் மற்றும் ஆடுகிறார்.

ஏதோ மெழுகுப் பொம்மை மாதிரி ஒரு ஹிரோயின் (ஹன்ஸிகா). கீ கொடுத்த மாதிரி வந்து போகிறார். வசனம் பேசவோ. அதற்கேற்ற மாதிரி உடலில் அசைவுகள் காட்டவோ தெரியாத ஒரு பணக்கார கத்துக்குட்டி மாதிரி இருக்கிறார்.

கோடீஸ்வரி ராஜேஸ்வரியாக வரும் மனீஷா கொய்ராலா ஆரம்பத்தில் வில்லத்தனம் காட்டி தன் பெண்ணுக்கு அன்பு அம்மாவாக நடித்திருக்கிறார். மாப்பிள்ளை தனுசுடன் போட்டி போடும் போதும் தன்னுடைய பணக்காரத்திமிரை காட்டும் போதும் ஏதோ ஓரளவுக்கு ஸ்கோர் பண்ணியிருக்கிறார். ஆனால் இவரின் நடிப்பு அந்த பாத்திரத்திற்கு பொருத்தமாக இல்லை.

படம் துவக்கம் காமெடி எக்ஸ்பிரசாக புறப்படுகிறது. நமீதா ரசிகர் மன்றம் நடத்தும் விவேக், சத்யன், பாலாஜி கூட்டணி காமெடியில் பிச்சியெடுக்கிறார்கள். நாயகியை காதலிக்க தனுஷிடம் ஐடியா கேட்டு பின்பு அதில் மாட்டிக் கொண்டு அவர்கள் படும் அவஸ்தை மற்றும் இந்த நால்வரின் வசனங்கள் ஹேர் ஸ்டைல் ஒரு கலக்கு கலக்குகிறது. அதன்பிறகு தனுசுக்கு உதவ பணக்காரர் வேஷம் கட்டும் போதும் விவேக்கின் காமெடி படத்திற்கு பக்க பலமாக இருக்கிறது. விவேக் இந்த படத்தில் வடிவேலை போல் நன்றாக அடிவாங்குகிறார், வடிவேல் பிரச்சாரத்திற்கு சென்று விட்ட காரணத்தினால் அவர் வேலையை இவர் செய்கிறார் போலும். விகாரமான மேக்-அப், விசித்திரமான வசன உச்சரிப்பு, மொக்கையான காட்சிகள் என்று முன் பகுதியில் அவர் வரும் காட்சிகள் கண்றாவி. சின்னக் கலைவாணர் கொஞ்சம் சிந்தித்தால் நன்றாக இருக்கும்.

வில்லன் ஆஷீஸ் வித்யார்த் அதிக வேலையில்லை தனுசின் அப்பாவாக பட்டிமன்ற ராஜா இவர் சினிமா அப்பாவாக வந்துப் போகிறார். சிட்டிபாபு, மதன்பாப், மனோபாலா மனீஷா கொய்ராலாவை உடன் வந்து தன் பங்கிக்கு காமெடி செய்திருக்கிறார்கள்.

மணி சர்மாவின் இசையில் பாடல்கள் மனதில் நிற்கவில்லை. என்னோட ராசி நல்ல ராசி பாடல் ரீமிக்ஸ் ரசிக்கும்படி இல்லை.

இறுதிக்கட்ட காட்சிகள் பரபரப்பாக ஆரம்பித்து நகைச்சுவையுடன் முடிகிறது. படம் முழுக்க வசனங்கள் பஞ்ச் வசனம் போன்றே வருகிறது. அசட்டு தனமான பஞ்ச் வசனங்கள் நிறைய . விவேக்கின் டயலாக் மிக மிக சூப்பர். கோடை வெயிலுக்கு இதமான ஒரு நகைச்சுவை கதையை எடுத்துக்கொண்டு தன் பாணியில் சொல்லி இருக்கிறார். சுராஜ். திரைக்கதையில் வலு இல்லாததால் மாப்பிள்ளை முறுக்கு பலிக்கவில்லை.

*- சிட்டி பாபு*

## சினித்துளி

### தெய்வக்குற்றம் !



இத்தனை பிரமாண்ட காட்சியமைப்புகளை திரையில் கொண்டுவர முடியுமா என்று எல்லோரும் மூக்கில் விரல் வைத்து கொண்டிருக்க படத்தின் முடிவு பற்றி பரபரப்பு கிளப்புகிறார்கள் சிலர். வாய்மொழி வரலாற்றுக் கதைப்படி பொன்னர் சங்கர் இருவருமே வீரமரணத்தை எய்தி விடுவார்களாம். இதனால் ' பொன்னர் சங்கர் உயிரோட இருக்கிறமாதிரி காட்டி வரலாறை மாத்திட்டீங்களே இது தெய்வகுத்தம் ' என்று பிரச்சனையைக் கிளப்புகிறார்கள் ஏன்று தகவல் கிடைக்கிறது.

கதையை மாற்றிவிட்டாரே என்று கதை எழுதிய கருநாநிதி மீது கதையோடு தொடர்புடைய மக்கள் கடுப்பிலிருக்கிறார்களாம். கருநாநிதி எதைத் தொட்டாலும் பிரச்சஜனைதான்....

### படமாகும் கள்ளிக்காட்டு இதிகாசம்!



கவிப்பேரரசு வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம் விகடனில் வெளியான போதே வாசகர்களின் மதிப்பைப் பெற்ற ஒரு கதை. அக்கதையை தற்போது தென்மேற்கு பருவக்காற்று பட்த்தை இயக்கி பாராட்டுகளை அள்ளிய சீனு.ராமசாமியை வைத்து படமாக்க வைரமுத்து அனுமதி அளித்திருப்பதாக தெரியவருகிறது. பதினைந்து கோடி ரூபாய் பட்ஜெட், எல்லா பருவகர்லங்களிலும் படப்பிடிப்பு என்று தயாராகிவிட்டாராம் சீனு. நாயகன் நாயகிகள் புதுமுகங்களாம். !

### ராணா படப்பிடிப்பு ஆரம்பம்!!



இதோ ஆரம்பித்து விட்டது... அதோ ஆரம்பித்து விட்டது என்று கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்த 'ராணா' படத்தின் படப்பிடிப்புக்கள் விரைவில் தொடங்கவிருக்கிறதாம். எந்திரன் படத்தின் வெற்றிக்குப் பிறகு ரஜினிகாந்த் மூன்று வேடங்களில் நடிக்கும் இப்படத்தில் பாலிவுட் நடிகை தீபிகா படுகோன் நடிக்கிறார். அவரைவிட இன்னும் ஏழு நடிகைகள் நடிக்கவிருக்கின்றனராம். அவர்களின் தேர்வில் இன்னும் இழுபறியாகவே இருக்கிறார் இயக்குனர்.

கே.எஸ். ரவிக்குமாரின் இயக்கத்தில் உருவாகும் இத்திரைப்படத்திற்கு பாடல்வரிகளை அவரே எழுதுகிறாராம். இசை அனேகமாக ஏ.ஆர் ரகுமான் என்று உறுதிபடக்கூறுகின்றனர். திரையுலகினர்.

### ரோபோவை மிஞ்சும் 7ஆம் அறிவு!!



அண்மையில் ஷங்கரின் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து வெளிவந்து, வசூலில் பல சாதனைகள் படைத்த படம் எந்திரன். இப்படத்தில் தொழில் நுட்பக் காட்சிகளால் ரசிகர்களை மிரள வைத்திருந்தார்கள். தற்போது எந்திரனையே மிஞ்சும் அளவிற்கு 7ஆம் அறிவு படத்தில் தொழில் நுட்பக் காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளதாம். அறிவியல் கலந்த திரில்லர் படமாக உருவாகி வரும் இப்படத்திற்கு தொழில் நுட்பக் காட்சிகள் மிகவும் முக்கியமானவையாம்.

இந்த காட்சிகள் அனைத்தும் எந்திரன் படத்தை விட பிரமாண்டமாகவும், புதுமையாகவும் இருக்கும் என்று இயக்குனர் தரப்பு தெரிவித்துள்ளது.மெகா பட்ஜெட் படம் என்றால் இப்படித்தான் மிரட்டுவீங்களா..?



# UNIVERSAL ESTATES

வாடிக்கையாளர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட வாடகை கிடைக்கும்.

www.universal-estates.co.uk

LANDLORDS

## WE OFFER GUARANTEED RENTS

HASSLE FREE RENTAL SERVICE
0% commission

Whether your property is empty or occupied

**WE CAN LET YOUR PROPERTY IN 24 HOURS**

we can help to avoid repossessions

**We specialise in professional and company Lets**

We urgently require 1, 2, 3, and 4 bedroom properties in Norbury, Thornton Heath, Croydon, South Norwood, Crystal Palace, Streatham, Brixton, Tooting, Balham, Clapham, Mitcham, Dulwich, Lewisham and surrounding areas

For a free valuation **Call 020 8764 6444**



# KuttiBaba

Traditional clothing for little people



Big hit in Children's fashion...

Order online at www.Kuttibaba.com

**Special offer !!!**

complete set

**£15.99 including postage**



Clothing from 3 months to 5 years. Designed with comfort, colour and cuteness in mind!

Stock also available from;

**VENISONS Exclusive Sarees & Jewellery**
134-136 Ealing Road, Wembley, Middlesex HA0 4TH

**Rasam Gayatri Silks**
312 High street north, Eastham, E12 6SA

**Aiyappas UK Ltd**
105 - 107 Belgrave Road, 1st Floor
(above bank of India), Leicester, LE4 6AS

Check out the kutti vershdi that looks like a traditional vershdi but fits like a pyjama.

Order online or call/ email for a brochure

**0845 3892155**

info@kuttibaba.com



# TRICO

COMMERCIAL FREIGHT TO SRI LANKA

JCB/ TRACTOR UNITS/ EXCAVATORS
OFFERS ON
HIGH CUBE CONTAINERS
OPEN TOP CONTAINERS
FLAT RACKS OR BY RO RO

## GREAT NEWS FOR CAR SHIPPERS

A) We can help with 'Letters of Credit'. Professional advice on how to open a letter of credit and ensure that your documents pack reaches the bank in time. All you need to do is sign, send to the bank and wait for your money.

B) We can facilitate 'Veritas inspection' at our yard. All you need to do is deliver your car(s) with their V5's and we do the rest.

C) We provide 24 security while parked at our premises.

D) You can deliver your vehicle seven days a week until 10pm and save yourselves a journey to Felixstowe or Southampton.

E) Cars will be loaded at our yard by professionally qualified staff.

F) Give us a call from Monday to Saturday and talk to our friendly and professionally qualified staff who are there to help you.

G) We offer Marine Insurance for your cars. Weekly sailings to Colombo with 18 days transit time, so your cars get to Colombo faster than with anyone else.

Book now to avoid disappointment.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

Weekly sailing to Sri Lanka with transit time of 18 days

Personal affects to Sri lanka



CALL US NOW OR EMAIL US WITH DIMENSIONS.

**020 8888 8787**

E-MAIL : info@tricofreight.co.uk



# Happy Easter



ESOL · PBS · SPOUSE VISA TEST · TIER 1&2 · 28,000 Students · FROM £200 · A 4 Life · PAY Once

• ESOL with Citizenship • Points Based Test • Spouse Visa Test • Multilingual Staff

• You pay only once & we train you until you pass • Successfully trained over 28,000 students

• Courses from £200 • Certificates within 20 days • Online numeracy & literacy courses

TrainingConnect

www.trainingconnect.co.uk

• UK • India • China • Dubai • Russia •





6வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு Boilers parts & control விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எல்லா விதமான Boiler உதிரிப்பாகங்களும் நியாயமான விலையில் இங்கே பெற்றுக் கொள்ளலாம்

## FREE CONSULTATION

- எல்லா விதமான Porcelain, Ceramic Tiles & Kitchen grantes Worktop நல்ல quality
- ஆகவும் நியாயமான விலையிலும் செய்து தரப்படும்.
- Underfloor Heating(Water & Electric )மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
- பல முன்னணி நிறுவனங்களுடன் நேரடி விநியோகஸ்தர்கள் உள்ளபடியால் நியாயமான விலையில் பெறுக் கொள்ளலாம்.
- Radiator விலை குறைக்கப்பட்டுள்ளது.

இலண்டனில் எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

162 Pinner Road, Harrow, Middlesex, HA1 4JJ

Tel: 020 8427 0553 Fax : 020 8427 0550

இலண்டனில் தமிழர்களுக்காக தமிழர்களினால் ஆரம்பிக்கப்பட்ட முதல் நிறுவனம்

# JSN

## Plumbing & Electricals ltd

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய Bathroom Showroom தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது

GROHE Armitage Shanks Ideal Roca saneux mira SHOWERS

Hudson Reed (Tab & Shower) (20 வருட உத்தரவாதம்)

saneux FRANKE kudox hansgrohe

- Vaillant
- Worcester
- Booster
- Ideal Standard
- Mega flow
- Radiator

போன்றவற்றைத் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Morden Bathroom முதல் சாதாரண Bathroom வரை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

Italy, Germany & Spain நாடுகளிலிருந்து மிக உயர்தரமான Bathroom furniture களை பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்

## In Business over 6 years



இலவச வாகனத் தரிப்பிட வசதி உண்டு





# RATHY

Jewellers Tooting

எப்பொழுதும் நியாயமான விலை

புத்தம் புது டிசைன்கள்

ரதி ஜுவல்லர்ஸ் நகைகள் அனைத்தும் 22 காரட்டில் செய்யப்பட்டது

மாபெரும் மலிவு விற்பனை

மிக விரைவில்

## TOOTING RATHY JEWELLERY

தங்க நகை அதிர்ஷ்ட லாப சீட்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

0208 682 2233

The leading Jewellery store in London with the largest selections including Diamond Jewellery, Thalli kodi and all studed jwellers.

Wembley Branch : 28, Ealing Road, Wembley. Middlesex HA0 4TL. Tel : 0208 903 3063

Tooting Branch: 209 Upper Tooting Road, Tooting SW177TG Tel : 0208 682 2233